www.padippakam.com

அக்டோபர் — 2000
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00

# புதிய கலாச்சாரம்




## கணினிக் கடவுள்

## கையேந்திகளின் தேசம்

படிப்பகம்

www.padippakam.com

# ஆணாதிக்கத்தின் தயவில் அரசின் குடும்பக் கட்டுப்பாடு

நண்பர் வாயெல்லாம் பல்லாக மிட்டாய் பாக்சை நீட்டினார் "பையன் பிறந்திருக்கான்." நண்பருக்கு ஏற்கனவே ஒரு பெண் குழந்தை உண்டு. மனைவிக்கு கையோடு கருத்தடை ஆப்பரேசன் செய்து விட்டு அடுத்த வாரம் டிஸ்சார்ஜ் செய்து விடுவார்கள் என்றார்.

"மனைவிக்கா?"

"அப்புறம்?!!" நண்பர் புருவத்தை நெறித்தார். இந்த அப்புறம் என்ற அறிவி னாவுக்கு ஆயிரம் அர்த்தங்கள் உண்டு. பின்பு வெளியே போய் வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றும் தான் ஆப்ப ரேஷன் செய்து கொள்ள முடியுமா? கருச் சிதைவு காப்பர்-டி போன்ற தொல்லை களில் இருந்து மனைவியை விடுவிக்கத் தானே இந்த அறுவை சிகிச்சை?

நண்பர் ஆணாதிக்க வாதியோ பொறுப்பற்றவரோ அல்ல. "சம்சாரத்தை நன்றாக வைத்துக் கொண்டிருக்கிறார்" என்று பெயர் வாங்கியவர்தான். யதார்த்த மான விசயங்களைப் புரிந்து கொள்ளக் கூடியவர்தான். நண்பரின் மனைவிக்கும் அதில் எந்த ஆட்சேபனையும் கிடையாது என்பதும் உண்மை. சொல்லப் போனால் இந்தக் கையோடு ஆப்பரேசன் செய்து விட்டு வீட்டுக்குப் போய்விடலாம் என்பது நண்பர் மனைவியின் கருத்தும் கூட.

"மருத்துவமனையில் தங்கியிருக் கிறோம். எப்படியிருந்தாலும் பிரசவத் திற்குப் பின்பு ஓய்வு எடுக்கத்தான் போகிறோம், ஆப்பரேசன் முடித்து விட்டால் இரண்டுக்கும் சேர்த்து ஒரே நேரத்தில் ஓய்வெடுத்துக் கொள்ளலாம். இதைவிட்டால் பின்பு ஒரு நேரம் அமை யாது..."

ஆனால் இங்கே யதார்த்தமான ஒரு உண்மை பளிச்சென்று தெரிகிறது.

பிரசவமான பெண்ணை குளிர்ந்த நீரைத் தொடவிட மாட்டார்கள். கனமான பொருட்களைத் தூக்க விடமாட்டார்கள். இன்னின்ன வேலைகள் செய்யக் கூடாது இந்த இந்த வழிகளில் உடலைப் பாது காத்துக் கொள்ள வேண்டும் என்று ஒரு பெரிய பட்டியலே உண்டு.

ஆனால் இந்த லேபராஸ்கோபி அறுவைச் சிகிச்சையை மட்டும் எப்படி சமூகம் ஏற்றுக் கொண்டது? இது ஒன்றும் ஆண்கள் செய்து கொள்ளும் வாசக்டமி போல எளிய அறுவை சிகிச்சை அல்ல. பல நாட்கள் ஓய்வெடுக்க வேண்டிய, தொடர்ந்து பல நாட்களுக்குப் பின் விளை வுகள் இருக்கக் கூடிய ஒரு பெரிய அறுவை சிகிச்சை.

கொஞ்சம் ஊன்றிப் பார்த்தால் இது அப்படியொன்றும் தன்னிச்சையாக, வற்பு றுத்தலின்றி பெண்களே விரும்பி எடுக்கும் முடிவு அல்ல என்பது தெளி வாகத் தெரியும்.

முதலாவதாக, அரசையும் அதன் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுப் பிரச்சா ரத்தையும் எடுத்துக் கொள்வோம். அரசு இதற்கு மூன்று வழிகளைப் பின்பற்றுகி றது. ஒன்று அறுவை சிகிச்சை; இரண்டா வது காப்பர் - டி; மூன்றாவது கருத்தடை மாத்திரைகள். வாசக்டமி செய்து கொள்ளும் மிக அற்பமான சதவீதமான ஆண்களைத் தவிர்த்துப் பார்த்தால் இவை மூன்றுமே பெண்களையே மையமாகக் கொண்டுள்ளது தெரியும்.

ஆரம்பத்தில் ஆண் பெண் இரு பாலா ரையும் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளும்படி வற்புறுத்தி வந்த அரசு, தற்போது இப்பிரச்சாரம் பெரும் பாலும் பெண்களையே மையமாகக் கொண்டுள்ளதாகச் சுருக்கிவிட்டது.

இந்த அறுவை சிகிச்சையோ மற்ற முறைகளோ பின் விளைவுகளற்றவை, எளிமையானவை என்று சொல்லப்பட முடியாதவை. லேபராஸ்கோபி சிகிச்சை செய்து கொண்ட பல பெண்கள் தொடர்ச் சியாக முதுகு வலியால் அவதிப்படுவதும் வேறு பல கோளாறுகளுக்கு ஆளாவதும் சாதாரணமான ஒன்று. "ஆப்பரேசன் செய்ததிலிருந்து முதுகுவலி" என்பது எல்லாக் குடும்பங்களிலும் சாதாரணமாகி விட்ட ஒரு பேச்சு.



காப்பர் - டி ரத்தப் போக்குக்குக் காரண மாகிறது. அது உடலுக்கு ஒத்துக் கொள்ளாத பெண்கள் சித்திரவதை அனுப விக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விசயம்தான். வழக்கமாகவே அலோபதி மாத்திரைகள் ஏற்படுத்தும் பின் விளைவுகளைப் பற்றிச் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. அதிலும் இந்தக் கருச்சிதைவு அல்லது கர்ப்பத் தடை மாத்திரைகள் முதலிடத்தில் வந்து நிற்கக் கூடியவை.

குடும்ப கவுரவத்தைக் காப்பாற்ற அல்லது குடும்பக் கட்டுப்பாட்டைச் செயல்படுத்த மாத்திரை, அபார்ஷன் போன்றவற்றால் உயிர்விட்ட பெண்களின் தொகை கார்கில் போரில் ஏற்பட்ட உயிரிழப்பை விட பல நூறு மடங்கு அதிகமிருக்கும்.

பெண்களுக்கு வேறு வழி இல்லையா? இதில் சமூகத்தின் பங்கு என்ன?

குறிப்பிட்ட நாட்களில் உடலுறவைத் தவிர்ப்பதன் மூலமும், ஆணுறை அணிந்து கொள்ளத் தூண்டுவதன் மூலமும் கர்ப்பத்தைத் தவிர்க்கலாம். இவை சுலபமாக கடைப்பிடிக்கக் கூடிய முறைகள்தான். ஆனால் கல்லூரிப் படிப்பை முடித்த பெண்களுக்குக் கூட இதைப் பற்றிய புரிதல் எந்த அளவிற்கு உள்ளது என்பது கேள்விக்குறிதான். பாலு ணர்வைப் பற்றிய ரகசியமான கிளு கிளுப்பு அல்லது பீதி இதை மட்டுமே சமூகம் பெண்களுக்குச் சொல்லித் தருகி றது.

ஒரு வேளை தெரிந்தாலும் கணவ னிடம் இது குறித்துப் பேசும் உரிமை பெண்களுக்கு உள்ளதா என்பது மிக முக்கியமான ஒன்று. சேலை, நகைக்காக பெண்கள் சண்டை போடுவதையும் உண்ணாவிரதம் இருப்பதையும் ஏற்றுக் கொள்ளும் சமூகம் விலக்கப்பட்ட கனி யான இந்த விசயத்தில் பெண் தன் கருத்தைச் சொல்ல முனைந்தால் தன் உக்கிர முகத்தைக் காட்டும். பாலியல் சம்பந்தமாகத் தனக்கு ஏதாவது தெரியும் என்று மனைவி காட்டிக் கொள்ள

தொடர்ச்சி 27-ம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 18
• குரல்: 5
• அக்டோபர் - 2000

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

# கணினிக் கடவுள் கையேந்திகளின் தேசம்

மீண்டும் வரலாறு திரும்புகிறது - உள்ளும் புறமும் புரட்டிப் போட்டது போன்ற ஒரே ஒரு மாறுதலுடன்! அன்றைய மன்னர்களின் தரிசனத்துக்காக வணிகச் சாலைகளில் காத்துக் கிடந்தார்கள், ஆங்கிலேய - கிழக்கிந்தியக் கம்பெனிக்காரர்கள். அனுமதி கிடைத்ததும் அரசவைக்குப் போய் தலைதாழ்த்தி, வர்த்தக உரிமைகோரி வேண்டி நின்றார்கள். இன்றைய ஆட்சியாளர்கள் அமெரிக்காவின் மென்பொருள் நிறுவனமான "மைக்ரோசாப்ட்" அதிபர் பில்கேட்சின் தரிசனத்திற்காக புதுடில்லி ஐந்து நட்சத்திர விடுதியின் வாசலில் காத்துக் கிடந்தனர். சில மணித்துளி சந்திப்பிற்கு அனுமதி கிடைத்தது. பில்கேட்சின் காலில் விழாத குறையாக "எங்கள் மாநிலத்திற்கு வந்து தொழில் தொடங்குங்கள்" என்று கெஞ்சிக் கூத்தாடினார்கள், 10 மாநில முதல்வர்களும், அமைச்சர்களும். அன்றைய தரிசனத்தின் விளைவு நாடு காலனியானது; இன்றைய தரிசனத்தின் போக்கு நாடு மீண்டும் காலனியாவதையே குறிக்கிறது.

கணினிகளின் இயக்குமுறை மென்பொருள் தயாரிக்கும் நிறுவனம் "மைக்ரோசாப்ட்" கடந்த பத்தாண்டுகளில் பல்வேறு தில்லுமுல்லுகள், தந்திரங்கள், முறைகேடுகள் செய்து உலகிலேயே மிகப்பெரிய மென்பொருள் ஏகபோக நிறுவனமாக வளர்ந்து விட்டது. அமெரிக்காவிலேயே ஏகபோகத் தடுப்பு விதிமுறைகளை மீறியதாக்க் குற்றஞ்சாட்டப்பட்டு, நிரூபிக்கப்பட்ட, கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட நிறுவனம்தான் இந்த "மைக்ரோசாப்ட்" இந்தியாவின் ஏகபோகத் தடுப்புச் சட்டம், பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற பெயரால் பல்பிடுங்கப்பட்ட நிலையில், இந்த நாட்டின் மென்பொருள் வாணிபத்தில் தனது ஏகபோக ஆதிக்கத்தை நிறுவி வருகிறது. இதற்காகத் தனது தரகர்களை நியமிக்கும் நோக்கத்தோடு இரண்டாம் முறையாக வந்தார் "மைக்ரோசாப்ட்" அதிபர் பில் கேட்ஸ். "மைக்ரோசாப்ட்.நெட்" என்னும் இணையத்துக்கான மென்பொருள் உருவாக்க வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது அந்தக் கம்பெனி. அதற்காக மலிவான இந்தியப் பொறியியலாளர்களின் உழைப்பைத் தேடித்தரும் "இன்ஃபோசிஸ்" என்ற இந்தியத் தரகுக் கம்பெனியுடன் ஒரு ஒப்பந்தம் போடவே பில் கேட்ஸ் வந்தார்.

இந்திய மாநிலங்கள் ஒவ்வொன்றும் பல ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஆண்டு வரவு செலவு திட்டம் போடுகின்றன. ஆனால் பில்கேட்சோ கேவலம் ஒரு 225 கோடி ரூபாய்க்கு முதலீடு போடப்போவதாக அறிவித்தார். கிராமப்புறத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 15 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்யாமல் வேறு திட்டங்களுக்குத் திருப்பி விடப்படுகின்றது. அல்லது திருப்பித் தரப்படுகிறது. பில்கேட்சோ ஐந்தாண்டுகளுக்கு கிராமப்புறக் கல்விக்காக கேவலம் ஐந்து ஆண்டுகளில் ரூ. 27 கோடி, அதாவது ஆண்டுக்கு ஒரு நாலரைக் கோடி ரூபாய் உதவித் தொகை தருவதாக அறிவித்தார். அந்த எஜமானனைத் தரிசிக்கப் போன முதல்வர்களும் அமைச்சர்களும், சுருட்டி வீசப்படும் எச்சிலையைக் கவ்விக் கொள்ளப் பாயும் நாய்களைப் போல போட்டி போட்டனர்.

"ஈ - ஆட்சி நிர்வாகம்" (மின்னணுவியல் - ஆட்சி நிர்வாகம்) அதாவது அரசு நிர்வாகத்தைக் கணினி மயமாக்குவதில் தங்கள் சாதனைகளையும் திட்டங்களையும் "மைக்ரோசாப்ட்" அதிபரின் பார்வைக்குச் சமர்ப்பித்தார்கள் சில முன்னணி மாநில முதல்வர்கள். "மைக்ரோசாப்ட்" நிறுவனத்துக்காக தொழில்நுட்ப நகரம் அமைக்க 200 ஏக்கர் நிலமளிக்கவும் தயாராக உள்ளதாம் ஆந்திர அரசு. ஆனால் 'ஆந்திராவில் மின்துறை சீர்திருத்தம் எந்த நிலையில் உள்ளது?' என்று பில்கேட்சு கேட்டதும் சந்திரபாபு நாயுடுவின் முகமே இருண்டு போய்விட்டது. எங்கே கொக்கிபோட்டு பங்காளியிடம் லாபகரமான பேரம் நடத்தலாம் என்று நினைத்தாரா சர்வதேச ஏகபோக முதலாளி? இல்லை, நாலு பேரை என்ன, நானூறு பேரையாவது சுட்டுப் பொசுக்கி மின் கட்டண எதிர்ப்பாளர்களை ஒடுக்க வேண்டாமா என்று எகத்தாளத்துக்காகக் கேட்டாரா?

பில்கேட்சுகளை வரவேற்பதற்காக நமது மக்களின் இரத்தத்தில் தோய்ந்த சிவப்புக் கம்பளங்களை விரிப்போம் என்று உறுதி கூறவே சந்திரபாபுகள் அங்கே குழுமினர் போலும்! ஆனால், மந்திரிகளும் அதிகாரிகளும் அரசு அலுவலகங்கள், அரசு மாளிகைகளை விட்டு வெளியேறி, பொது நிகழ்ச்சிகள் எதிலும் கலந்து கொள்ள முடியாதவாறு முற்றுகைப் போராட்டம் நடத்துகின்றனர், மின் கட்டண உயர்வை எதிர்த்துப் போராடும் ஆந்திர மக்கள். "துரோகிகள் எப்போதும் சுதந்திரமாக நடமாட முடியாது; குண்டுதுளைக்காத கூண்டுகளில் அடைந்து கிடக்க வேண்டியதுதான்" என்றும் மக்கள் விரட்டுகிறார்கள். ●

படிப்பகம்

# பாரதி அவலம்

வெற்றியின் ரகசியமாக தமிழ்த் திரையுலகத்தினர் பய பக்தியுடன் உச்சரிக்கும் செண்டிமெண்ட் எனும் மந்திரச் சொல்லை நாராக வைத்து பாரதியின் வாழ்க்கையைத் தொடுத்திருக்கிறார் ஞான. ராஜசேகரன்.

ஏதோ ஒரு அநாதையின் மரணத்தைப் போலப் புறக்கணிக்கப்பட்ட பாரதியின் மரணம் - இந்தப் புறக்கணிப்பு தோற்றுவிக்கும் அவலம் - இந்நிலைக்கு பாரதியை ஆளாக்கிய சமூகத்தின் மீது குற்றச்சாட்டு - என்று **தெளிவான** முன்னுரையுடன் தொடங்குகிறது படம்.

முன்னுரையின் கூற்றை உறுதி செய்வதற்கு ஏற்ற முறையில் கட்டுரையின் - அதாவது திரைப்படம் எனும் கட்டுரையின் - உடல் கட்டமைக்கப்பட்டுள்ளது.

''நான் காலத்தை மீறிக் கனவு கண்டேன்; அதன் விளைவை அனுபவித்தேன். நீ அவ்வாறு சிந்திக்காதே'' என்று தந்தை தனயனுக்குக் கூறும் அறிவுரையுடன் தொடங்குகிறது படம். அறிவுரையைக் கேட்கத் தவறிய பாரதி அதன் விளைவுகளை அனுபவிக்கிறான். வறுமை, குடும்பத்தில் சச்சரவுகள், சாதிப் புறக்கணிப்பு, போலீசு தொல்லை... என்று துன்பங்கள் தொடர்கின்றன.

முறுக்கிய மீசையும் நேர்கொண்ட பார்வையும் கொண்ட பாரதி, துயரத்திற்கும், கோபத்திற்கும், சமரசத்திற்கும் ஆட்படுகின்ற சாதாரண மனிதனாகவும் இருந்தான் என்ற சித்தரிப்பு, பாத்திரத்தின் மீது ஒரு வகையான நம்பகத் தன்மையையும் அதை விஞ்சுகின்ற அளவு அனுதாபத்தையும் ரசிகனிடம் தோற்றுவிக்கின்றது. இதில் ஷிண்டேயின் நடிப்பு கூடுதல் பங்காற்றுகிறது.

இறுதிக் காட்சியில் மீண்டும் இடுகாடு; பாரதியை வேட்டையாடிய சமூகத்தின் மீது மீண்டும் சாடல், ''உங்கள் மத்தியிலும் பாரதிகள் இருக்கக் கூடும்; அவர்களைப் பின்பற்றாவிட்டாலும் அங்கீகரியுங்கள்'' என்ற கோரிக்கையுடன் படம் முடிகிறது.

●●●

வரலாற்றில் பாரதி இடம்பெறக் காரணம் அவனது கவிதை. கவிதைக்கும் கவிஞனுக்கும், கவிதைக்கும் சமூகத்திற்கும், கவிஞனுக்கும் சமூகத்திற்கும் இடையிலான உறவை ஆய்வு செய்வதன் ஊடாக அவனது வாழ்க்கை கூறப்பட்டிருக்க வேண்டும். இவற்றில் கவிஞனின் வாழ்வுக்கும் அவனது படைப்பு ஆளுமைக்கும் இடையிலான உறவை பரிசீலிப்பதுதான் மிக முக்கியமானது.

ஆனால் காலவரிசைப்படி பாரதியின் வாழ்வில் நடைபெற்ற சில சம்பவங்களின் ஊடாக அவன் வாழ்ந்த காலத்தைச் சித்தரிக்கிறது திரைப்படம். இதன் விளைவாக பாரதி அதிமனிதன் ஆகிறான். சமூகமோ வில்லனாகிறது.

பாரதியின் குழந்தைப் பருவ நடவடிக்கைகளாகட்டும், பூணூல் அறுத்த பாரதியை அவனுடைய அக்காள் கணவரும், மன்னரும் ஞானியென்று வியப்பதாகட்டும், நண்பன் ஆர்யாவின் புகழுரை ஆகட்டும் அனைத்தும் பாரதியை ஒரு 'அவதார புருசனாக' உயர்த்துகின்றன. படத்தைப் பொறுத்தவரை பாரதி தன் கவிதை மூலம் 'மகாகவி' ஆகவில்லை; மகாகவியாகவே பிறக்கிறான்.




''எப்பேர்ப்பட்ட மனுசனுக்கு இந்த நிலைமை பாரு'' என்று படம் முடிந்தவுடன் பேசிக் கொண்டார்கள் இரண்டு மாமிகள். ஒரு மாமனிதன் சராசரிகளால் வேட்டையாடப்படும் போது பிறக்கும் அவலம்தான் படம் உருவாக்கும் உணர்ச்சி.

இதனால் தேசத்தின் அவலநிலையைக் காட்டிலும் தேசிய கவியின் அவலநிலை பெரிதாகி விடுகிறது. தீண்டாமை எனும் சமூகக் கொடுமையைக் காட்டிலும், அதை எதிர்க்கும் கதாநாயகனின் மீதான கொடுமை பெரிதாகி விடுகிறது.

பாரதியின் அவலம் என்று ஒன்று உண்டா? உண்டென்றால் அதற்கு அவனை ஆளாக்கியது அவன் வாழ்ந்த சமூகமா? ''சாதியை எதிர்த்தான், பெண் விடுதலையைப் பாடினான்; தேச விடுதலையைப் பாடினான் - கம்பீரமான கவிஞனாக இறந்தான்'' என்று சொல்ல முடியாமற் போன காரணமென்ன?

அவன் வாழ்ந்த காலத்திலேயே அவனுக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதுதான் காரணமா? அல்லது சாவுக்குக் கூட ஆயிரக் கணக்கானோர் திரளவில்லை என்பதா? அல்லது சொந்த சாதிப் பார்ப்பனர்களால் துன்புறுத்தப்பட்டான் என்பதா - இவையெல்லாம் அவலத்தின் காரணங்களாகிவிடுமா?

கொண்ட கொள்கைக்காக நஞ்சருந்திச் செத்தான் சாக்ரடீஸ்; தூக்கில் தொங்கினான் பகத்சிங்; போர் வீரர்களுடன் வீரனாக செத்துக் கிடந்தான் திப்பு சுல்தான். கண்ட துண்டமாக வெட்டிக் கொல்லப்பட்டான் நக்சல்பாரிக் கவிஞன் சரோஜ் தத்தா. இவர்களது மரணம் எதுவும் அவலமாகக் கருதப்படவில்லை; சித்தரிக்கப்படுவதுமில்லை.

வாழும் காலத்திலேயே மக்கள் அங்கீகாரம் கிடைத்ததா, சாவுக்கு எத்தனை பேர் வந்தார்கள் என்பதெல்லாம் அவலத்தை அளக்கும் அளவு கோல்களல்ல; 'காலத்தை மீறி' கனவு காணும் ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் காலத்து மக்களால் புறக்கணிக்கப்படுவதையும், ஏளனம் செய்யப்படுவதையும் எதிர்பார்த்துத்தான் அவ்வாறு கனவு காண்கிறான்.



படிப்பகம்

www.padippakam.com

பாரதியிடம் நாம் காணுகின்ற பிரச்சினை அவனுக்கும் சமூகத்திற்கும் ஏற்பட்ட முரண்பாட்டினால் விளைந்ததல்ல; தன்னுடைய கவிதையின் உணர்வில் அவனால் ஏன் வாழ முடியவில்லை என்பதுதான் விடை தேட வேண்டிய கேள்வி. கவிதையின் கனவுலகில் வாள் சுற்றிய பாரதி அரசியலின் நனவுலகில் சரணடைகிறான். அவன் எழுதிய கவிதை வரிகளால் மற்றவர்கள் எழுச்சி பெற்ற தருணத்தில் அவன் எதிரிக்கு மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தான்.

> வாழும் காலத்திலேயே மக்கள் அங்கீகாரம் கிடைத்ததா, சாவுக்கு எத்தனை பேர் வந்தார்கள் என்பதெல்லாம் அவலத்தை அளக்கும் அளவுகோல்களல்ல; 'காலத்தை மீறி'க் கனவு காணும் ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் காலத்து மக்களால் புறக்கணிக்கப்படுவதையும், ஏளனம் செய்யப்படுவதையும் எதிர்பார்த்துத்தான் அவ்வாறு கனவு காண்கிறான்.

இந்தச் சுயமுரண்பாட்டையே அவலமாகவும், அந்த அவலத்திற்குக் காரணம் அவனைப் புறக்கணித்த சமூகம் என்றும் வியாக்கியானம் செய்கிறார்கள் பாரதி அபிமானிகள். திரைப்படமும் அதைத்தான் செய்கிறது.

''பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே, வெள்ளைப் பறங்கியைத் துரை என்ற காலமும் போச்சே'' என்று பாரதி பாடியவுடனே தருப்பைப் புல்லை பார்ப்பனர்களும், துப்பாக்கியை வெள்ளைக்காரனும் கீழே போட்டுவிட வேண்டுமோ?

அல்லது திரைப்படத்தின் முடிவுரை கோருவது போல கவிஞனைப் ''பின்பற்ற முடியாவிட்டாலும் அங்கீகரிக்க'' வேண்டுமோ? இல்லையென்றால் கவிஞர்கள் 'அவலநிலைக்கு' ஆளாகி விடுவார்களோ?

பாரதியின் முரண்பாட்டை அனுதாபத்துடன் பார்க்க வேண்டும் என்று கூறும் கவிஞர்களும் அறிஞர்களும் உண்மையில் தங்களுடைய இரட்டை நிலையை அனுதாபத்துடன் பார்க்க வேண்டும் என்ற கோரிக்கையைத்தான் இப்படி நாசூக்காக வெளிப்படுத்துகிறார்கள்.

அவலச்சுவை ததும்பும் இந்த 'மனநிலையை' நீங்கள் மேலும் சீண்டினால் அதிகாரத் தொனியில் கவிஞர்களின் ''பகுத்தறிவு'' பேசத் தொடங்கும்.

''கவித்துவத்தை மட்டும் வைத்துத்தான் கவிஞனை மதிப்பிட வேண்டும். 'உன் கவியுணர்வுக்கு நீயே விசுவாசமாக இல்லாதது ஏன்' என்றெல்லாம் கேட்கக் கூடாது. படைப்பு வேறு - படைப்பாளி வேறு'' என்று அகந்தையுடன் சீறுவார்கள்.

கவித்துவ மனநிலையில், கவிதையில் வெளிப்படும் கவிஞனின் அகந்தைக்கும், கவிதை முடிந்தபின் யதார்த்த வாழ்க்கை குறித்து எழும் கேள்விகளுக்குப் பதிலிறுக்கும்போது அவனிடம் வெளிப்படும் அகந்தைக்கும் பாரிய வேறுபாடு உள்ளது.

''வேடிக்கை மனிதரைப் போல் வீழ்வேனென்று நினைத்தாயோ'' என்ற கவிதை வரியில் ''விழமாட்டோம்'' என்று கூறும் ஒரு வர்க்கம்/சமூகக் குழுவின் மனவுணர்வு கவிஞனின் வழியாகப் பேசுகிறது.

''ஏன் விழுந்துவிட்டாய்'' என்று பிறகு கவிஞனை நோக்கி கேள்வி கேட்கப்படும்போது அவனிடமிருந்து வரும் பதில் அவன் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் உணர்வு நிலையிலிருந்து வருவதில்லை. அவனது தனிப்பட்ட உணர்விலிருந்து வருகிறது. தனிநபரின் அகந்தையாக வருகிறது. ''படைப்புக்கு படைப்பாளி விசுவாசமாக இருக்கத் தேவையில்லை'' என்று பதில் வருகிறது.

உணர்ச்சி வயப்பட்ட நிலையில் விசுவாமித்திரன் உருவாக்கிய கள்ளக் குழந்தையாகி விடுகிறது கவிதை. அதை வாசகர்களாகிய மேனகைகள்தான் தூக்கித் திரிய வேண்டும்.

''வெட்டி வீழ்த்த வா'' என்ற கவிஞனின் வரிகளை நம்பி (அதாவது அந்த மன உணர்வுக்கு ஆட்பட்டு) நீங்கள் கத்தியைத் தீட்டிக் கொண்டிருக்கும் தருணத்தில், கவிஞர் எதிரிக்கு முதுகு சொறிந்து கொண்டிருக்கலாம். கனவில் எழும்பும் முனகல் போல அவர் வெளிப்படுத்திய கவிதையை, அழகிய கண்கொண்டு ரசிப்பதுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். அறிவியல் கண்கொண்டு அதற்கு கவிஞனிடம் விளக்கம் கோரக் கூடாது.

இது சாத்தியமா? அப்படி என்னதான் சிறப்புத் தகுதி கவிஞனுக்கு? காட்சி அனுபவத்தையும் மனவுணர்வையும் வார்த்தைகளில் சிறைப்பிடிக்கும் நுட்பம்தான் கவிஞனின் சிறப்புத் தகுதியா? எனில் அத்தகைய கவிஞனை ''வார்த்தை வித்தகர்'' என்று அழைக்கலாமே!

தனது கவித்திறனும் படைப்பின் அழகியலும் போற்றப்படும் இடத்தில் தனது கவிதையுடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் கவிஞன்,

வேறு வார்த்தைகளில் சொன்னால் தன் பலத்துக்காக மீசையை முறுக்கும் கவிஞன், பலவீனம் குறித்துப் பேசும் போது 'விட்டு விடுதலையாகி நிற்பது' ஏன்?

தனது கவியுணர்வில் ஒரு கவிஞன் தொடர்ந்து வாழ முடியாமல் போவதும், தான் கூறிக்கொண்ட கொள்கை வழியில் ஒரு மனிதன் செயல்பட முடியாமல் போவதும் பலருக்கும் ஏற்படும் அனுபவம்தான். இந்த முரண்நிலை குறித்த கேள்விக்குச் சாமானியர்கள் கூட சமூகத்திற்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அறிஞர்களும், கவிஞர்களும் சமூகத்திற்குப் பதில் சொல்வதுடன் தமக்குத் தாமே விடைதேடும் சுயபரிசீலனையிலும் ஈடுபட வேண்டும்.

தம்மை அதிமனிதர்களாகக் கருதிக் கொள்ளும் கவிஞர்கள் இதற்கு விடை சொல்லாமல் மவுனம் சாதித்தாலோ அவர்களது 'ஆளுமை' உடைந்து நொறுங்கி விடும். எனவே ''சமூகம்தான் தனது வீழ்ச்சிக்குக் காரணம்'' என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

> உண்மையான எதிரியாகிய வெள்ளையனிடம் சரணடைந்த கோழைத்தனத்தை மறைத்து, ''காலா... உனைக் காலால் உதைப்பேன் வாடா'' என்று கற்பனை எதிரியை எட்டி உதைக்கும் இறுதிக் காட்சி பாரதியின் அவலமாக ரசிகர்களால் புரிந்து கொள்ளப்பட்டாலும், சினிமாத்தனமான மோசடியின் சிகரமாக அது அமைகிறது.

ஞான. ராஜசேகரனும் இதைத்தான் செய்கிறார். பாரதியின் சுய முரண்பாடுகள் குறித்து இயக்குநரின் மனதில் ஐயமிருந்திருப்பினும், திரைப்ப


படிப்பகம்

www.padippakam.com

டத்தில் அவற்றைச் சித்தரிக்கும் துணிவு அவருக்கில்லை. எனவே, ஆளும் வர்க்கங்களாலும், பாரதி அபிமானிகளாலும் ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருக்கும் பாரதியின் தோற்றத்திற்கு (image) பக்கவாத்தியம் வாசிக்கிறது திரைப்படம்.

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமும் இன்றி வஞ்சனை செய்வோரென்றும், வாய்ச் சொல் வீரரென்றும் காங்கிரசு மிதவாதிகளைச் சாடிய பாரதி,

ஜாலியன் வாலாபாக் படுகொலை கண்டு நாடே கிளர்ந்தெழுந்த தருணத்தில் "அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் உச்சத்தில் கொண்ட" கோழையாக ஆனது எப்படி என்ற கேள்விக்கு விடையில்லை.

உண்மையான எதிரியாகிய வெள்ளையனிடம் சரணடைந்த கோழைத்தனத்தை மறைத்து, "காலா... உனைக் காலால் உதைப்பேன் வாடா" என்று கற்பனை எதிரியை எட்டி உதைக்கும் இறுதிக் காட்சி பாரதியின் அவலமாக ரசிகர்களால் புரிந்து கொள்ளப்பட்டாலும், சினிமாத்தனமான மோசடியின் சிகரமாக அது அமைகிறது.

**பகத்சிங் என்றொரு கவிதையை ஜாலியன் வாலாபாக் பெற்றெடுத்த தருணத்தில் பாரதியின் கவிதை மாயாவாதத்தில் மூழ்கி முத்தெடுத்துக் கொண்டிருந்தது. மாயாவாதக் கவிதைக்கும் பாரதியின் மிதவாத சமரச அரசியலுக்கும் உள்ள உறவைத் தற்செயலானது என்று யாரேனும் கூற முடியுமா?**

●●●

திரைப்படம் பாரதியை அதிமனிதனாகச் சித்தரித்த போதிலும் பாரதியின் முரண்பாடுகள் குறித்த விவாதம் இலக்கிய உலகில் ஏராளமாக நடந்துள்ளது. இருப்பினும் பண்டித நடையிலிருந்து தமிழை மீட்டதும், தேச விடுதலையைப் பாடியதும், கவிதைகளின் வீச்சும் இனம்புரியாத தடுமாற்றத்தை ஏற்படுத்தி "என்ன இருந்தாலும்..." என்று பலரை இழுக்க வைக்கிறது. "இப்படி இருந்திருக்கக் கூடாதா" என்று சிலரை ஏங்கவும் வைக்கிறது.

பார்ப்பன இந்து தேசியத்தைக் கனவு கண்ட கவிஞன் என்று பாரதியைப் பற்றி நாம் கூறினால் அது துடுக்குத்தனமான அரைவேக்காட்டுத்தனமான மதிப்பீடு என்று எரிச்சலடைவோர் உண்டு. அப்படியானால் பார்ப்பானை எதிர்த்ததும், சாதியை மறுத்ததும், பெண் விடுதலையைப் பாடியதும் இந்து தேசியவாதி செய்யக்கூடிய/பாடக்கூடிய விசயங்களா என்று மடக்குவோரும் உண்டு.

இந்து தேசியவாதிகள் எனப்படுவோர் இராம. கோபாலனைப் போலவோ, அசோக் சிங்காலைப் போலவோதான் இருக்க வேண்டும் என்று கருதுவோர் வரலாற்றையும், தனி நபரையும் மதிப்பிடத் தெரியாதவர்கள். "தவறான கட்சியில் சரியான நபரா - எப்படி?" என்று வியக்கும் தி.மு.க.வினருக்கு ஒப்பான அறிவாளிகள். ஆரிய சமாஜத்தின் பார்ப்பன எதிர்ப்பு, விவேகானந்தரின் பார்ப்பன எதிர்ப்பு, காந்தியின் அரிசன முன்னேற்றம் என்று பலவிதமான வண்ணச் சேர்க்கைகளில் அன்றைய காலகட்டத்தில் பிறந்த இந்து தேசியவாதம் பாரதி எனும் கவிஞன் மூலமும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது.

இந்து தேசியத்தைக் கனவு காணும் வாய்ப்புப் பெற்ற பார்ப்பனச் சாதியில் பிறந்த, சமஸ்கிருதக் கல்வி கற்ற பாரதி, ஆங்கிலக் கல்விக்கும் ஷெல்லி, விட்மன் போன்ற ஆங்கிலக் கவிஞர்களின் கவிதைகளுக்கும் அறிமுகமாகின்றான். காலனியாதிக்க எதிர்ப்பென்பது கருத்தளவில் மட்டுமின்றி, வெள்ளையனால் ஏமாற்றப்பட்ட தந்தையின் மரணம் எனும் சொந்த அனுபவத்தினூடாகவும், நாம் இன்னதென்று அறியாத பிற காரணிகளாலும் அவனிடம் உணர்ச்சி வேகம் பெறுகிறது.



அன்றைய பாரதி - செல்லம்மா

அவனுக்குள் இருந்த முரண்பட்ட எதிர்த்துருவங்களான பார்ப்பனியமும் ஜனநாயகக் கருத்துகளும் ஒன்றுடன் ஒன்று கணக்குத் தீர்த்துக் கொண்டிருக்க வேண்டும். மாறாக வேதமரபு, பழம் பெருமை ஆகியவற்றைச் சீர்திருத்தி ஜனநாயகப்படுத்துகின்ற சிந்தனைதான் பாரதியிடம் மேலோங்குகிறது. ஜெர்மனியின் நிலை குறித்து கம்யூனிஸ்டு கட்சி அறிக்கையில் மார்க்சும் எங்கெல்சும் குறிப்பிடுவது இங்கே ஒப்பு நோக்கத் தக்கது.

"ஜெர்மன் இலக்கிய விற்பன்னர்களது பணி, புதிய பிரெஞ்சுக் கருத்துக்களைத் தமது பண்டைய தத்துவவியல் மனச்சான்றுக்கு இசைவாய் வகுத்திடுவதில், அல்லது இன்னும் கறாராய்ச் சொல்வதெனில் தமது சொந்தத் தத்துவவியல் கண்ணோட்டத்தைத் துறந்துவிடாமல் பிரெஞ்சுக் கருத்துக்களைக் கிரகித்துக் கொள்வதில் அடங்கி விடுவதாகியது."

சிதைந்து கொண்டிருந்த பார்ப்பனப் பழமையிலிருந்து அன்று வீறு கொண்ட கவிதைகள் பிறக்க வாய்ப்பே இல்லை. கையறு நிலையையும் அவலத்தையும் பிழிந்து தருகின்ற, கவிநயமில்லாத, இசையில் சரணடைந்த பார்ப்பனியத்தின் மனவுணர்வை தியாகய்யரிடம் காணலாம்.

பாரதியின் உள்ளே நுழைந்த புதுமை, கவிதைக்கான உள்ளுணர்வைத் தோற்றுவிக்கப் போதுமானதாக இருந்திருக்கலாம். ஆனால் கவிஞனுக்குள்ளே கனவு போலப் பாய்ந்து பெருகும் கவிதையுடன் அவன் வாழ்வு முடிந்து விடுவதில்லை. கவிதை முடிந்த பின்னும் கவிஞன் இருக்கிறான். அவனுக்கு வசப்படாத, அவனுடைய விருப்பத்துக்கு எதிராக இயங்குகின்ற புற உலகை அவன் சந்தித்தாக வேண்டும். அதன்மீது அறிவு பூர்வமாகச் சிந்தித்துச் செயல்பட்டாக வேண்டும்.

ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் பாரதி வெளியிட்ட அரசியல் கருத்துக்களும், அவனது வாழ்க்கையும் பரிசீலிக்கப்பட்டால் இதனைப் புரிந்து கொள்ள இயலும்.

முற்போக்கான கவிதைகள் என்று கூறப்படும் கவிதைகளைப் பாடிய போதும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இந்து தேசியம்தான் அவனது அரசியலாக இருந்தது. மிதவாதத்தை எதிர்த்த போதும் திலகருடன் அரசியல் களத்தில் பாரதி இறங்க

www.padippakam.com

வில்லை. வங்காளத்துத் தீவிரவாதிகளின் பாதையையும் பாரதி நிராகரித்தான். பிறகு மிதவாதத்திற்கு மாறினான். இறுதியில் காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தைக் கூடக் கண்டிக்குமளவுக்கும், பூரண விடுதலை கோரவில்லை என்று கூறும் அளவுக்கும் கீழிறங்கினான்.

தாழ்த்தப்பட்டவனுக்குப் பூணூல் அணிவித்தார்; முஸ்லீம் கடையில் டீ குடித்தார்; சுருட்டு பிடித்தார்; மீசை வைத்தார்; பூணூலை அறுத்தெறிந்தார்; அல்லாவுக்குப் பாட்டு எழுதினார்... என்று பாரதியின் மேன்மைகளைப் பட்டியலிட்டு பாரதியின் வாழ்வும் அவனது படைப்பு ஆளுமையும் பிசிறின்றி ஒன்றிணைந்திருந்தன என்று நிரூபிக்க முயல்வது பாமரத்தனம் அல்லது ஏமாற்று வித்தை.

கனகலிங்கத்துக்குப் பூணூல் மாட்டிய பாரதி வருண தருமத்தை மீண்டும் நிலைநாட்டுவதையே தனது கொள்கையாகக் கொண்ட வ.வே.சு. ஐயருடன் நண்பனாக இருந்தார். காந்திக்காகத் தனது கூட்டத்தை ஒரு நாள் கூடத் தள்ளி வைக்கச் சம்மதிக்காத 'கம்பீரமான' பாரதி மகளின் திருமணத்திற்காகப் பூணூலை மாட்டிக் கொண்டார். சூத்திரனுக்கு ஒரு நீதி தண்டச் சோறுண்ணும் பார்ப்பனனுக்கொரு நீதி என்றெழுதிய பாரதி, ''என்னைப் போன்ற (பார்ப்பன) குலத்தில் பிறந்த மனிதனுக்கு சிறைவாசம் எத்தனை கடினமானது'' என்று பிரிட்டிஷ் ஆளுனருக்கு எழுதிக் கொடுத்த மன்னிப்புக் கடிதத்தில் குறிப்பிடுகிறார். ''இனி அரசியலில் ஈடுபட மாட்டேன்'' என்று அரசுக்கு மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்து பிணையில் வெளிவந்த பாரதி எட்டையபுரம் போய் ''என்னைப் போல் கவிஞனில்லை'' என்று மீசையை முறுக்குகிறார். மன்னனுக்குச் சீட்டுக்கவி அனுப்பிப் பணம் கேட்கிறார்.

இவற்றையெல்லாம் எந்தக் கணக்கில் சேர்ப்பது? எந்தத் தராசைக் கொண்டு எடை போடுவது? வியந்து கூறத்தக்க சில சம்பவங்களையும் முகம் சுளிக்கத்தக்க சில சம்பவங்களையும் ஒப்பு நோக்கிப் பார்ப்பதைவிட, இவையனைத்தையும் ஒருங்கே கொண்டிருந்த ஒரு மனிதனின் ஆளுமையை இயக்கிச் சென்றது எது என்ற கேள்விக்கும், அவனது ஆளுமை முன்னோக்கிச் சென்றதா வீழ்ந்து கொண்டிருந்ததா என்ற கேள்விக்கும்தான் நமக்கு விடை வேண்டும்.

முரண்பட்ட குணாதிசயங்களைக் கொண்டிருந்த இந்தக் கவிஞன் தனது சுய முரண்பாட்டைத் தானே எதிர்கொள்ளும் மனநிலையில் எத்தகைய கவிதையைப் படைத்தான்?

பாரதிக்கு வெளியே ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் மீண்டும் கிளர்ந்தெழத் தொடங்கிய தருணத்தில் பாரதி மிதவாதத்தைத் தன் அரசியலாகத் தேர்ந்தெடுத்தான். தனது நலனுக்கு உகந்த பாதையே இத்தேசத்தின் நலனுக்கு உகந்த பாதை என்று கூறுமளவு தாழ்ந்தான். மிதவாதிகளை 'நடிப்பு சுதேசிகள்' என்றும் 'பயக் கட்சி' என்றும் 'விண்ணப்பக் கட்சி' என்றும் சாடிய பாரதி பஞ்சதந்திரக் கதையைக் காட்டித் தன் நிலையை நியாயப்படுத்தினான்.

பகத்சிங் என்றொரு கவிதையை ஜாலியன் வாலாபாக் பெற்றெடுத்த தருணத்தில் பாரதியின் கவிதை மாயாவாதத்தில் மூழ்கி முத்தெடுத்துக் கொண்டிருந்தது. மாயாவாதக் கவிதைக்கும் பாரதியின் மிதவாத சமரச அரசியலுக்கும் உள்ள உறவைத் தற்செயலானது என்று யாரேனும் கூற முடியுமா?

பாரதியுடைய கவிதையின் சீற்றத்தையும் அவனது தடுமாற்றத்தையும் அனுதாபத்துடன் பரிசீலிப்பதாயின், காந்தியின் அரசியலையும் அனுதாபத்துடன் பரிசீலிக்க வேண்டியிருக்கும். உணர்ச்சித் தளத்தில் இயங்கும் கவிதை மேக மூட்டம் போன்றது. எத்தனை ஊடுருவிப் பார்த்தாலும் ஒரு வரம்பிற்கு மேல் பார்வை செல்லாது.

இருப்பினும் நமக்கு உதவும்படியாக, பாரதி விட்ட இடத்திலிருந்து காந்தி தொடங்குகிறார். பாரதியின் சக்தி காந்தியின் ராமனாகவும், கனகலிங்கம் அரசனாகவும், அல்லா பாட்டு 'ஈசுவர அல்லா தேரே நாம்' ஆகவும், பாரதியின் போல்ஷ்விக் எதிர்ப்பு - சோசலிச ஆதரவு காந்தியின் தர்மகர்த்தா முறையாகவும் மறுபிறப்பெடுக்கின்றன. கவிஞனின் 'அவலம்' அரசியலுக்கு மொழி பெயர்க்கப்படும்போது அது காந்தியின் தந்திரமாகி விடுகிறது. மகா கவியைத் தொடர்ந்து ஒரு மகாத்மா வருகிறார்.

தங்கள் அவலத்தை யதார்த்தமாக எடுத்துக் கொண்ட சாதாரண ஆத்துமாக்களோ மகாகவியின் அவலத்திற்கும் மகாத்துமாவின் அவலத்திற்கும் கண்ணீர் சிந்துகிறார்கள்.

''என்னதான் இருந்தாலும் பாரதியின் ஆளுமை இதுவல்ல'' என்று கூறுவோர் முன், மார்க்ஸின் மேற்கோள் ஒன்றை மீண்டும் சமர்ப்பிப்போம்:

''கவிஞர் பைரனுக்கும் ஷெல்லிக்கும் இடையிலான வேறுபாடு இதுதான்; அவர்கள் இருவரையும் புரிந்து கொண்டவர்களும் நேசிப்பவர்களும் இப்படித்தான் கருதுகிறார்கள். 36 வயதில் பைரன் இறந்தது நல்லது - அவன் மேலும் வாழ்ந்திருந்தால் பிற்போக்கான முதலாளியவாதியாக மாறியிருப்பான். மாறாக, 29 வயதில் ஷெல்லி இறந்தது வருந்தத் தக்கது; ஏனென்றால் அவன் வாழ்க்கை முழுதும் புரட்சியாளனாக இருந்தான். மேலும் வாழ்ந்திருந்தால் சோசலிசத்தின் முன்னோடியாக விளங்கியிருப்பான்''

**— மார்க்ஸ் அடிக்கடிக் கூறுவார் என்று அவரது மகள் எலியனார் மார்க்ஸ் கூறியது.**

நாம் இவ்வாறு கூறலாம். பாரதி மேலும் 30, 40 ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் பகத்சிங், பொதுவுடைமை இயக்கம், ஹெட்கேவார், பெரியார், அம்பேத்கர் ஆகிய அனைவரையும் எதிர் கொண்டிருப்பான்.

ஆனால் யாருடன் கைகோர்த்திருப்பான் என்பதைப் பாரதி அபிமானிகள் கூறட்டும்!

— மருதையன்

## வலியது

*ஊர்ப்புறத்து அய்யனாரின்*
*மூக்கு உடைந்திருந்தது.*

*ஓடும் குதிரையின்*
*காலொன்று காணோம்!*

*சிராய்ப்புகளாய்*
*வண்ணம் உதிர்த்தது உரு*

*கனத்த வாள்*
*துருப்பிடித்திருந்தது.*

*கறிச்சோறும் பலி ரத்தமும்*
*படைத்த பீடம்*

*பரிதாபமாய் மலம் சுமக்க*

*துருத்திய நாக்கும்*
*அகண்ட விழிகளுமாய்*

*வெளியெங்கும்*
*வெறித்திருக்கும் அவர் பார்வை.*

*அருகே அரசமர நிழலில் -*
*கருத்த உடலில் பூணூலோடு*

*அருகம்புல் சூடி*
*எலிமேலமர்ந்த பிள்ளையார்*

*சாந்தமாய் அருள் பாலித்து*
*உண்டியல் நிரப்புகிறார் —*

*ஒரு கோயிலெழ.*

— தீபன்


படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை:

# மதமாற்றம்

● துரை. சண்முகம்

**வே**ப்ப மரத்துக்கடியில் உட்கார்ந்து வெற்றிலைப் பாக்கை மென்றபடி மண்ணாங்கட்டி தானாகவே குபீர் குபீர் என்று எச்சில் தெறிக்க சிரிப்பதைப் பார்த்தால், யாருக்கும் சிரிப்பு வரும் சிரித்துக் கொண்டே அவன் தெருவைப் பார்த்து கையை நீட்டுவதைப் பார்த்தால் ஒரு தத்துவ ஞானிக்குரிய தோரணை இருக்கும்.

பல காலமாய் எண்ணெய்ப் பசை காணாமல் சடை சடையாய்த் தொங்கும் முடியை. ஒரு முறுக்கு முறுக்கி அவன் வளையமாக சுற்றுவதைப் பார்த்தால் கூழைப் பாம்பைச் சுருட்டி தலையில் வைத்தது மாதிரி இருக்கும். சலூன் கடைக் காரர்வலியக்கூப்பிட்டு, "மண்ணாங்கட்டி முடிய வெட்டிட்டுப் போடா" என்றால் "போ! போ கலியபெருமா கோயிலுக்கு வச்சிருக்கேன்" என்று இடத்தைக் காலி செய்து விடுவான்.

தனக்குத்தானே அவன் குபீர் குபீர் என்று சிரித்துக் கொள்வதையும், ஈசான மூலையைப் பார்த்து பற்களை நறநற வென்று கடித்துக் கொண்டு முறைப்பதையும் பார்த்து பைத்தியக்காரன் என்று சொன்னாலும், அவன் இல்லாவிட்டால் தெருவுக்கே கை முறிந்தது போல இருக்கும்.

மாங்குமாங்கென்று விறகைப் பிளந்து போட்டுவிட்டு, கூலி கொடுத்தால், "தோ! சோறு குடு, இது வேணாம்" என்பான். இந்த மாதிரி இளிச்சவாயனைத் தெருவே தேடுவதில் வியப்பென்ன?

●●●

**மா**ரிமுத்து இருப்புக் கொள்ளாமல் அடிக்கடி வேப்ப மரத்துக்கும், சத்திரத்துக் கொளத்துக்கும் அலைந்து கொண்டி ருந்தார், "ரெண்டு நாளா மாடு அடிவயத்த இழுத்துக்கிட்டு கத்துது, காளைக்குப் போட அனுப்பலாம்னா இந்த மண்ணாங் கட்டிப்பய எங்கப்போயி தொலைஞ்சான்."

"ஒரு வாரமா ரூம்ல எலி செத்த நாத்தம் வருது, உத்தரத்துல ஏறி பாக்கச் சொல்லலாம்னு நானும் அவனதான் தேடறேன்" செட்டியார் வீட்டம்மாவும் சேர்ந்து கொண்டாள்.

முந்தா நாள் கூட எருக்குழி அள்ற வேல செஞ்சான். டீ குடிக்க காசு கொடுத்தா வேண்டாமுன்னுட்டு சோறு கேட்டான். எடுத்துட்டு வர கொஞ்சம் நேரமாயிடுச்சி. ஆளக் காணோம்; செம்மறியாடு ஒதுங் குன இடம் மாதிரி அந்த சீண்ட நாத்தந்தான் இருந்துச்சு"

"கிருஷ்ணசாமி அவன் முன்ன மாதிரி இல்ல, ஒரு நா அவனான்ட ஏண்டா இப்படி சோறு சோறுன்னு வர்றியே, வேலைக்கு கூப்புட்டா அவசரத்துக்கு உதவ மாட்டேன்ற, இங்க அவசரத்துக்கு இல்லாம பட்டீசுவரத்துல போய் உட்கார்ந்து பிச்ச எடுக்குறேன்னத்துக்கு, "நீயுந்தான் கோயில்ல பிச்ச எடுக்கு றே"ன்னு துடுக்குன்னு கேட்டுட்டன். நேக்கு என்னமோ அவன் பைத்தியம் இல்லேன்னு தோண்றது" குருக்கள் அய்யர் சொல்ல, "எப்படியோ போறாங்க, ஒருவேளை சோறு குடுத்தா காலைலேந்து சாயங்காலம் வரைக்கும் வேலி கட்ட அவன விட்டா யார் வருவா? எங்க போய் தொலஞ்சானோ!" என்றார் மற்றொருவர்.

"மகா மக குளத்துக்கு ஜெயலலிதா வர்றான்னு பெரிசா விழாக் கோலமோ இல்லியோ போயிருப்பன் பைத்தியம். எங்க போயிடப் போறன், அவன் பொழப்பு நம்ப கால சுத்திதான், தானா வருவான் விடுங்கோ."

●●●

**"ஏ**ட்டய்யா"

அங்க பாருங்க சோழன் புக்கிங் கவுண்ட்டர் அடியில ஒருத்தன் ஒளிஞ்சி கிட்டு இருக்குற மாதிரி தெரியுது"

"ஆமான்யா, தாடியையும், மூஞ்சி யையும் பாத்தா பிச்சைக்காரன் மாதிரில்ல இருக்கு."

"நீங்க வேற சார், இப்பெல்லாம் தீவிர வாதிங்க இந்த மாதிரி வேசம் போட்டுட்டு திரிவானுவ. மகா மகத்துக்கு சி.எம். வர்றாங்கல்ல உஷாரா இருக்கணும் சார். அந்த பொம்பளைக்கு வேற தீவிரவா திங்க ஆபத்து இருக்குன்னு க்யூ பிராஞ்ச் காரங்களே பேசிக்குறாங்க."

"ரொம்ப கண்டுக்குற மாதிரி பார்க்காத ஓடிட போறான்; வேணும்னே சடடையை அமுக்காக்குன மாதிரிதான் தெரியுது. வா! வா நேக்கா மடக்குவோம்."

பக்கவாட்டாகப் போய் திடீரெனத் திரும்பிய ஏட்டு டார்ச்சை நீட்டிப் பார்த்தார். குறி பார்த்த டார்ச் லைட் ஒளிக்கு விலகி பழுப்பு விழிகள் வேகமாக அசைந் தன.

"ஏய் யார்ரா நீ? இந்த நேரத்துல எதுக்கு பஸ் ஸ்டாண்டுல மறைஞ்சி உக்காந்துருக்க?"

சற்றும் சலனமில்லாமல் தரையைப் பார்த்தும், மேலே பார்த்தும் ஒரு சிரிப்பு சிரித்தான் அவன்,

"சார் விடக்கூடாது இவன, பயங்கரமா நடிக்குறான், விவகாரமான ஆளா இருப்பான் போல இருக்கு! சந்தேகப்பட் டது சரி சார்?"

"ஏய் எழுந்திர்ரா, கேட்டா மழுப்பு றியா? எதுக்குடா இங்க உட்காந்திருக்க?" இரண்டு பேருமே லத்திக் கம்பால் நெம்பினர்.

"என்னங்கய்யா நீங்க வேற செத்தா மயிறு" என்று திரும்பவும் தானாகச் சிரித்துக் கொண்டான். மிரட்டலுக்குப் பயப்படாததைக் கண்டு கான்ஸ்டபிள் இரு வருக்கும் திகிலேறிப் போனது.

> "யோவ் ஏட்டு மொதல்ல அவன் கைய பின்னால மடக்கிக் கட்டுய்யா! இடுப்புகிட்ட வேற நைசா கையை கொண்டு போறான். கம்ப்ளீட்டா அவன சர்ச் பண்ணுங்கய்யா. ஏதாவது வெடிச்சுறப் போவுது.

"சந்தேகமே இல்ல சார் இவன் தீவிர வாதக் கும்பல்தான். மாட்டிக்கிட்டோன நடிக்குறான் போல, இங்க சரியா வராது ஸ்டேசன்ல வச்சு விசாரிச்சா தானா உண்மை வெளியே வரும் பாருங்க" பரப ரப்பான இருவரும் "ஏய் வாடா இங்கவா" லத்திக் கம்பால் நெட்டித் தள்ளிக் கொண்டு போனார்கள்.

●●●

"**எ**ன்னய்யா விடியுற நேரத்துல! பிச்சக்காரன் மாதிரி இருக்கான் இவன தள்ளிட்டு வர்றீங்க. ஏற்கனவே லாக்கப் ஃபுல்லு. அங்கேயே குளத்து பக்கம் போகக் கூடாதுன்னு அடிச்சு வெரட்ட வேண்டியதுதான்" இன்ஸ்பெக்டரின் முகத்தில் கண் விழிப்புக்கான எரிச்சலும் சேர்ந்து வெளிப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

''இவன் அந்த மாதிரி கேசு இல்ல சார். தீவிரவாத டீம் போல இருக்கு, எதுக்கும் பதில் சொல்லாம பயங்கர அழுத்தமா இருக்கான் சார். கிறுக்கன் போல பாடுறான், நடிக்குறான்.''

சொல்லிக் கொண்டிருக்கும் போதே லத்திக் கம்பு அவன் மேல் சதிராட அவன் கைகளை இடுப்புக்கு கொண்டு போவதைக்கவனித்த இன்ஸ்பெக்டர் பரப ரப்பானார்.

''யோவ் ,ஏட்டு மொதல்ல அவன் கைய பின்னால மடக்கிக் கட்டுய்யா! இடுப்புகிட்ட வேற நைசா கையை கொண்டு போறான். கம்ப்ளீட்டா அவன சர்ச் பண்ணுங்கய்யா. ஏதாவது வெடிச் சுறப் போவுது.

இன்ஸ்பெக்டரின் எச்சரிக்கையில் பயம் கூடியது ஏட்டுக்கு. ''யோவ், அய்யா சொல்றாங்கல்ல, அவன் இடுப்ப சர்ச் பண்ணுய்யா'' ஏட்டு தள்ளிப்போய் நின்ற கான்ஸ்டபிளுக்கு எரிச்சலோடு ஆணை யிட்டார். இன்ஸ்பெக்டர் வேண்டு மென்றே தெருப்பக்கம் போய் நின்று கொண்டு எதையோ ஆராய்வது போல நடந்து கொண்டிருந்தார்.

மின்னல் வேகத்தில் செயல்பட்ட கான்ஸ்டபிள் லத்திக் கம்பால் அவனது இடுப்பை குத்திக் கிளற ஒரு பாலிதீன் பொட்டலம் பிரிந்து வந்து விழுந்தது. அதி லிருந்து உருண்டையாக் விழுந்த ஒன்று உருண்டோடி வாசல் பக்கமிருந்து இன்ஸ்பெக்டரை நோக்கி போக ''சார் சார்'' என்று ஏட்டு கத்த ஒரு கணம் பதறிப்போய் காலைத் தாறுமாறாக நகர்த்தி விழப்போன இன்ஸ்பெக்டர் வியர்த்துப் போய் ''சே! கொட்டப் பாக்கு!'' என்று களைத்துப் போன முகத்தோடு, பயங்கரமாகக் கடுப் பாகிப் போன இன்ஸ்பெக்டர் கோபம் அனைத்தும் கைக்கு வர லத்திக் கம்பால் மாட்டை வதக்குவது போல அவனை அடித்து ''ஏய் யார் நீ! உண்மையைச் சொல்லு? சொல்லு?'' என்று கத்த ஆரம் பித்து விட்டார்.

''ஏன் சாமி நீ வேற வலங்கமான் கோயி லுக்கு பாட கட்டி, கலிய பெருமா வேண்டி கிட்டு எழுவெடுக்க வந்தானாம் மயிறு, மயிறு'' என்று பாட்டாகப் பாட.

''இப்படிதான் சார் பயித்தியம் மாதிரி நடிச்சாலும் செத்தா மயிறு, பாடை, எழவெ டுக்கணும்னு கொலை வெறியோட பேசுறான். ஒரு வேளை இந்த நக்சலைட் கோஷ்டியா இருக்குமோ!''

இன்ஸ்பெக்டருக்கும் சந்தேகம் பிடித் தாட்ட, ''சொல்ல முடியாது எந்த கோஷ்டின்னு தெரியல்ல'', என்று பேசிய படியே லத்திக் கம்பால் இடுப்பைப் பதம் பார்க்க, அவன் பற்களை நறுநறுவென்று கடித்தபடி மோட்டு வளையை வெறிக்க ஆரம்பித்தான்.

''சந்தேகமே இல்ல சார், இவன் தீவிர வாத டீம்தான். இத்தன அடிக்கும் ஒரு அடிக்குக் கூட பயப்படலே, கெஞ்சவோ இல்ல பாருங்க. என்னா அழுத்தமா பல்ல கடிக்குறான் சார்'' சொல்லி ஆத்து ஆத்துப் போனார் ஏட்டு.

''கொடுக்கறத கொடுத்தாதான் உண்மை வருது. ஆள ஜீப்புல ஏத்துங்க. பட்டீஸ்வரம் போனா டீம் பதுங்கி இருக்கு றத புடிச்சிடலாம். நான் மேலதிகாரிக்கு மெசேஜ் தந்துட்டு வாறன் கௌம்புங் கய்யா!'' இன்ஸ்டெக்டர் வழிகாட்ட நெட்டி ஜீப்பில் ஏற்றியவர்கள், ''கொஞ்சம் உஷாரா இல்லேன்னா, விடியற வரைக்கும் பதுங்கி இருந்து ஏதாவது நாசம் பண்ணிருப்பான்யா''

''ஒண்ணும் செய்யலேன்னாலும் சி.எம். முகத்துல நோட்டீசு வுட்டான்னு வச்சுக்க, ராப் பகலா நாம கண்ணு முழிச்சும் நாக்க புடுங்கிக்குற மாதிரி மேலிடத்துல திட்டுறத வாங்கிக்கணும்!''



''விடிஞ்சிருச்சு. சி.எம். வர்ற நேரம் வந்துருச்சு. இவன கவனிக்கிறபடி கவனிச் சாதான் உண்மை வரும்'' என்று இன்ஸ்டெக்டர் ஆணையிட, வலி தாங்காமல் ''பட்டீசுவரம்... பட்டீசுவரம்'' என்று பாட ஆரம்பித்தான்.



படிப்பகம்

www.padippakam.com



எரிச்சல் மேலிட இன்ஸ்பெக்டர், "மயிரா சொல்ற, இன்னும் கொஞ்ச நேரத் துல உங்க மயிரெல்லாம் பாரு! எங்கண்ணு மத்த பசங்கள காட்டலே பெட்ரோலை ஊத்தியே பொசுக்கிடுவேன்" என்று திட்டி யபடியே "இதுல முனிவர் மாதிரி ஜடாமுடி வேற" என்று லத்திக் கம்பால் தலையில் போட "சாமி காட்றேன் சாமி" என்று கடுப் பாகிக் கத்தினான்.

காலை நேரம் துர்க்கை அம்மன் கோயி லுக்கு முன்பு திடுதிப்பென போலீஸ் ஜீப் வந்து நிற்க கோயிலுக்கு முன்பு பரபரப்பு கூடிப் போனது.

"அய்யோ அங்க பாருண்ணே நம்ப மண்ணாங்கட்டிப் பய ரத்தக் காயத்தோட முகம் வீங்கிப் போய் வாரான்." கோயி லுக்கு முன் உத்திராட்சை மாலையோடு பிச்சை எடுக்கும் கூட்டத்திலிருந்தவன் அடையாளம் காட்ட, மொத்த கூட்டத் துக்கும் தலைவர் போல் இருந்த ஒருவர் எழுந்து கொள்ள,

"தோ அவங்கதான்" மண்ணாங்கட்டி கை காட்டிய திசையில் பிச்சைக்கார சாமி யார்கள் திரண்டுவர இன்ஸ்பெக்டர் குழப் பமாகி ஏட்டு பக்கம் திரும்ப அவர் வேறு பக்கம் முகத்தைத் திருப்பி கோபுரத்தை ஆராய்ந்தார்.

"யோவ் அங்க என்ன ஆராய்ச்சி புடுங் குற. சாமியார் பசங்க வர்றானுங்க பாரு என்னான்னு கேளு"

"அய்யா, இவன் பேரு மண்ணாங்கட் டிங்க எங்க கூட்டாளி. அப்பிராணி, பைத்தியம் மாதிரி பாடுவான், கடுமையா வேலை செய்வான் பேசத் தெரியாம பேசு வானுங்க. இங்கதான் பிச்சை எடுப்பான், தப்புத் தண்டாவுக்குப் போக மாட்டானே! வுட்டுடுங்க."

"நேத்து சந்தேக கேசுல மாட்டிட்டான். கேட்டா பதில் சொல்லாம ஏறுக்குமாறு பேசி, நம்மாளுங்க அடிச்சிட்டாங்க; யோவ் பிச்சைகாரன்ங்குற காவி, கீவி கட்டி விட வேண்டியதுதானே? தீவிரவாதி மாதிரி இருக்கான், பின்ன அடிக்காம கொஞ்சுவாங்களா? எங்க வேலை யெல்லாம் வுட்டுட்டு நேத்துலேந்து இவன வச்சிட்டு மாரடிக்கிறோம். சி.எம். வேற வர்ற நேரம். போடா! அவன வுடுங்கய்யா" இன்ஸ்பெக்டர் குரல் கொடுக்க.

"நான்தாங்க இந்தக் கோயில் வாச லுக்கு தலைவரு. இவன் எங்கள மாதிரி

> *"தோ பாரு மண்ணாங் கட்டி இனிமே நீ இந்த காவிய போட்டுகிட்டு, உத்திராட்சைய மாட்டிக்கணும். அப்பதான் எவனும் கைய வைக்க மாட்டான்."*

ஆளுதான், தீவிரவாதி இல்லங்கய்யா!" ஒரு வயதான காவி உடை முன்வந்தார்.

"பெரிய மயிறு இதுக்கு ஒரு தலைவரு; போங்கடா என்ன கூட்டம்" இன்ஸ்பெக்டர் அதட்ட கூட்டம் கலைந்தது.

●●●

ஜீப் மறைந்த பிறகு "போடா மயிறு... மயிறு" என்று மண்ணாங்கட்டி மண்ணை வாரி இறைக்க ஆரம்பித்தான்.

"தோ பாரு மண்ணாங்கட்டி இனிமே நீ இந்த காவிய போட்டுகிட்டு, உத்திராட் சைய மாட்டிக்கணும். அப்பதான் எவனும் கைய வைக்க மாட்டான்" வயதான பிச்சைக்காரர் மாட்டிவிட, இன்னொரு பிச்சைக்காரர் "இப்பதான் மண்ணாங்கட் டிய பாத்தா கலிய பெருமா சாமி மாதிரியே இருக்கு" என்று சிரிப்பு மூட்ட "அய் கலிய பெருமா... கலியபெருமா" என்று பாடியப டியே கிளம்பிய மண்ணாங்கட்டியிடம் "ஏய் மண்ணாங்கட்டி எங்கயும் போய் தொலச்சிராத, அந்த திண்ணையில படுத் திட்டு திரும்பவும் இங்கயே வா. மத்தி யானம் சோறு இருக்கு" என்று ஒருவன் விடாப்பிடியாய்ச் சொல்லி வைத்தான்.

வலியும், களைப்பும் கூட திண்ணையில் தலைசாய்ந்த மண்ணாங் கட்டிக்குப் புதிதாக மாட்டிக் கொண்ட உத்தி ராட்சக் கொட்டை உறுத்த ஆரம்பித்தது. இடது கன்னம் வீங்கி வலியெடுத்ததால் வலது பக்கம் திரும்பிப் படுக்க உத்தி ராட்சை கழுத்திலும் தாடையிலும் அரணை போல உராய்ந்து இடைஞ்சல் கொடுக்க "சே எழவு, மயிறு" என்று வெறுப்போடு கழட்ட நினைக்கையில்,

"சாமி நீங்க வந்ததுக்கு சந்தோஷம். வேண்டிகிட்ட மாதிரி இன்னைக்கு ஒரு சாமியார்க்காவது அமுது படைக்க லேன்னா இத்தன நாள் நான் விரதம் இருந் ததுக்கே பலன் இல்லாம போயிருக்கும். நல்ல நேரம் பாத்து வந்தீங்க, நாங்க பாக்கியம் பண்ணிருக்கோம். கொஞ்ச நேரம் படுத்திருங்க. வட பாயசத்தோடு சாப்பாடு தயார் ஆயிட்டு இருக்குது. தயார் ஆனவுடனே வந்து எழுப்புறேன்" வீட்டுக் காரர் கர்ம சிரத்தையுடன் பவ்யமாக விடை பெற்றார்.

இதற்கு முன் தன் வாழ்நாளிலேயே இப்படியொரு உபசரிப்பைக் கண்டிராத மண்ணாங்கட்டி கழுத்திலிருந்த உத்திராட் சத்தைப் புதிய வாஞ்சையுடன் நோட்டமிட் டவாறு அதை பத்திரமாக கைகளால் இறுகப் பிடித்தபடி படுத்துக் கொண்டே "குபீர் குபீர்" என்று சிரித்துக் கொண்டான். ஏதோ அர்த்தம் புரிந்து கொண்டது போல் மீண்டும் மீண்டும் புன்னகைத்துக் கொண்டான். ●


படிப்பகம்

www.padippakam.com

**தொடர் கட்டுரை: 9**



## சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்யும் புரட்டும்

# இந்திய முசுலீம்களுக்கு உயர் பதவிகள், பாக். இந்துக்கள் அடிமைகளா?

*''இந்தக் காலத்தில் கூட, நம் நாட்டின் மிக உயர்ந்த ஜனாதிபதி பதவியை ஒரு முசுலீம் அலங்கரிக்க முடிந்தது; ஒரு முசுலீம் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக முடிந்தது; மத்திய அமைச்சரவைகளிலும், உள்நாட்டு, வெளிநாட்டு இலாகாக்களிலும் முசுலீம்கள் பெரும் பதவிகளை அடைய முடிந்தது. அவையெல்லாம் நமது தேசிய ப்ரம்பரையின் வலிமையினால்தான் சாத்தியமாயிற்று, பக்கத்தில் உள்ள மதவழி அரசான பாகிஸ்தானுக்கும் நமக்கும் உள்ள வேறுபாடுகள் மிகத் தெளிவாகப் புலனாகின்றன. இவற்றை விளக்க வேண்டிய அவசியமே இல்லை.''*

**– ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வால்கரின் 'ஞானகங்கை' 2-ஆம் பாகம், பக்கம் – 135.**

பாகிஸ்தான் மட்டுமல்ல ஏதாவது ஒரு முசுலீம் நாட்டில் முசுலீம் அல்லாதோர் இத்தகைய உயர் பதவிகளுக்கு வர முடியுமா? இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் இந்தியாவில் மட்டும்தான் மாற்று மதத்தார் வர முடியும்; இதுதான் இந்து மதத்தின் மேன்மைக்கும், பிற மதங்களின் கீழ்மைக்கும் சான்று என ஆர்.எஸ்.எஸ். கும்பல் வாதிடுகிறது. ஆயினும் உண்மை என்ன?

அநேக இசுலாமிய நாடுகளில் முசுலீம் மக்கள் தொகை விகிதம் 95 அல்லது 100 சதமாக இருக்கும்போது பிற மதத்தினர் உயர் பதவிகளுக்கு வருவதற்கான வாய்ப்போ, அடிப்படையோ இல்லை. இருப்பினும் சிரியா, லெபனான், துருக்கி, எகிப்து, முன்னாள் சோவியத் யூனியனின் இசுலாமிய நாடுகளிலும் பிற மதத்தினர் உயர் பதவிகளில் இருக்கின்றனர். இசுலாத்தின் சர்வதேசியம் பேசும் சதாம் உசேனின் ஈராக்கில் கூட தாரிக் அசிஸ் என்ற கிறித்தவர் அமைச்சராகப் பணியாற்றுகிறார்.

அதேசமயம் வளைகுடா மற்றும் பிற இசுலாமியக் குடியரசு நாடுகளில் இந்நிலைமை இல்லை. அதனால் என்ன? அந்த நாடுகள் மதச்சார்புடன் இருக்கும்போது, நாம் மதச்சார்பற்ற நாடு என்று கூறிக் கொள்கிறோம். மதச்சார்பை இழிவு என்று கருதுகிறோம். ஆயினும் ஆர்.எஸ்.எஸ். கூட்டம். மதச்சார்பைத்தான் பெருமையென்றும், மதச்சார்பின்மையை இழிவு எனவும் கருதுகிறது. அதனால்தான் இசுலாமிய நாடுகளின் மதச்சார்பைக் காட்டி இங்கேயும் அப்படி ஒரு இந்து ராட்டிரத்தைக் கொண்டு வர இந்த வாதத்தை வைக்கிறார்கள். இந்து மதவெறியர்கள் எழுவதற்கு முன்பிருந்தே இந்நாட்டில் மதச்சார்பின்மை என்பது ஒரு கேலிப் பொருளாகவும், பார்ப்பனியப் பண்பாடே சகல மட்டங்களிலும் ஆதிக்கம் செலுத்தும் பருப்பொருளாகவும் இருந்து வருகிறது.

துருக்கியில் முசுலீம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தாலும், அந்நாடு மதச்சார்பின்மையைக் கறாராகக் கடைபிடித்து வருகிறது. சென்ற ஆண்டு துருக்கி பாராளுமன்றத்தில் இசுலாமிய மதவாதம் பேசிய உறுப்பினர் ஒருவரின் பதவி ரத்து செய்யப்பட்டு 2 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. த.மா.காவைச் சேர்ந்த ஜெயந்தி நடராசன் அங்கு சென்றிருந்தபோது இதை அறிந்து அதிர்ச்சியுற்றதாகக் கட்டுரை ஒன்றில் குறிப்பிடுகிறார். இங்கே பால்தாக்கரே, தாராசிங் வகையறாக்களுக்கு சட்டபூர்வ பாதுகாப்பும், சமூக மதிப்பும் தரப்படுகிறது. இந்திய மதச்சார்பின்மையை துருக்கியுடன் ஒப்பிடும்போது படுகேவலமாகத்தான் இருக்கின்றது.

இருந்தபோதும் நம் நாட்டின் உயர் பதவிகளில் முசுலீம்கள் சிலர் இருப்பதற்கு காரணம் 'இயற்கையாகவே' இந்துக்களிடம் உள்ள பெருந்தன்மை என்கிறார்கள். ஜாகீர் உசேன் குடியரசுத் தலைவராகவும், முகமது கரீம் சாக்லா நீதிபதியாகவும், பட்டோடி, அசாருதீன் போன்றோர் கிரிக்கெட் அணித் தலைவராகவும் இருந்திருக்கிறார்கள். இதில் பெருந்தன்மை என்னவாக இருக்கிறது? ஒரு முசுலீமை ஜனாதிபதி ஆக்குவது என்பது ஒரு தாழ்த்தப்பட்டோரை ஜனாதிபதி ஆக்கவது போல ஒரு பித்தலாட்ட வேலைதான். இப்பிரிவு மக்களிடம் நம்மாளு ஜனாதிபதி என்ற பெருமிதத்தை உருவாக்கிக் கொண்டு, வழக்கமான ஒடுக்குமுறையைத் தொடருவார்கள். ரன்பீர்சேனாவின் படுகொலையைக் கண்டித்து அறிக்கை விடும் நாராயணன் அதற்கு மேல் என்ன செய்ய முடியும்? முன்பு வெங்கட்ராமன் விட்ட அறிக்கையின் இடம், காலம் மாறியதைத் தவிர வார்த்தைகள் கூட மாறவில்லையே?

மேலும் ஒரு நாட்டில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கங்களின் நலனுக்கு சேவை செய்யவே 'அரசு' உள்ளிட்ட ஏனைய சட்ட நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. எனில் இந்நிறுவனங்களின் 'ரப்பர் ஸ்டாம்ப்' பதவிகளுக்கு ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் வர வேண்டும் என்பதில்லை. அடக்கப்படும் பிரிவைச் சேர்ந்தவர்கள் கூட வரலாம். அப்படி வருவதையே ஆளும் வர்க்கங்கள் விரும்புகின்றன. எனவே அரசு என்று நிறுவனம் இந்து தரகு முதலாளிகளுக்கும், இந்து அதிகார வர்க்க முதலாளிகளுக்கும், இந்து நிலப்பிரபுக்களுக்கும் அடிபணிந்திருக்கும் போது, தலித் நாராயணனோ, முசுலீம் ஜாகீர் உசேனோ ஒரு பொருட்டல்ல. உண்மையில் இவர்களும் அதை அறிந்தேதான் செய்கிறார்கள். இருவரது வர்க்க நலனும் இணைந்தே இருக்கின்றன.

இத்தகைய மோடி மஸ்தான் மோசடியை உலகமெங்கும் காணலாம். சிட்னி ஒலிம்பிக் ஜோதியை ஏற்றி வைக்கும் பெருமை 'கதே ப்ரீமென்' என்ற ஆஸ்திரேலிய சர்வகுடி வீராங்கனைக்கு வழங்கப்பட்டது. இவரைவிடப் பிரபலமான வெள்ளையின வீரர்கள் இருந்தும் ஆஸ்திரேலிய அரசு இதைச் செய்யக் காரணம் நிறவெறியை எதிர்க்கிறோம் என்று பம்மாத்து காட்டத்தான். உண்மையில் வெள்ளையர்களிடம் இழந்த தங்கள் மண்ணை மீட்க

**கோஃபி அன்னான் என்ற கருப்பர் செயலாளராக வந்ததினாலேயே, ஐ.நா. சபையின் ஏகாதிபத்திய அடிமைத்தனம் மாறிவிட்டதா? முத்தையா முரளீதரனை இலங்கை கிரிக்கெட் அணியில் சேர்த்ததினாலேயே, இலங்கையில் தமிழர்கட்கு அனைத்து வாய்ப்புகளும் அளிக்கப்படுகிறது என ஏற்க முடியுமா? பங்காரு லட்சுமணன் தலைவராக வந்ததினால், பாரதீய ஜனதாவின் பார்ப்பனீய ரத்தம் மாறி விடுமா?**



படிப்பகம்

www.padippakam.com

இன்றுவரை ஆஸ்திரேலியப் பழங்குடியினர் போராடுவதும் அரசு அதை அடக்குவதும்தான் நடைமுறையாக இருக்கிறது.

கோ·ஃபி அன்னன் என்ற கருப்பர் செயலாளராக வந்ததினாலேயே, ஐ.நா. சபையின் ஏகாதிபத்திய அடிமைத்தனம் மாறிவிட்டதா? முத்தையா முரளிதரனை இலங்கை கிரிக்கெட் அணியில் சேர்த்ததினாலேயே, இலங்கையில் தமிழர்கட்கு அனைத்து வாய்ப்புகளும் அளிக்கப்படுகிறது என ஏற்க முடியுமா? பங்காரு லட்சுமணன் தலைவராக வந்ததினால், பாரதீய ஜனதாவின் பார்ப்பனீய ரத்தம் மாறி விடுமா? கருப்புக் கிழவிகளைக் கண்ட மாத்திரத்தில் கட்டிப்பிடிக்கும்



"இந்திய துணைக்கண்டத்தை இரண்டாகப் பிரித்தது, மனிதகுல வரலாற்றிலேயே மிகவும் தவறான செயல்" பாக். அரசால் தேடப்பட்டுவரும் முஜாகீர் இயக்கத் தலைவர் அல்டாப் ஹுசைன் லண்டனில் உரையாற்றுகிறார். இந்தியாவிலிருந்து சென்ற முசுலீம்களின் உரிமைகளுக்காகப் போராடும் இவ்வியக்கத்தின் பெயர் முத்தாகிதா க்வாமி மூவ்வெண்ட் (எம்.க்யூ.எம்).

எம்.ஜி.ஆரின் அண்ணாயிசத்துக்குக் குறையானவையல்ல மேற்கண்டவை!

நம் நாட்டின் மக்கள் தொகையில் 12 சதவிதம் பேர் முசுலீம்களாக இருக்கின்றனர். ஆனால் இந்த தேசிய விகிதம் பாராளுமன்ற - சட்டமன்றங்களில், வேலை வாய்ப்பில், ஐ.ஏ.எஸ். - ஐ.பி.எஸ். பதவிகளில், கல்வியில், போலீசு - இராணுவத்தில் கிடையாது. நாட்டின் 50 பெரிய தொழிலதிபர்களில் ஒருவர் கூட முசுலீமாக இல்லை. மேலும் போலீசு - இராணுவ - உளவுப் பிரிவுகளின் உயர்மட்டப் பதவிகளுக்கு முசுலீம்கள் வர முடியாது என்பது எழுதப்படாத விதியாகவே பின்பற்றப்படுகிறது. இவைதான் யதார்த்தம் தெரிவிக்கும் உண்மை.

எனவே கிரிக்கெட் காப்டன், ஜனாதிபதி, மந்திரி பதவி எல்லாம் உலக நாடுகளிடையே மதச்சார்பின்மை எனும் பொய்யை நிரூபிக்கும் தந்திரமாகும். அதனால்தான் வளைகுடா நாடுகளிடம் தூதர் அனுப்புவது முதல், பல்வேறு பிரச்சினைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவது வரை எல்லாக் கட்சி அரசாங்கங்களும் சல்மான் குர்ஷித், நஜ்மா ஹெப்துல்லா, சிக்கந்தர் பக்த் போன்ற முசுலீம்களைப் பயன்படுத்தி வருகின்றன.

இதெல்லாம் போகட்டும். இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் இந்த நாட்டில், ஒரு தோட்டி - வெட்டியானின் வேலைக்கு, கேவலம் ஒரே ஒரு ஐயர், முதலியார், செட்டியார், நாயுடு கூடத் தயாராக இல்லையே, என்ன அநீதி? ஏர்க்கலப்பையுடன் வயலில் உழும் ஒரு மார்வாடி, சேட்டு, ஐயங்காரை திரைப்படத்தில் கூட காண முடியவில்லையே, எப்பேர்ப்பட்ட வஞ்சனை!

இன்னும் புரியும்படி கேட்போம். பார்ப்பன - பனியா, மேல் சாதியினர் தவிர சூத்திர - பஞ்சம சாதிகளைச் சேர்ந்த எவரும் தரகு முதலாளிகளாக இல்லையே, ஏன்? நாடெங்கும் பரவிக் கிடக்கும் பார்ப்பன - வேளாள - மேல்சாதி மடங்களில், ஒரு சூத்திரனுக்கோ, பஞ்சமனுக்கோ கேவலம் சந்நியாசமாவது வாங்கித்தர முடியுமா? முசுலீம்களுக்கு சில உயர் பதவி பிச்சையளித்து தமது பெருந்தன்மை பற்றி புல்லரிக்கும் இந்து மதவெறியர்கள் இதற்கெல்லாம் பதில் சொல்லட்டும்.

ஆகையால் முசுலீம்களுக்கும், ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்தோருக்கும், இவர்கள் அளிக்கும் 'ரப்பர் ஸ்டாம்ப்' உயர் பதவிகளை அளிக்காமலே இருக்கலாம். அப்போதாவது அந்தச் சமூக மக்களுக்குப் போர்த்தப்பட்டிருக்கும் மாயை சுலபமாகக் கலைந்து போகும்.

●●●

*''பாரதத்தில் முசுலீம்களுக்கு அனைத்துச் சலுகைகளும், உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் பாக்கிஸ்தானிலும், பங்களாதேஷிலும் வசிக்கின்ற சிறுபான்மை இந்துக்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்படுகின்றனர். இந்துக்கள் தாக்கப்படுகின்றனர்; இந்துக் கோவில்களும் இடிக்கப்படுகின்றன.''*

**— இந்து மதவெறியரின் பிரபல அவதூறுகளில் ஒன்று.**

இந்தியாவில் முசுலீம்களுக்கு வழங்கப்படுவதாகக் கூறப்படும் உரிமைகள், சலுகைகள் என்பவை ஏதோ பாக்கிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்கு வழங்கப்பட்டவை போல ஆர்.எஸ்.எஸ். சித்தரிக்கிறது. முசுலீம் என்றாலே பாகிஸ்தானிலிருந்து வந்தவர்கள்தான் என்ற உண்மைக்குப் புறம்பான அயோக்கியத்தனமான பிரச்சாரத்தை முதலில் முறியடிக்க வேண்டும்.

தமிழ்நாட்டிலும், கேரளத்திலும் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளாக முசுலீம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். காஷ்மீர் உள்ளிட்ட வடமாநில முசுலீம்களும் பல நூற்றாண்டுகளாய் இம்மண்ணில் வாழ்பவர்கள்தான். இன்றைய உள்துறை அமைச்சர் அத்வானியும், பணக்கார பா.ஜ.க. தலைவர்கள் பலரும்தான் பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்த அகதிகள்!

இந்தியாவின் இந்து - முசுலீம் மதக்கலவரங்களில் நேற்றும், இன்றும் பாதிக்கப்படுபவர்கள் இரு மதத்தைச் சேர்ந்த ஏழைகள்தான். அதே சமயம் இரு மதத்தைச் சேர்ந்த பணக்காரர்கள் மட்டும் இந்தக் கலவரங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் வழியைத் தேடுகின்றனர். அதன்படி 1947 பிரிவினையின் போது வடமேற்கு மாநிலம் மற்றும் வங்காளத்தில் உள்ள மேட்டுக்குடி முசுலீம்கள் மட்டும் பாக்கிஸ்தானுக்கும், பங்களா தேசுக்கும் சென்றனர். அதேபோல அங்கிருந்த பணக்கார - மேல்சாதி இந்துக்கள் மட்டும் கனிசமான எண்ணிக்கையில் இந்தியா வந்தனர். இரு நாடுகளிலும் உழைத்தால்தான் கஞ்சி குடிக்க முடியும் என்ற நிலையிலிருந்த ஏழைகள் மட்டும் இடம் பெயரவில்லை.

பிரிவினைக் காலத்திய கலவரங்கள் ஏதும் தென்னிந்தியாவில் நடக்கவில்லை. அதனால் இங்கிருக்கும் வசதி படைத்த முசுலீம்களும் இடம் பெயரவில்லை. மேலும் அவர்கள் இதுதான் தமது மண் எனக் கருதியதாலும், பிற மக்களுடன் கொண்டிருந்த நேச உறவினாலும், பாக்கிஸ்தான் போவது பற்றி சிந்திக்கவில்லை. 1947-க்குப் பின் இந்தியாவுடன் இணைக்கப்பட்ட காசுமீர் மற்றும் ஐதராபாத் நிஜாம் சமஸ்தானத்தைச் சேர்ந்தோரும் இடம் பெயரவில்லை. எனவே கலவரம் தூண்டிவிடப்பட்ட வடமேற்கு, வட இந்திய, வங்காள மாநிலங்க



படிப்பகம்

www.padippakam.com

ளில்தான் இடம் பெயர்தல் நடைபெற்றது.

அடுத்து இந்தியாவில் 12 கோடி முசுலீம் மக்கள் பல மாநிலங்களில் பரவலாக வாழ்கின்றனர். மதத்தைத் தாண்டிய மொழி, இன, பண்பாடு, பொருளாதாரக் காரணங்களினால் அந்தந்த வட்டாரத் தோடு ஐக்கியப்பட்டே வாழ்கின்றனர். முசுலீம் என்ற ஒரே காரணத்திற்காக இவர்களெல்லாம் வங்க தேசத்திற்கோ, பாக்கிஸ்தானுக்கோ போக முடியாது. அந்த அளவுக்கு வாழ்வியல் - சமூகவியல் - அரசியல் வேறுபாடுகள் இருக்கின்றன.

ஆனால் பாக்கிஸ்தானில் வாழும் இந்துக்களிடையே இத்தகைய வேறுபாடுகள் இல்லையென்றாலும் வாழ்க்கை நிலைமை இடம் பெயருவதற்கு உகந்ததாக இல்லை. அங்கே சிந்து மாகாணத்தில் அதையும் லாகூரைச் சுற்றிய பகுதிகளிலும்தான் சுமார் 13 லட்சம் இந்துக்கள் வாழ்கின்றனர். அதிலும் 70 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களாகவே இருக்கின்றனர். ஆய்வாளர் அஸ்கர் அலி இன்ஜினியர் ஒரு முறை லாகூருக்குச் சென்றிருந்தபோது தெருக்கூட்டும் தாழ்த்தப்பட்ட தொழிலாளி ஒருவரிடம் 'நீங்கள் ஏன் பிரிவினையின் போது இந்தியா செல்லவில்லை' எனக் கேட்கிறார் ''இங்கேயும் தெரு கூட்டுகிறேன், இந்தியா சென்றாலும் அதைத்தான் செய்யப் போகிறேன். இதற்கு எங்கே இருந்தால் என்ன?'' என்று பதிலளிக்கிறார் அந்தத் தொழிலாளி. அவரைப் பொறுத்தவரை வாழ்க்கையைத் தீர்மானிப்பதில் மதத்திற்குப் பங்கு ஏதுமில்லை. ஏழ்மைக்கு ஏது மதம்?

இப்படி ஏழ்மையில் உழலும் இத்தாழ்த்தப்பட்ட 'இந்துக்கள்' அங்கே தாக்கப்படுவதற்கு ஆதாரமும் கிடையாது; அடிப்படையும் கிடையாது. இந்தியாவைப் போல அங்கும் பெரும் கலவரங்கள் நடந்ததாகப் பார்ப்பனப் புளுகுணி தினமலரில் கூட செய்தி வந்ததில்லை. அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகுதான் எதிர்விளைவாக பாக்கிலும், பங்களாதேஷிலும் இந்துக்களுக்கு எதிரான கலவரங்கள் தொடங்கின. இருந்தபோதும் அப்படிக் கலவரம் செய்தமைக்காக இரு நாடுகளைச் சேர்ந்த பல இசுலாமிய வெறியர்கள் போலீசால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இச்செய்தி இந்தியப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. ஆனால் இங்கே மசூதியை இடித்த கரசேவகர்கள் யாரும் சுடப்படவில்லை என்பதையும் சேர்த்துப் பார்க்க வேண்டும்.

பாக்கில் தாக்கப்படும் தாழ்த்தப்பட்ட இந்துக்களுக்காக பா.ஜ.க. கும்பல் முதலைக் கண்ணீர் விட வேண்டாம். ஏனெனில் இங்கிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் - இந்திய இந்துக்களால் தாக்கப்படுவதை விட பாக்கிஸ்தான் இந்துக்களின் நிலைமை பரவாயில்லை. மற்றபடி இந்தியப் புவியியல் எல்லையை புனிதம் கொண்டாடும் இந்து மதவெறியர்கள் நினைப்பது போல் வாழ்வியல் நிலைமைகள் மதத்தை வைத்து மட்டும் சிக்கலாகவில்லை.

உலகிலேயே இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்த இப்பிரிவினை அந்த அளவுக்கு சோகத்தையும், பிரச்சனைகளையும் கொண்டிருக்கிறது. இந்தியாவிலிருந்து பாக்கிற்குச் சென்ற முசுலீம்கள் 'முஜாகீர்கள்', வந்தேறிகள் என்றழைக்கப்படுகின்றனர். அதன்படி அவர்களுக்குரிய உரிமைகளும், வாய்ப்புகளும் இன்றுவரை மறுக்கப்பட்டே வருகின்றன. அவர்களும் பாக் - ஆட்சியாளர்களுடன் ஆயுத மோதலை நடத்தி வருகிறார்கள்.

இரு நாட்டு எல்லையில் வாழும் மக்களும் இரு நாட்டுப் போர்களினால்

**ஆய்வாளர் அஸ்கர் அலி இன்ஜினியர் ஒரு முறை லாகூருக்குச் சென்றிருந்தபோது தெருக்கூட்டும் தாழ்த்தப்பட்ட தொழிலாளி ஒருவரிடம் 'நீங்கள் ஏன் பிரிவினையின் போது இந்தியா செல்லவில்லை' எனக் கேட்கிறார் ''இங்கேயும் தெரு கூட்டுகிறேன், இந்தியா சென்றாலும் அதைத்தான் செய்யப் போகிறேன். இதற்கு எங்கே இருந்தால் என்ன?'' என்று பதில் அளிக்கிறார் அந்தத் தொழிலாளி.**

அடைந்த துயரங்கள் அளவில் அடங்கா. இராணுவச் சண்டையினால் தேசியம் மாறுவதும், எல்லை தாண்டி இயங்கி வரும் மண உறவுகளும் - அதைத் தொடர முடியாத அரசுத் தடைகளும் அங்கே இயல்பானவை. பிரிவினையின் போதும், பின்னர் நடந்த 3 போர்களினாலும் இலட்சக் கணக்கான இந்துக்கள் இங்கே வந்திருக்கின்றனர். முசுலீம் நிலவுடைமையாளர்களின் கீழ் தாழ்த்தப்பட்ட மக்களோடு சேர்ந்து அடிமைப்பட்டிருந்த இராஜபுத்திரர்கள், இந்தியா வந்தவுடன் தாழ்த்தப்பட்ட மக்களை அடக்கி ஆளும் உண்மையான இராஜபுத்திரர்களாக மாறிவிட்டனர். எனவே பிரிவினை என்பது இரு நாட்டிலிருந்தும் இடம் பெயர்ந்த முசுலீம்களுக்கும், இந்துக்களுக்கும் பொன்னான வாழ்க்கை எதையும் வழங்கவில்லை.

பாக், வங்கதேசம் இரண்டும் தங்களை இசுலாமியக் குடியரசுகள் என அறிவித்துக் கொண்டவை. அதன்படி மாற்று மதங்களைச் சேர்ந்தோர் சட்டப் பூர்வமாகவே இரண்டாந்தரமாய்க் கருதப்படுகின்றனர் என்பதும் உண்மைதான். மதக்குடியரசு தவறு என்று கருதும் நாம் அதை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டியதில்லை.

மேலும் எந்த ஒரு மதக் குடியரசும் தனது சிறுபான்மை மத மக்களை மட்டுமல்ல முக்கியமாக தன் மதத்துப் பெரும்பான்மை உழைக்கும் மக்களை ஒடுக்கவே பயன்படுகிறது. இந்து மதவெறியர்கள் - கிறித்துவ, முசுலீம் மக்களுக்கு மட்டுமல்ல, நாட்டின் பெரும்பான்மை உழைக்கும் மக்களுக்கும் எதிரிகள் என்பது எப்படி உண்மையோ அப்படி ஒரு இசுலாமியக் குடியரசும் அந்நாட்டு முசுலீம் உழைக்கும் மக்களுக்கும் விரோதிதான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பாக் - வங்க தேசத்தில் சட்டப்படியும், இந்தியாவில் சட்டமின்றியும் பெரும்பான்மையினரின் மதவாதம் இருந்து வருகிறது. ஆயினும் இந்தியாவில் ஆயிரமாயிரம் முசுலீம்கள் கொல்லப்பட்ட போதும், மசூதி இடிக்கப்பட்ட போதும், வளைகுடாவில் பிழைக்கப் போன இந்துக்களைக் கேட்பார் இல்லாமல் தாக்கியிருக்கலாமே? ஏன் அப்படி நடக்கவில்லை?

வங்க தேசத்தில் இந்துக்களைத் தாக்கிய முசுலீம் மதவெறியர்களை எதிர்த்து 'லஜ்ஜா' (அவமானம்) என்ற நாவலை எழுதினார் தஸ்லீமா நஸ்ரீன். அதனால் மதவாதிகள் அவருக்கு மரண தண்டனை அறிவித்து நாட்டை விட்டு விரட்டினாலும் தஸ்லீமா தனது போராட்டத்தைக் கைவிடவில்லை.

'பம்பாய்'க் கலவரத்துக்குக் காரணம் பால் தாக்கரேதான் என்று பத்திரிகைகளும், நீதி மன்றமும், வரலாறும் நிரூபித்திருக்கின்றன. ஆனால் பம்பாய்க் கலவரம் நடந்த புழுதி மறைவதற்குள் 'பம்பாய்' திரைப்படத்தின் மூலம் வரலாற்றை மாற்றி, முசுலீம்கள்தான் காரணம் என்று கதை சொல்லி பால் தாக்கரேவிடம் ஆசியும் அனுமதியும் வாங்கினார் மணிரத்தினம். மாநில, தேசிய விருதுகள், த.மு.எ.ச. உள்ளிட்ட 'மதசார்பற்ற' அறிஞர்களின் பாராட்டு, தொலைக்காட்சிகளில் 3 மாதத்திற்கு ஒரு முறை ஒளிபரப்பு என 'பம்பாய்' படத்துக்குக் கிடைத்த சீராட்டும், பாராட்டும் பட்டியலிட்டு மாளாது.

வங்கதேசம் இசுலாமிய நாடு என்றாலும் ஒரு தஸ்லீமா நஸ்ரீனுக்காக அந்நாடு பெருமைப்பட முடியும். இந்தியா மதச்சார்பற்ற நாடு என்று கூறிக் கொண்டாலும் ஒரு மணிரத்தினத்துக்காக நாம் வெட்கப்படவே இயலும்.

– தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

# புரட்சியில் இளைஞர்கள்

**சோவியத் யூனியன் புரட்சியில் அர்ப்பணித்துக் கொண்ட இளைஞர்களின் வாழ்வையும், சிந்தனையையும் அறியத் தருகிறது 'புரட்சியில் இளைஞர்கள்' என்ற நூல். 1905 புரட்சியில் சுட்டுக் கொல்லப்பட்ட இவான் பாபுஷ்கின் எனும் இளந் தொழிலாளியைப் பற்றி லெனின் எழுதிய மரணக் குறிப்பு இங்கே தரப்படுகிறது. புரட்சியின் குறிக்கோளுக்காகத் தங்களை முழுமையாக ஒப்படைத்துவிட்டு, தேவைப்பட்ட போது மகிழ்ச்சியுடன் உயிரையும் வழங்கிய இவ்விளைஞர்கள், கற்பனைக் கதைகளின் பாத்திரங்கள் அல்ல; மனிதகுல விடுதலையின் இரத்த சாட்சியங்கள்.**

நாம் சாபத்தீடான நிலைமைகளில் வாழ்கிறோம். இந்தக் காலத்தில் பின்வருவது போன்ற விஷயம் நடக்கக் கூடியதுதான்; பெரிய கட்சி ஊழியர், கட்சிக்குப் பெருமை அளிப்பவர், வாழ்நாள் முழுவதையும் தன்னலம் இன்றித் தொழிலாளர்களின் நலன்களுக்கே அர்ப்பணித்து விட்டவர், தகவல் இல்லாமல் மறைந்து விடுவார். அவருக்கு என்ன ஆயிற்று, அவர் எங்கேனும் கடுங் காவல் சிறைக் குடியிருப்பில் உழல்கிறாரா, ஏதேனும் சிறைச்சாலையில் மடிந்து போனாரா அல்லது பகைவர்களுடன் போரில் வீர மரணம் அடைந்தாரா என்பது தாயும் மனைவியும் போன்று மிக மிக நெருங்கியவர்களுக்கும் மிகவும் உற்ற தோழர்களுக்கும் பல ஆண்டுகள் வரை தெரியாது. இவான் வஸீலியெவிச்சுக்கு இப்படி நேர்ந்தது. அவர் ரென்னென்காம்ஃபினால் சுட்டுக் கொல்லப் பட்டார். அவருடைய மரணம் பற்றிய சேதியை மிக அண்மையில்தான் நாங்கள் தெரிந்து கொண்டோம்.

எத்தனையோ சமூக ஜனநாயக வாதிகளுக்கு இவான் வஸலீயெவிச் பாபுஷ்கினின் பெயர் அன்புக்கும் மதிப்புக்கும் உரியது. அவரை அறிந்தவர்கள் எல்லோரும் அவரது ஊக்கம், வெற்றுச் சொற்கள் இன்மை, ஆழ்ந்த நிலையுறுதி கொண்ட புரட்சித்தன்மை, குறிக்கோளில் ஆர்வம் பொங்கும் ஈடுபாடு ஆகியவற்றுக்காக அவரை நேசித்துப் போற்றினார்கள்.

அவர் பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர். 1995-ம் ஆண்டில், அரசியல் உணர்வு பெற்ற மற்றத் தோழர்களின் குழுவோடு சேர்ந்து, நேவ்ஸ்கி எல்லை நிலையத்துக்கு அப்பால் இருந்த செம்யானிக் கோவ்ஸ்கி, அலெக்சாந்திரோவ்ஸ்கி தொழிற்சாலைகள், கண்ணாடித் தொழிற்சாலை ஆகியவற்றின் தொழிலாளர்களிடையே அவர் ஊக்கத்துடன் வேலை செய்தார். வட்டங்கள் அமைத்தார். நூலகங்கள் நிறுவினார், தாமும் இடைவிடாமல் ஆர்வத்துடன் பயின்றார்.

அவருடைய எண்ணங்கள் எல்லாம் வேலையை விரிவாக்குவதிலேயே முனைந்திருந்தன. 1894-ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் பீட்டர்ஸ்பர்கில் வெளியிடப்பட்ட முதலாவது கிளர்ச்சித் துண்டுப் பிரசுரத்தைத் தயாரிப்பதில் அவர் செயல்முறைப் பங்கு எடுத்துக் கொண்டார், தாமே வினியோகித்தார். "தொழிலாளி வர்க்க விடுதலைக்காகப் போராடும் கழகம்" பீட்டர்ஸ்பர்கில் அமைக்கப்பட்டதும் இவான் வஸீலியெவிச் அதன் செயலூக்கம் உள்ள உறுப்பினர்களில் ஒருவர் ஆனார். கைது செய்யப்படும் வரை அவர் அதில் வேலை செய்தார்.

சமூக - ஜனநாயகக் கட்சியை ஒன்றிணைத்து வலுப்படுத்த உதவக் கூடிய அரசியல் செய்தித்தாள் ஒன்றை ருஷ்யாவுக்கு வெளியே பிரசுரிக்கும் கருத்தைப் பீட்டர்ஸ்பர்க் வேலையில் அவருடைய முதிய தோழர்கள் — இஸ்க்ரா செய்தித்தாளைத் தொடங்கியவர்கள் — அவருடன் கலந்து ஆலோசித்தார்கள். இவான் வஸீலியெவிச் சுதந்திரமாய் இருந்தவரை இஸ்க்ராவுக்குத் தூய தொழிலாளர் செய்தி விவரங்கள் கிடைப்பதில் பற்றாக்குறையே ஏற்படவில்லை. இஸ்க்ராவின் முதல் இருபது இதழ்களைப் படித்துப் பாருங்கள். ஷூயா, இவானவோ - வஸ்னிஸேன்ஸ்க், அரேஹவோ — ஸூயெவோ ஆகியவற்றிலிருந்தும் வந்துள்ள அனேகமாக எல்லாச் செய்திக் கடிதங்களும் இவான் வஸீலியெவிச்சின் மூலமாகவே கிடைத்தன. இஸ்க்ராவுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பு ஏற்படுத்த அவர் முயன்று வந்தார். இவான் வஸீலியெவிச் பாபுஷ்கின் இஸ்க்ரா செய்தித்தாளின் மிக ஆர்வமுள்ள நிருபராகவும் அதன் தீவிர ஆதரவாளராகவும் இருந்தார்.

மையப் பிரதேசத்திலிருந்து பாபுஷ்கின் தெற்கே, எக்கத்தெரீனஸ்லாவுக்கு வந்தார். அங்கே அவர் கைது செய்யப்பட்டு அலெக்சாந்திரவ்ஸ்க் சிறையில் இடப்பட்டார். சிறைச்சாலை ஜன்னல் அழிக்கம்பிகளை அரத்தால் அராவித் துணித்து, மற்றத் தோழர்களுடன் அவர் தப்பி ஓடினார். அயல் மொழி ஒன்றுகூட அறியாமல் அவர் லண்டன் போய்ச் சேர்ந்தார். இஸ்க்ரா செய்தித்தாளின் அலுவலகம் அப்போது லண்டனில் இருந்தது. அங்கே பல விஷயங்கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடந்தது. பல பிரச்சினைகள் சேர்த்து விவாதிக்கப்பட்டன... ஆனால் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் கலந்து கொள்ள இவான் வஸீலியெவிச் பாபுஷ்கினுக்கு முடியவில்லை.

சிறைச்சாலையும் சைபீரியச் சிறைக் குடியிருப்பும் அவரை நீண்ட காலத்துக்கு வேலை செய்ய விடவில்லை. ஏற்றத்தில் இருந்த புரட்சி அலை புதிய ஊழியர்களையும் புதிய கட்சித் தலைவர்களையும் முன்னணிக்குக் கொண்டு வந்தது. பாபுஷ்கினோ அந்தக் காலத்தில் தொலைதூர வடக்கில், வெர்ஹயான்ஸ்கில் வசித்து வந்தார். கட்சி வாழ்க்கையிலிருந்து அவர் அறவே துணிக்கப்பட்டிருந்தார். நேரத்தை அவர் வீணாக்கவில்லை. கற்றார், போராட்டத்துக்கு முன்னேற்போடுகள் செய்தார், சிறைக் குடியிருப்புத் தோழர்களான தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளித்தார், அவர்களை அரசியல் உணர்ச்சி பெற்ற சமூக - ஜனநாயகவாதிகளும் போல்ஷ்விக்குகளும் ஆக்க முயன்றார்.

1905-ல் பொதுக் குற்ற மன்னிப்பு வழங்கப்பட்டதும் பாபுஷ்கின் ருஷ்யாவுக்குப் புறப்பட்டார். ஆனால் சைபீரியாவிலும் அந்தக் காலத்தில் போராட்டம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. எனவே பாபுஷ்கின் போன்றவர்கள் அங்கேயும் தேவைப்பட்டார்கள். அவர் இர்க்கூத்ஸ்க் கமிட்டியில் சேர்ந்து முழு மூச்சாக வேலையில் முனைந்தார். அவர் கூட்டங்களில் பேசவும் சமூக - ஜனநாயகக் கிளர்ச்சிப் பிரச்சாரம் நடத்தவும் எழுச்சிக்கு ஏற்பாடு செய்யவும் வேண்டி இருந்தது. இன்னும் ஐந்து தோழர்களுடன் — அவர்களுடைய பெயர்கள் நமக்குத் தெரிய வரவில்லை — பாபுஷ்கின் ரயில் வண்டிப் பெட்டி ஒன்று நிறைய ஆயுதங்கள் ஏற்றிக் கொண்டு காட்டின் உள் பகுதிக்குச் சென்று கொண்டிருந்த போது ரென்னென்காம்ஃபின் தண்டனைப் படைப்பிரிவு ரெயில் வண்டியைப் பிடித்துக் கொண்டது. அறுவரும் எவ்வித விசாரணையும் இல்லாமல், அவசரமாகத் தோண்டப்பட்ட பொதுப் புதை குழியின் விளிம்பில் நிறுத்தப்பட்ட உடனே சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

அவர்கள் வீர மரணம் அடைந்தார்கள். நிகழ்ச்சியை நேரில் கண்ட படையினரும் அதே ரெயில் வண்டியில் இருந்த இருப்புப் பாதைத் தொழிலாளர்களும் அவர்களுடைய சாவு பற்றி விவரித்



படிப்பகம்

www.padippakam.com

தார்கள். பாபுஷ்கின் ஜாரின் தனிப்படையினது மிருகத் தனமான தண்டனை நடவடிக்கைக்குப் பலி ஆகிவிட்டார். ஆனால் எந்தக் காரியத்துக்குத் தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தாரோ அந்தக் கரியம் மடியாது என்றும், பதினாயிரக் கணக்கான, நூறாயிரக் கணக்கான, பத்து லட்சக் கணக்கான பிற கரங்கள் அதைச் செய்யும் என்றும், இந்தச் செயலுக்காக வேறு தொழிலாளித் தோழர்கள் உயிர் வழங்குவார்கள் என்றும், வெற்றி பெறும் வரை அவர்கள் தொடர்ந்து போராடுவார்கள் என்றும் அவர் அறிந்திருந்தார்...



பாபுஷ்கின்

* * *

ருஷ்யாவின் சமூக - ஜனநாயகத் தொழிலாளர் கட்சி "அறிவு ஜீவிகளின்" கட்சி, தொழிலாளர்கள் அதிலிருந்து துணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், ருஷ்யாவின் தொழிலாளர்கள் சமூக - ஜனநாயகம் இல்லாத சமூக - ஜனநாயகவாதிகள் என்றும், சிறப்பாகப் புரட்சிக்கு முன்னரும் கணிசமான அளவு புரட்சிக் காலத்திலும் அவ்வாறு இருந்தது என்றும் கதைகளை இட்டுக்கட்டிப் பரப்புபவர்கள் இருக்கிறார்கள்.

1905-ல் ருஷ்யாவில் சமூக - ஜனநாயகத் தொழிலாளர் கட்சி தலைமை தாங்கி நடத்திய வெகுஜனப் புரட்சிப் போராட்டத்தின் மேல் உள்ள வெறுப்பின் காரணமாக மிதவாதிகள் இந்தப் பொய்யைப் பரப்புகிறார்கள். சோஷலிஸ்டுகளில் ஒரு சிலர் அறிவீனம் அல்லது பொறுப்பின்மை காரணமாக இந்தப் பொய்யைத் திருப்பிச் சொல்லுகிறார்கள். இவான் வஸீலியெவிச் பாபுஷ்கினது வாழ்க்கைக் கதை, இந்த இஸ்க்ராவாதித் தொழிலாளருடைய பத்தாண்டு சமூக - ஜனநாயக வேலை, மிதவாதிகளின் பொய்க்குக் கண்கூடான மறுப்பாக விளங்குகிறது.

புரட்சிக்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்பே தொழிலாளர் சமூக - ஜனநாயகக் கட்சியை அமைக்கத் தொடங்கிய முன்னணித் தொழிலாளர்களில் இ.வ. பாபுஷ்கின் ஒருவர். பாட்டாளி வர்க்க வெகு ஜனங்களிடையே இத்தகைய முன்னணியினர் ஓய்வு ஒழிவின்றி, வீரம் நிறைந்த பிடிவாதத்துடன் வேலை செய்திரா விட்டால் ருஷ்யாவின் சமூக - ஜனநாயகத் தொழிலாளர் கட்சி பத்து ஆண்டுகள் மட்டும் அல்ல, பத்து மாதங்கள் கூட நிலைத்திருக்க முடிந்திராது. இத்தகைய முன்னணியினரின் செயல்கள் காரணமாகவே, அவர்களுடைய ஆதரவின் பயனாகவே ருஷ்யாவின் சமூக - ஜனநாயகத் தொழிலாளர் கட்சி மாபெரும் அக்டோபர், டிசம்பர் நாட்களில் பாட்டாளி வர்க்கத்துடன் பிரிக்க முடியாதபடி ஒன்று கலந்த கட்சியாக, இரண்டாவது டூமாவில் மட்டுமின்றி மூன்றாவது, கறுப்பு நூற்றுவர் டூமாவிலும் தொழிலாளிப் பிரதிநிதிகளின் வடிவில் இந்தத் தொடர்பை நிலையாக வைத்திருந்த கட்சியாக 1905-ம் ஆண்டுக்குள் வளர்ச்சி பெற்றது.

அண்மையில் காலஞ்சென்ற முதல் டூமாத் தலைவர் செ.அ. மூரொம்த்செவை மக்கள் வீரராக மாற்ற மிதவாதிகள் (காடேட்டுகள்) விரும்புகிறார்கள். மூரொம்த்செவ் போன்ற நிதானப் போக்குள்ள, தீங்கற்ற அலுவலர்களைக் கூத் தொல்லைப்படுத்திய ஜார் அரசாங்கத்தின் பால் இகழ்ச்சியையும் வெறுப்பையும் வெளியிடுவதற்குரிய சந்தர்ப்பத்தை சமூக - ஜனநாயகவாதிகளான நாம் நழுவவிடக் கூடாது. மூரொம்த்செவ் வெறும் மிதவாதி அலுவலர் மட்டுமே. அவர் ஜனநாயகவாதியாகக் கூட இல்லை. வெகு ஜனங்களின் புரட்சிப் போராட்டத்தைக் கண்டு அவர் அஞ்சினார், இத்தகைய போராட்டத்தின் வாயிலாக அல்ல, ஜாரின் எதேச்சாதிகாரத்தினது நல்லெண்ணத்தின் மூலம், ருஷ்ய மக்களின் இந்த மிகக் கொடிய, இரக்கமற்ற பகைவனுடன் **ஒப்பந்தம்** செய்து கொள்வதன் மூலம் ருஷ்யா விடுதலை பெறும் என்று அவர் எதிர்பார்த்தார். இத்தகைய மனிதர்களை ருஷ்யப் புரட்சியின் மக்கள் வீரர்களாகக் கருதுவது நகைப்புக்கு இடமானது.

உண்மையான மக்கள் வீரர்கள் இருக்கிறார்கள். பாபுஷ்கின் போன்றவர்கள் இவர்கள். புரட்சிக்கு ஓர் ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் அல்ல, முழுமையாகப் பத்து ஆண்டுகள் முன்னரே தொழிலாளி வர்க்கத்தை விடுவிப்பதற்கான போராட்டத்தில் தங்களை முற்றாக ஈடுபடுத்திக் கொண்டவர்கள் இவர்கள். தனி மனிதர்களின் பயனற்ற பயங்கர நடவடிக்கைகளில் தங்களை வீணடித்துக் கொள்ளாமல், பாட்டாளி வெகுஜனங்களிடையே விடாப்பிடியாக, இடைவிடாமல் செயலாற்றி, அவர்களது உணர்வையும் அவர்களது ஒழுங்கமைப்பையும் சுதந்திரமாகப் புரட்சிச் செயல் புரியும் அவர்களது திறனையும் வளர்க்க உதவியவர்கள் இவர்கள், நெருக்கடி தொடங்கி, புரட்சி வெடித்துக் கிளம்பி, கோடானு கோடி மக்கள் இயக்கத்தில் ஈடுபட்ட போது, ஜாரின் எதேச்சாதிகாரத்துக்கு எதிரான வெகுஜன ஆயுதப் போராட்டத்துக்குத் தலைமை ஏற்றவர்கள் இவர்கள். ஜாரின் எதேச்சாதிகாரத்திடமிருந்து பெறப்பட்டவை எல்லாம், பாபுஷ்கின் போன்ற மனிதர்களால் தலைமை ஏற்று நடத்தப்பட்ட வெகு ஜனங்களின் போராட்டம் ஒன்றால் மட்டுமே பெறப்பட்டன.

இத்தகைய மனிதர்கள் இல்லாவிட்டால் ருஷ்ய மக்கள் என்றென்றைக்கும் அடிமை மக்களாக, அடிவருடி மக்களாக இருந்திருப்பார்கள். இத்தகைய மனிதர்கள் இருக்கும்போது ருஷ்ய மக்கள் எல்லா வகையான சுரண்டலிலும் இருந்து முழு விடுதலையைப் போராடிப் பெறுவார்கள்.

1905-ம் ஆண்டு டிசம்பர் மாத எழுச்சியின் ஐந்தாவது ஆண்டு நிறைவு இப்போது வந்துவிட்டது. இந்த ஆண்டு நிறைவைக் கொண்டாடுகையில் பகைவருடன் போராடி உயிர் துறந்த முன்னணித் தொழிலாளர்களை நினைவு கூர்வோம். அந்தக் காலத்துப் போராட்டத்தின் நினைவுக் குறிப்புக்களையும், பாபுஷ்கினைப் பற்றிய அதிகப்படித் தகவல்களையும் 1905-ம் ஆண்டு எழுச்சியில் உயிர்த் தியாகம் செய்த பிற சமூக - ஜனநாயகத் தொழிலாளர்களைப் பற்றிய விவரங்களையும் சேகரித்து எங்களுக்கு அனுப்பும்படித் தொழிலாளித் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

இத்தகைய தொழிலாளர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய சிற்றேடு வெளியிட நாங்கள் விரும்புகிறோம். இத்தகைய சிற்றேடு எல்லா விதமான சமுசயவாதிகளுக்கும் ருஷ்யாவின் சமூக - ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மதிப்பைத் தாழ்த்துபவர்களுக்கும் தக்க பதிலாக இருக்கும். இத்தகைய சிற்றேடு இளம் தொழிலாளர்கள் படிப்பதற்கு ஏற்ற சிறந்த நூலாக விளங்கும். அரசியல் உணர்வு உள்ள ஒவ்வொரு தொழிலாளியும் எப்படி வாழவும் செயல் புரியவும் வேண்டும் என்பதை அவர்கள் இதிலிருந்து கற்றுக் கொள்வார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்க மோகம்



இன்றைய பொழுதுக்கு வேலை கிடைக்குமா என்று ஏக்கத்துடன் கட்டிடத் தொழிலாளிகள் நெடுஞ்சாலை முச்சந்திகளில் நிற்கிறார்கள். கணினி வல்லுநர்கள் என்று தங்கள் காலரைத் தூக்கி விட்டுக் கொள்ளும் மூளை உழைப்பாளிகளும் முச்சந்தியில்தான் நிற்கப் போகிறார்கள். அது தகவல் நெடுஞ்சாலையின் முச்சந்தியாக இருக்கும் — என்று சென்ற இதழில் இக்கட்டுரையின் இறுதியில் குறிப்பிட்டிருந்தோம்.

இத்தொடரின் அடுத்த பகுதி அச்சேறுவதற்கு முன்னரே இதற்கான நிரூபணம் வந்துவிடும் என்று எதிர்பார்க்கவில்லை.

'எச்-1-பி விசா'வின் கீழ் கணினி நிறுவனங்களில் வேலை செய்ய அமெரிக்கா சென்ற 2.5 லட்சம் பேரின் விசா காலம் முடிந்துவிட்டது. இதில் 40% பேர் இந்தியர்கள். எனவே அனைவரும் அமெரிக்க சொர்க்கத்தைக் காலி செய்து இந்திய நரகத்திற்குத் திரும்ப வேண்டும்.

திரும்புவார்களா? திரும்ப மனம் வருமா? வேறு ஏதாவது நிறுவனத்தில் சில ஆண்டுகளுக்கு ஒப்பந்தக் கூலியாகச் சேர்ந்துவிட்டால் தொடர்ந்து அங்கேயே இருக்கலாம். ஆனால் இவர்களுடைய நிலைமையைப் புரிந்து கொண்ட அமெரிக்க முதலாளிகள் ''அடிமாட்டுக் கூலிக்கு வேலை செய்யச் சம்மதமா?'' என்று கேட்பார்கள்.

டாலரைச் சுவைத்தவர்கள், முதலாளியாகும் கனவில் திளைப்பவர்கள் அதற்கும் சம்மதிக்கத்தான் செய்வார்கள். தங்களது நிலைமையை நாட்டுப்புறக் கதையொன்றின் மூலம் விளக்கியிருக்கிறார், ஒரு வெளிநாட்டில் குடியேறிய இந்தியர்.

**கடலை அள்ளிய குரங்குகள்!**

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியின் வேடர்கள் குரங்கு பிடிப்பதற்கு ஒரு தந்திரம் செய்வார்களாம். குறுகலான கழுத்தும் அகன்ற வாயும் கொண்ட ஒரு செம்பில் கைப்பிடியளவு கடலையைப் போட்டு வைத்துவிட்டு சுற்றிலும் கொஞ்சம் கடலையை இறைத்து வைப்பார்களாம்.

தரையில் கிடக்கும் கடலையை உரித்துத் தின்ற குரங்கு செம்பிற்குள்ளும் கையை விடும். உள்ளேயிருக்கும் கடலையை அள்ளிய பின் கையை வெளியே எடுக்க முடியாது. கடலையைப் போட்டு விட்டால் கையை உருவி விடலாம். ஆனால் கையில் அள்ளிய கடலையை விட குரங்கிற்கு மனம் வராது. எனவே கையும் வெளியே வராது. தரையில் இறைத்த நாலு கடலைப் பருப்புதான் வேடனுக்கு செலவு. குரங்குடன் செம்பும் கடலையும் வேடன் கையில் சேர்ந்து விடும்.

கடலையை விட முடியாத குரங்கின் நிலைதான் வெளிநாட்டில் குடியேறிய இந்தியர்களின் நிலை. இருப்பினும் அமெரிக்க திக்விஜயம் செய்திருக்கும் வாஜ்பாயி - குரங்குப்படைத் தலைவர் என்ற முறையில் - அமெரிக்க செம்பிற்குள் கை நுழைத்த இந்தியக் குரங்களுக்காக நிச்சயமாக கிளிண்டனிடம் மன்றாடியிருப்பார்.

**தொலைக்காட்சி அறிமுகமான போது இதன் மூலம் குக்கிராமம் வரை கல்வியைப் பரப்பலாம், மூடநம்பிக்கைகளை ஒழிக்கலாம் என்றுதான் கூறப்பட்டது. ஆனால் கோல்கேட் பற்பசையும் நிர்வாண நடனமும், மந்திரவாசல் பேயும் தானே குக்கிராமம் வரை பரப்பப் பட்டிருக்கிறது!**

ஒரு லட்சம் இந்தியர்களுக்குச் சீட்டுக் கிழிந்த இந்தச் செய்தியைச் சுண்டு விரல் அளவில் வெளியிட்டிருந்த தினமணி, ''இந்தியாவும் தொழில்நுட்ப வல்லரசாகும்'' என்று பில் கேட்ஸ் பேசியதை முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் வெளியிட்டு மகிழ்ந்திருந்தது.

இந்த வெட்கக் கேட்டை எங்கே சொல்லி அழுவது? ''யுவர் ஹைனஸ்'' என்று வெள்ளைக்காரன் போலிப் பணிவுடன் அழைப்பதைக் கண்டு மீசையைத் தடவிக் கொண்ட புதுக்கோட்டை, தஞ்சாவூர் பென்சன் 'மகா' ராஜாக்களின் மகிழ்ச்சியைப் போல இருக்கிறது இது.

இந்தியாவில் பில் கேட்ஸ் கையெழுத்திட்ட ஒப்பந்தம் அன்றைக்கே இந்தக் கேலிக் கூத்தை நிரூபித்துவிட்டது.

**பில்கேட்சின் தளபதி நாராயண மூர்த்தி!**

உலகெங்கிலும் உள்ள 100 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு கணினி - இணையத்தின் மீதான தனது ஏகபோகத்தைத் தக்க வைத்துக் கொள்ள புதிய தொழில் நுட்பத்தைப் புகுத்துகிறது மைக்ரோ சாப்ட். அந்த 100 சமஸ்தானாதிபதிகளில் ஒருவர்தான் இந்திய வல்லரசை உருவாக்கக் கனவு கண்ட **இன்போசிஸ்** நாராயண மூர்த்தி.

மைக்ரோ சாப்டின் உலக ஏகபோகத்திற்கு ஒத்து ஊதும் ஒப்பந்தம் பொருளாதார அரங்கில் கையெழுத்தாகிக் கொண்டிருந்த அதே சமயத்தில், அமெரிக்க வல்லரசின் அரசியல் - இராணுவ மேலாதிக்கத்திற்கு ஆதரவாக ஆளில்லாத அமெரிக்க காங்கிரசில் கச்சேரி செய்து கொண்டிருந்தார் பிரதமர் வாஜ்பாயி.

அறிவாளிகள் முதலாளிகளாவது, இந்தியா வல்லரசாவது என்பதெல்லாம் சாத்தியமாகாத வெறும் கனவு என்பது சாத்தியமான அனைத்து வழிகளிலும் நிரூபிக்கப்பட்டுவிட்டது. எனினும் இப்பிரச்சாரம் ஓயவில்லை.

**பேய் பிடித்தவர்களிடம் பேசிப் பாருங்கள்!**

தகவல் தொழில்நுட்பப் பேய் பிடித்த, பிறப்பால் இந்தியனும் சிந்தனையால் அமெரிக்கனுமான நடுத்தர வர்க்க நபர்களிடம் பேசிப் பாருங்கள்.

''இது சாத்தியமற்ற கனவு'' என்று அவர்களிடம் சொன்னால் உங்கள் மீது பாய்ந்து குதறி விடுவார்கள். கடின உழைப்


படிப்பகம்

www.padippakam.com

புக்கும், புதிய முயற்சிக்கும் தயாராக இல்லாத சோம்பேறி என்றும், எதையும் அவநம்பிக்கையுடன் பார்க்கின்ற எதிர் மறைச் சிந்தனைக்காரன் என்றும் உங்களைக் குற்றம் சாட்டுவார்கள்.

சிலிகான் பள்ளத்தாக்கில் சில நூறு இந்தியர்கள் லட்சாதிபதிகளாகியிருப்பதையும், சிலர் கோடீசுவரர்கள் ஆகியிருப்பதையும் உங்களுக்கு மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டுவார்கள்.

எல்லோரும் பல்லக்கில் ஏறிவிட்டால் தூக்குவது யார்? எல்லா இந்தியர்களும் கோடீசுவரர்கள் ஆகிவிட்டால் கூலிக்கு வேலை செய்வது யார், பில் கேட்ஸா - என்ற கேள்வி ஒரு புறமிருக்கட்டும். இவர்களது கூற்றுப்படி இந்தியக் கணினி அறிவாளிகள் எல்லோரும் லட்சாதிபதிகளாகவும், கோடீசுவரர்களாகவும் ஆகிவிட முடியும் என்றே வைத்துக் கொள்வோம். சாத்தியம் என்றாலும் அது சரியா?

**சாத்தியமானாலும் அது சரியானதா?**

அமெரிக்காவில் கணினிப் பொறியாளர்கள் மணிக்கு 1000 ரூபாய் சம்பாதிக்கிறார்கள். ஒரு இந்திய விவசாயி மாதம் முழுவதும் உழைத்தாலும் பெற முடியாத ஆயிரம் ரூபாய் வருமானத்தை ஒரு மணி நேரத்தில் பெறுகின்ற அளவுக்கு அந்த உழைப்பின் சமூகப் பயன் என்ன?

நகரத்தின் பாதாளச் சாக்கடைகளிலும் கழிவுநீர்க் குட்டைகளிலும் இறங்கிச் சுத்தம் செய்வதன் மூலம் லட்சக் கணக்கான மக்களை நோய்த் தொற்றிலிருந்து காப்பாற்றும் துப்புரவுத் தொழிலாளியின் உழைப்பைக் காட்டிலும் இது எந்த வகையில் கடினமான உழைப்பு?

உடல் உழைப்பாளர்களை விடுங்கள். அணைக் கட்டுகளையும், மின் நிலையங்களையும், சாலைகளையும், ஆலைகளையும் உருவாக்கப் பாடுபடும் இந்தியப் பொறியாளர்கள் ஒரு மாதத்தில் பெறும் சம்பளத்தை ஒரே நாளில் ஈட்டுகின்றார்களே கணினிப் பொறியாளர்கள் - இவர்களின் மூளை உழைப்பு எந்த வகையில் அதி உன்னதமானது?

தகவல் தொழில்நுட்பத்தில் இத்தகையதொரு புரட்சி ஏற்படுவதற்கு முன் பொறியியலிலும், கணிதத்திலும் முதுகலைப் பட்டம் பெற்ற மாணவர்கள் ஏதோ ஒரு தனியார் நிறுவனத்திலோ அரசுத் துறையிலோ 5000, 10000 ரூபாய்க்கு வேலை செய்து கொண்டிருக்கிறார்களே அவர்களை கணினிப் புரட்சியின் காலத்தில் பிறக்கத் தவறிய துரதிருஷ்டசாலிகள் என்பதா? அல்லது அவர்களை விட இவர்கள்தான் அறிவாளிகள் என்பதா?

நாளை வரவிருக்கும் உயிரியல் தொழில்நுட்பப் புரட்சி தகவல் தொழில்நுட்பக்காரர்களைப் பின்தள்ளி விட்டாலோ, அல்லது கறிக் கோழிகளைப் போல பொரித்துத் தள்ளப்படும் கணினி வல்லுனர்களின் கூட்டம் பெருத்துப் போய் "கூறு இரண்டு ரூபாய்" என்ற நிலைமை வந்து விட்டாலோ இந்த அறிவாளிகளின் மூளையை எங்கே எடை போடுவது - கசாப்புக் கடையிலா?

**கணினியிலிருந்து பிறக்குமா கரன்சி நோட்டு?**

இவர்களுக்குத் தரப்படும் இந்த 'நட்சத்திரச் சம்பளத்திற்கான பணம் எங்கிருந்து வருகிறது? கணினியே அதை உற்பத்தி செய்கிறதா? குதிரைப் பந்தயத்தின் பரிசுத் தொகையை குதிரை உற்பத்தி செய்வதில்லை.

ஒரு வர்க்கத்திடமிருந்து எடுக்காமல் வேறொரு வர்க்கத்திற்கு வழங்கவும் முடியாது.

உலகமயமாக்கத்தின் உடன் பிறப்பான தகவல் தொழில்நுட்பப் புரட்சி இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையிலான வேறுபாட்டை பன்மடங்கு அதிகரிக்கிறது என்ற உண்மையை அமெரிக்க இந்திய ஆளும் வர்க்கங்களே வேறு வழியின்றி ஒப்புக் கொண்டிருக்கின்றன.



மைக்ரோ சாப்டின் உலக ஏகபோகத்திற்கு ஒத்து ஊதும் பா.ஜ.க. அரசின் அமைச்சர் பிரமோத் மகாஜன் - பில் கேட்சுடன்.

கனவிலும் நினைத்துப் பார்த்திராத தங்கப் புதையலைத் தமக்கு வழங்கியிருக்கின்ற தகவல் தொழில்நுட்பப் புரட்சிதான், கோடிக் கணக்கான தொழிலாளர்களைக் குப்பையைப் போல வீசியெறிந்திருக்கிறது என்ற உண்மை இன்றோ அமெரிக்கர்களுக்கு உறுத்துவதில்லை.

தொலைதூர உழைப்பு (Tele working) என்ற பெயரில் பரிதாபத்துக்குரிய 2.5 லட்சம் அமெரிக்க ஏழைகளின் வயிற்றில் அடித்து நாம் பிழைத்துக் கொள்வதும், உள்நாட்டு தொழிலாளர்கள், கணினி வல்லுனர்களைக் காட்டிலும் குறைந்த ஊதியத்திற்கு வேலை செய்து அமெரிக்க ஜெர்மன் இளைஞர்களின் வேலை வாய்ப்பைப் பறிப்பதும், அமெரிக்க ஜெர்மன் பன்னாட்டு முதலாளிகளை மேலும் கொழுக்க வைப்பதும் கருங்காலித் தனம் என்று இவர்கள் வெட்கப்படுவதில்லை.

தமது இரத்தத்தால் அமெரிக்காவை உருவாக்கிய கறுப்பின மக்கள் அமெரிக்கச் சேரிகளில் வாடிக் கொண்டிருக்கும்போது, இந்த திடீர் மாப்பிள்ளைகள் அங்கே லட்சாதிபதியாகத் திட்டம் போடுவதும், கோயில் கட்டி கும்பாபிசேகம் நடத்தி அப்படியே அங்கே ஒரு அக்கிரகாரத்தை உருவாக்குவதும், யூதர்களைப் போல அமெரிக்க அரசியலில் ஒரு செல்வாக்குக் குழுவை உருவாக்கப் போவதாக ஜம்பம் பேசுவதும் திமிர் பிடித்த நடவடிக்கைகள் என்பதை இவர்கள் 'தம் இயல்பிலேயே' உணர்வதில்லை.

**இந்தியாவைக் கொள்ளையடி எங்களுக்குப் பங்கு கொடு!**

அமெரிக்க ஐரோப்பிய தொழிலாளர்கள் மீது அக்கறை இல்லை என்பது கிடக்கட்டும். உலக மயமாக்கத்தின் விளைவாக விவசாய விளை பொருட்களும், பால் பொருட்களும், ஐரோப்பாவின் ஆடம்பர அழகுச் சாதனங்களும், அமெரிக்காவின் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் கட்டுப்பாடோ உச்ச வரம்போ இல்லாமல் இந்தியாவிற்குள் திணிக்கப்படுவதை இவர்கள் அறிவார்கள்.

இதன் விளைவாகத்தான் தேயிலை, ரப்பர், கரும்பு, தென்னை விவசாயிகளும், கால்நடை வளர்ப்போரும், கோவை மில்களும், சிறிய தொழிற் சாலைகளும் நசிந்து விட்டன என்பதையும் வாழ வழியற்ற விவசாயிகள் வேலைதேடி நாடோடிகளாக அலைகிறார்கள் என்பதையும் அறிவார்கள்.

இருந்தாலும் இவற்றையெல்லாம்



படிப்பகம்

www.padippakam.com



''மின்சாரக் கட்டண உயர்வு, விவசாயத்திற்கு மானியம் ரத்து, கணினி நிறுவனங்களுக்கு எல்லாச் சலுகையும் உண்டு'' ஆண்டையிடம் பட்டியலிடும் அடிமை சந்திரபாபு நாயுடு.

இறக்குமதி செய்தால்தான் தங்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்து கொள்ள முடியும் என்பதால் இவர்கள் உலகமயமாக்கத்தை ஆதரிக்கிறார்கள்.

சென்னையில் பாஸ்ட் புட் கடைகளில் சிற்றுண்டியைச் சுவைத்தபடியே கோக் பருகிக் கொண்டிருக்கும் இவர்களிடம் பருத்தி விவசாயிகள் பூச்சி மருந்து குடித்துச் சாவதைச் சொல்லுங்கள். ஏதோ மாயாஜாலக் கதையைக் கேட்பது போன்ற வியப்புடனும், கொஞ்சம் அனுதாபம் கலந்த விழிகளுடனும் அதைக் கேட்பார்கள். பின்னர் ''அதற்கு நான் என்ன செய்ய முடியும்'' என்று தோளைக் குலுக்குவார்கள்.

சந்திரபாபு நாயுடுவின் சைபராபாத்தில் சுற்றுச் சூழல் சட்டம், தொழிற்சாலைச் சட்டம், குறைந்த பட்ச ஊதிய சட்டம், ஒப்பந்தக்கூலிச்சட்டம், இ.எஸ்.ஐ. சட்டம் ஆகிய அனைத்துச் சட்டங்களிலிருந்தும் விற்பனை வரியிலிருந்தும் கணினி நிறுவனங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதை உற்சாகமாக விவரிப்பார்கள். மின்கட்டண உயர்வுக்கெதிரான போராட்டம் அதே ஐதராபாத்தில் ஒடுக்கப்பட்டதை நீங்கள் குறிப்பிட்டால் ''நாம் இன்னும் எத்தனை காலத்துக்கு இவர்களுக்குச் சலுகையும் மானியமும் வழங்க முடியும்?'' என்று கேட்பார்கள்.

**சேவைப் பொருளாதாரமா சாவுப் பொருளாதாரமா?**

''கணினிக்கு மானியம் வேண்டும் - விவசாயத்திற்கு மானியம் கூடாது'' என்று கூறுவதை இவர்கள் முரண்பாடாகக் கருதுவதில்லை. பொருள்களை உற்பத்தி செய்யும் பொருளாதாரம் காலாவதியாகி விட்டதாகவும் சேவைப் பொருளாதாரத்திற்குத்தான் இனி எதிர்காலம் என்றும் இவர்கள் நம்புகிறார்கள்.

நாடார் கடையில் அன்றாடம் இரண்டு ரூபாய்க்குக் குழம்புச் சாமான் வாங்கும் பெண்ணுக்கும், பலூனைவிட உயர்ந்த வேறெந்த விளையாட்டுப் பொருளையும் அறியாத கிராமத்துச் சிறுவனுக்கும், டயர் செருப்பு - வெற்றிலை பாக்குக்கு மேல் வேறெந்த நுகர்பொருளையும் அறியாத விவசாயிக்கும் - சேவைப் பொருளாதாரத்திற்கும் என்ன சம்பந்தம்?

மக்கள் தொகையில் 10 சதவீதமே உள்ள மேட்டுக்குடி வர்க்கத்திற்கு அவர்களே இதுவரை எண்ணிப் பார்த்திராத சேவைகளை உருவாக்கி வழங்குவதும், 90 சதவீத மக்களுக்கு ஏற்கனவே கிடைத்து வந்த சில பொதுச் சேவைகளை ஒழிப்பதும்தான் இந்தச் சேவைப் பொருளாதாரத்தின் செயல்பாடு.

அரசு மருத்துவமனைகளை மூடுவது - நட்சத்திர மருத்துவமனைகளைத் துவங்குவது, கிராமப்புறச் சாலைகளைப் பராமரிக்காமல் அழிப்பது - பெருநகரங்களுக்கிடையே சூப்பர் ஹைவே எனும் ஆறு தட நெடுஞ்சாலைகளை அமைப்பது; குடிநீர் இல்லாத கிராமங்களைத் தாகத்தில் தவிக்க விடுவது - பாட்டில் 15 ரூபாய்க்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விற்பனை செய்வது... இதுதான் சேவைப் பொருளாதாரம்!

''இனி சேவைப் பொருளாதாரத்திற்குத்தான் எதிர்காலம்'' என்ற கூற்றின் பொருள் இனி மேட்டுக்குடியினர்க்கு மட்டும்தான் எதிர்காலம், 90 சதவீத மக்களுக்கு எதிர்காலம் இல்லை என்பதுதான்.

உற்பத்திப் பொருளாதாரத்தின் மீது மொய்க்கும் இந்த ஈ- பொருளாதாரம் (Electronic Economy) தனது செயல்பாட்டிலும் ஈக்களையே ஒத்திருக்கிறது. பொருளாதாரத்தின் மீது மொய்க்கிறது; உறிஞ்சுகிறது; தன் பங்குக்குப் பொருளாதார, கலாச்சார நோய்களையும் சீர்குலைவுகளையும் அதிவேகமாக உலகெங்கும் பரப்புகிறது.

உலகின் 10 சதவீதமே உள்ள வசதி படைத்தோருக்கு சேவையும், 90 சதவீத மக்களுக்குச் சாவையும் அருள்வதுதான் இந்தப் புதிய பொருளாதாரம்.

**சாத்தியப்பாடு கிடக்கட்டும் பயன்பாடு என்ன?**

கணினி - இணையம் - தகவல் தொழில்நுட்பத்தின் உதவியால் கல்வியைப் பரப்பலாம், தகவல் தொடர்பைத் துரிதப்படுத்தலாம், மருத்துவத்தைப் பரப்பலாம்... என்று கணினிப் புரட்சியின் சாத்தியப்பாடுகளை நமக்குப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்கள்.

தொலைக்காட்சி அறிமுகமானபோது இதன் மூலம் குக்கிராமம் வரை கல்வியைப் பரப்பலாம், மூடநம்பிக்கைகளை ஒழிக்கலாம் என்றுதான் கூறப்பட்டது. ஆனால் கோல்கேட் பற்பசையும் நிர்வாண நடனமும், மந்திரவாசல் பேயும் தானே குக்கிராமம் வரை பரப்பப்பட்டிருக்கிறது!

எந்தவொரு விஞ்ஞான தொழில்நுட்பக் கண்டுபிடிப்பும் மக்களின் வாழ்க்கையில் தோற்றுவிக்கக் கூடிய முன்னேற்றங்களை அந்தத் தொழில்நுட்பத்தின் சாத்தியப்பாட்டில் இருந்து பரிசீலித்துப் பயன் இல்லை. நிலவுகின்ற சமூகத்தில் அதன் பயன்பாடு யாருக்கு லாபமளிக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதுதான் முக்கியமானது.

அந்த வகையில் இந்த இணையப் புரட்சியின் பொருளாதார ரீதியான பயன்பாட்டைப் பரிசீலிப்போம்.



''நாயுடுவைப் போல நானும் நல்ல அடிமைதான்'' ஆண்டையின் திருப்பார்வைக்கு ஏங்கி நிற்கும் கர்நாடக முதல்வர் கிருஷ்ணா.


படிப்பகம்

www.padippakam.com

## சி.ஐ.ஏ. இந்தியர்கள்

இந்தியாவில் வேலை கிடைக்காமல் வளைகுடா நாடுகளுக்கும், சிங்கப்பூருக்கும் ஓடுகின்ற தொழிலாளிகளுக்கும், அமெரிக்காவுக்கு ஓடும் அறிவாளிகளுக்குமிடையே உள்ள வேறுபாட்டை ஏற்கனவே விளக்கியிருந்தோம்.

இங்கே வேலை கிடைக்கவில்லை என்ற ஒரு காரணத்தினால் மட்டும் இவர்கள் அமெரிக்கா செல்வதில்லை. தங்கள் திறமைக்கு ஏற்ற மதிப்பு (ஊதியம்) இங்கே கிடைப்பதில்லை என்பதுதான் அவர்களுடைய முக்கியமான குற்றச்சாட்டு. திறமைக்கேற்ற ஊதியம் தருபவன் யாராக இருந்தாலும், எந்த நாடாக இருந்தாலும் அங்கே வேலை பார்ப்பதில் என்ன தவறு என்பதுதான் இவர்களது வாதம். அதாவது உலகமயமாக்கத்தின் வாதம்.

அந்த வகையில், அமெரிக்க இராணுவத்திற்கு மறைமுகமாக வேவு பார்க்கும் மைக்ரோசாப்ட் போன்ற நிறுவனங்கள் முதல் 'விண்வெளி ஆய்வு' என்ற பெயரில் அமெரிக்க இராணுவத்தின் மின்னணு யுத்தத்திற்கு தயாரிப்பு வேலைகள் செய்யும் நாசா நிறுவனம் வரையில் அனைத்திலும் சுமார் 25 முதல் 35 சதவீதம் இந்தியர்கள் வேலை செய்கிறார்கள்.

மூளை உழைப்புக்குப் பொருந்தும் இந்த நீதியை உடல் உழைப்புக்கும் பொருத்தினால் என்ன? உடல் வலிமை கொண்ட இந்தியர்கள் உலகின் எந்த நாட்டு இராணுவத்தில் நல்ல சம்பளம் கிடைக்கிறதோ அதில் சேர்ந்து கொள்ள பா.ஜ.க. அரசு அனுமதிக்கலாமே!

அமெரிக்க ராணுவத்திற்கு வேலை செய்யும் இந்திய அறிவாளிகள் 'சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள்' என்று அழைக்கப்படுவதில்லை. பாகிஸ்தானில் பயிற்சி எடுக்கும் காசுமீரிகள் மட்டும் 'ஐ.எஸ்.ஐ. கைக்கூலிகள்' என்று தூற்றப்படுவது ஏன்? உலகமயமாக்கத்தின் நீதிக்கு இது ஒத்து வரவில்லையே!

## ஐ.எஸ்.ஐ கைக்கூலிகள்!

**நிதிமூலதனச் சூதாட்டமே மின் - வணிகத்தின் பயன்பாடு**

இணையத்தின் மூலம் நடைபெறும் மின் வணிகத்தில் (E. commerce) ஒரு நாளைக்கு 1.5 டிரில்லியன் டாலர் (ஒரு டிரில்லியன் = பத்தாயிரம் கோடி கோடிகள்) புரள்கிறது. இந்தத் தொகையில் 85% நாணயச் சூதாட்டத்தின் விளைவாகப் புரளும் தொகையாகும்.

இந்தியாவில் உள்ள பன்னாட்டு வங்கிகளும் நிதிநிறுவனங்களும் தமது கையிருப்பில் உள்ள ரூபாயை டாலராக்குவது, டாலரை ஸ்டெர்லிங் ஆக்குவது, பிறகு அதையே ரூபாய்க்கு மாற்றுவது என 24 மணி நேரத்தில் நூற்றுக்கணக்கான வர்த்தகங்களை நடத்தி விடுகின்றன. நாணயங்களுடன் பங்குகளும், அரசுகளின் கடன் பத்திரங்களும் இவ்வாறு சூதாடப்படுகின்றன.

இணையத்தின் மூலம் நடைபெறும் வர்த்தகத்தில் நூற்றுக்கு ஒன்றரை ரூபாய் மட்டுமே உண்மையாகப் பொருளை வாங்குவது மற்றும் விற்பது தொடர்பான வர்த்தகம். மீதி அனைத்தும் நிதி மூலதனத்தின் சூதாட்டம் தான். இணையத்தின் மூலம் நடைபெறும் இந்த மின் வணிகத்தின் மீது நம் நாட்டின் ரிசர்வ் வங்கிக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை. அதாவது டாலருக்கெதிராக ரூபாயின் மதிப்பு படுபாதாளத்திற்கு வீழ்ச்சியடைந்தாலும் அதைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் மத்திய அரசுக்கும் வங்கிக்கும் கிடையாது.

சமீபத்தில் தாய்லாந்து மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளதாரம் ஓரிரு நாட்களில் திவாலாக்கப்பட்டதும் அந்நாடுகளின் நாணய மதிப்பு வீழ்ந்ததால் அரிசி, எரிபொருள் மற்றும் அனைத்துப் பொருட்களின் விலையும் இரண்டே நாட்களில் 400, 500 சதவீதம் உயர்ந்ததும், அதையொட்டி பட்டினிச்சாவுக்குத் தள்ளப்பட்ட மக்கள் கடைகளில் புகுந்து சூறையாடியதும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

**ஏழை நாடுகளுக்கெதிரான மின்னணு யுத்தம்!**

இது ஒரு வகையான மின்னணு யுத்தம். உட்கார்ந்த இடத்திலிருந்தே ஈராக் மீது அமெரிக்க ராணுவம் நடத்திய மின்னணுப் போருக்கு எந்த விதத்திலும் குறைவில்லாத, சொல்லப் போனால் அதைக் காட்டிலும் பெரும் அழிவுகளை நொடியில் ஏற்படுத்தக் கூடிய பொருளாதாரத் துறையிலான மின்னணு யுத்தம்.

சென்ற ஏப்ரல் 4-ந்தேதி பில் கேட்சுக்கு எதிரான தீர்ப்பின் விளைவாக அமெரிக்காவின் நாஸ்டாக் பங்குச் சந்தையில் மைக்ரோசாப்டின் பங்குகள் வீழ்ச்சியடைந்தவுடன் அந்த வீழ்ச்சியின் வரைபடத்தைப் புகைப்பட நகல் எடுத்ததைப் போல் அதே நாளில் அதே நொடியில் பம்பாய் பங்குச் சந்தையும் வீழ்ந்தது. நில நடுக்கத்தைக் காட்டிலும் வேகமாக இந்தச் சரிவை உலகம் முழுவதும் பரவச் செய்தது மின் வணிகம்.

இந்த மதிப்பு வீழ்ச்சியின் விளைவாக ஏகபோக முதலாளிகளும், பங்குச் சந்தை சூதாடிகளும் சுருட்டிய பல ஆயிரம் கோடி ரூபாயையும், இந்தோ - அமெரிக்கர்களுக்கு அதிலிருந்து கிடைக்கக் கூடிய சில நூறு கோடி ரூபாய் எலும்புத் துண்டையும் தமது உழைப்பின் மூலம் ஈடு செய்யப் போவது யார்?

இணையம், மின் வணிகம், செல்போன் போன்ற தகவல் புரட்சி - சேவைப் பொருளாதாரம் சார்ந்த எந்த வசதிகளையும் அனுபவித்திராத, இவற்றைப் பார்த்தேயிராத உழைக்கும் மக்கள்.

இந்தப் பொருளாதாரத்தின் விளைவாக மக்கள் அடைந்துள்ள 'ஆதாயம்' என்பது தொலைக்காட்சியின் 64 சானல்கள் மட்டுமே. இந்தத் தகவல் ஊடகத்தின் மூளைச் சலவை காரணமாகத்தான் உயிர் வரை பிழியும் இந்தச் சுரண்டலை மக்கள் புரிந்து கொள்ளவும் முடியாமல் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

**புல்லுக்குப் பொசியுமாம்!**

உண்மை இவ்வாறிருக்க இதற்கு நேரெதிராகப் பிரச்சாரம் செய்கிறார்கள் இந்தோ - அமெரிக்கர்கள். தாங்கள் திரைகடலோடித் திரவியம் தேடி இந்தியாவின் டாலர் வருமானத்தைப் பெருக்கி அதன் மூலம் ஏழைகளாகவும் தற்குறிகளாகவும் இருக்கும் இந்தியர்களைக் கைதூக்கி விடப் போவதாகப் பேசுகிறார்கள்.

செல்வத்தை உருவாக்குபவர்கள் என்ற முறையில் அவர்கள்தான் முதலில் அதை அனுபவிப்பார்களாம். பிறகு வேலைக்காரிக்கு பழைய சோறு கொடுப்பதைப் போல, தோட்டக்காரனுக்குப் பழைய சட்டையைக் கொடுப்பது போல, இந் நாட்டின் மக்களுக்குத் தமது செல்வத்தை தானம் செய்வோமென்றும் கூறுகிறார்கள்.

உலகமயமாக்கத்தின் பத்தாண்டு கால அனுபவம் ''நெல்லுக்கு இரைத்த நீர் புல்லுக்கும் பொசியும்'' என்ற இந்தப் பித்தலாட்டம் பொய் என்பதை நிரூபித்திருக்கிறது. உலகமயமாக்கத்தை இங்கே துவக்கி வைத்த நரசிம்மராவும் சமீபத்திய உலக வங்கி அறிக்கையுமே இதனைப் பொய் என்று ஒப்புக் கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். சில விவரங்களைப் பார்ப்போம்.



படிப்பகம்

www.padippakam.com

### 70 கோடி மக்கள் இலட்சம் சூதாடிகள்!

தனிநபர்வருமானம் மாதத்திற்கு 1300 ரூபாய்க்கும் குறைவாக ஈட்டுபவர்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ளவர்கள் என்பது உலகளவிலான வறுமைக்கோட்டு வரையறை.

1998-ஆம் ஆண்டு இந்திய அரசின் தேசிய மாதிரி ஆய்வு (National Sample Survey) எடுத்துள்ள கணக்கின்படி இந்திய கிராமப்புற மக்களில் 87% பேரின் தனிநபர் வருவாயோ மாதத்திற்கு ரூ. 560-க்கும் குறைவு.

ஆனால் சென்ற ஒரு ஆண்டில் மட்டும் (1999-2000) இந்திய பங்குச் சந்தைகளில் சூதாடி 4 லட்சம் கோடி ரூபாயைக் கொள்ளையடித்திருக்கிறார்கள் 5 லட்சம் இந்தியர்கள்.

நான்கு லட்சம் கோடி ரூபாய் என்பது 70 கோடி கிராமப்புற விவசாயிகளின் அதாவது மாதம் ரூ. 500 சம்பாதிப்பவர்களின் ஒரு ஆண்டு வருமானமாகும். 70 கோடி உழைப்பாளிகளின் ஆண்டு வருமானத்தை, குளிரூட்டப்பட்ட அறையில் கணிணியின் முன் அமர்ந்தபடி 5 லட்சம் சூதாடிகள் சம்பாதித்து விட்டார்கள்.

உலகமயமாக்கமும் தகவல் புரட்சியும் எந்த வர்க்கத்திற்குப் பயன்பட்டிருக்கிறது என்பதற்குக் கண்ணெதிரில் தெரியும் ஒரு எடுத்துக் காட்டு இது.

> உற்பத்திப் பொருளாதாரத்தின் மீது மொய்க்கும் இந்த ஈ - பொருளாதாரம் (Electronic Economy) தனது செயல்பாட்டிலும் ஈக்களையே ஒத்திருக்கிறது. பொருளாதாரத்தின் மீது மொய்க்கிறது; உறிஞ்சுகிறது; தன் பங்குக்குப் பொருளாதார, கலாச்சார நோய்களையும் சீர் குலைவுகளையும் அதிவேகமாக உலகெங்கும் பரப்புகிறது.

### அவர்களை மறந்துவிடுங்கள்!

உண்மை நிலை இப்படி இருக்க, தகவல் பேய்' பிடித்தவர்கள் ஏன் தலைகீழாகச் சிந்திக்கிறார்கள்? இதற்கான விடையை நாம் சொல்வதை விட சிட்டி பாங்க் எனும் அமெரிக்க வங்கியின் தலைவருடைய வாயால் அதைக் கேட்போம்.

"500 கோடி மக்கள் இந்தப் பூமியில் வாழ்கிறார்கள். ஆனால் நம்முடைய வங்கியைப் பொருத்தவரை அவர்களில் 80 கோடிப் பேர் மட்டுமே நமக்குத் தேவையானவர்கள்"

"இந்தியாவைப் பொறுத்தவரை 90 சதவீதம் மக்களை மறந்துவிடுங்கள். மேல் தட்டைச் சேர்ந்த 10 சதவீதம் பேர் மீது மட்டும் கவனம் செலுத்துங்கள்."

"ஒருவனுடைய கல்வி என்ன, வாழ்க்கை மதிப்பீடுகள் என்ன, அவன் எவ்வாறு வளர்க்கப்படுகிறான் என்பதுதான் 'பணம்' என்பது குறித்த அவனுடைய கண்ணோட்டத்தைத் தீர்மானிக்கிறது. அவன் எந்த தேசத்தைச் சேர்ந்தவன் என்பதல்ல"

"உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்ற முழக்கத்தின் எதிர்மறை இது. "உலக முதலாளிகளே, மேட்டுக்குடியினரே ஒன்று சேருங்கள் - தேசிய உணர்வுகளை விட்டொழியுங்கள்!" என்று அமெரிக்க நிதி மூலதனம் விடுக்கும் அறைகூவல் இது. இந்த அறைகூவலைத்தான் எதிரொலிக்கிறார்கள் இந்தோ - அமெரிக்கர்கள்.

"மற்றவர்களுக்குக் கல்வி கற்கும் உரிமையை மறுத்ததன் மூலம் தம்மை அறிவாளிகளாக்கிக் கொண்டவர்கள்" என்று பார்ப்பனர்களைப் பற்றி ஏளனமாகக் குறிப்பிட்டார் கார்ல் மார்க்ஸ்.

கரும்பலகையும், கல்வியும், அடிப்படைத் தேவைகளும் இந்நாட்டின் பெரும்பான்மை மக்களுக்கு மறுக்கப்பட்டிருப்பதும், சிலர் மட்டும் உயர் தொழில் நுட்பக் கல்வியைப் பெற முடிவதும் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற விசயங்கள் அல்ல; பெரும்பான்மையிடமிருந்து பிடுங்கப்பட்டதுதான் சிறுபான்மைக்கு வழங்கப்பட்டுள்ளது.

●●●

தேச எல்லை கடந்த இந்தச் சிறுபான்மை மேட்டுக்குடியினரும், ஆளும் வர்க்கச் சிந்தனைக்கு ஆட்பட்டவர்களும் தகவல் புரட்சி பற்றியும் உலகமயமாக்கத்தின் தவிர்க்கவியலாத தன்மை பற்றியும், மூளை உழைப்பின் மேன்மை பற்றியும், அறிவுச் சொத்துடமை பற்றியும் பேசும்போது அவர்கள் முதலாளித்துவச் சந்தை விதிகளை இரக்கமற்ற குரலில் பேசுகிறார்கள்.

உலக முதலாளித்துவத்தின் குரலில் இந்தியர்கள் பேசும்போது அது மனுஸ்மிருதியின் சுருதியில் ஒலிக்கின்றது.

(முற்றும்)

● மருதையன்

# தமிழகத்தின் தன்மானத் தலைவர்கள்

*ஆறு கோடித் தமிழர்களுக்கும்*
*ஏற்ற ஒரே*
*தன்மானத் தலைவர்*
*கலைஞர் கருணாநிதிதான்;*

*ஆனால்*
*கழகக் கண்மணிகளே*
*அவரே ஏற்றுக் கொண்ட*
*அவரினும் பெரிய தமிழினத்*
*தலைவர்*
*இருக்கிறார்*
*அவர்தான் ஏ.பி. வாஜ்பாயி;*

*ஆனால் கழகக் கண்மணிகளே*
*அவரினும் மேலான*
*'தலைமை' ஏற்றுக் கொண்ட*
*தலைவர் ஒருவர் இருக்கிறார்*
*அவர்தான் ஐ எம் எஃப் இயக்குனர்*
*ஹார்ஸ்ஃப்ஃஹோலர்;*

*ஆனால்*
*கழகக் கண்மணிகளே*
*அவருக்கும் மேலான*
*தலைமையைக் கட்டுப்படுத்தும்*
*தலைவர் ஒருவர் இருக்கிறார்*
*அவர்தான் உலகவங்கி இயக்குனர்*
*ஜேம்ஸ் அல்ஃபின்ஷின்.*

*ஆனால்*
*கழகக் கண்மணிகளே*
*அவருக்கும் மேலான*
*மாசற்ற மாணிக்கமாக*
*ஒரு தமிழினத் தலைவர் இருக்கிறார்*
*அவர்தான் பில் கிளிண்டன்*

*ஆனால்*
*கழகக் கண்மணிகளே*
*கவலைப்படாதீர்கள்.*
*ஆறு கோடித் தமிழர்களுக்கும்*
*ஏற்ற தன்மானத் தலைவராக*
*கலைஞர் கருணாநிதியும் உண்டு...*

— அர்ப்பணன்
(எல்சால்வடார் கவிஞர் ராக் டால்டன் கவிதையைத் தழுவி எழுதியது)


படிப்பகம்

www.padippakam.com




# வாசகர் கடிதம்

★ விளம்பரமே இல்லாமல் இவ்வளவு செறிவுடன் வரும் தங்களின் இதழை முதன்முறையாகப் படித்தேன். பாராட்டுக்கள். 'அமெரிக்க மோகம்' படித்த பிறகுதான், அங்கே நம் இளைஞர்கள் மூளை கொத்தடிமைகளாக வேலை செய்வது தெரிய வருகிறது. உங்கள் கட்டுரை இன்றைய இளைஞர்களிடம் அமெரிக்கா விடம் அடிமையாகி, அவதிப்படாதே என எச்சரிக்கை மணி கொடுக்கிறது. சிறுகதையைக் கொஞ்சம் குறைத்து விட்டு கலாச்சார சீரழிவுகளை விளக்கி காட்டினால் என் போன்ற வாசகர்களுக்கு பயனாக இருக்கும்.

– துரை பிரசாத், சென்னை.

★ 'வீரப்பனியம்' என்ற தங்கள் கட்டுரை, மிகவும் என்னைக் கவர்ந்தது. பொதுவுடைமை சமுதாயத்தை உருவாக்குவதில் "எந்தப் பாதை சரியானது" என்பதனை விளக்கும் பார்வை உடைய கட்டுரை. மக்கள் தங்கள் சொந்தக் கரங்களால் பறித்து எடுப்பதுதான் புரட்சி, யாரும் வழங்கி வாங்கக்கூடிய பிரசாதம் அல்ல என்பதையும், தியாகத்தின் வரலாற்றை மறந்துவிட்ட இளைய தலைமுறையால் இழந்து போன சோவியத் ரசியாவின் நிலையையும் மிக நன்றாக விளக்கியதற்கு என் பாராட்டுக்கள்.

எத்தனை பேர் படிக்கிறார்கள், எத்தனை இதழ் விற்பனையாகிறது என்ற கணக்கை விட, இது எத்தனை பேர் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதே முக்கியம். அந்த வழியில் உங்கள் பத்திரிகைகள் அறிவுத் தாகத்தை அதிகப்படுத்தி பக்குவப்படுத்துகின்றது. வளரட்டும் தங்கள் பணி.

– பாண்டியன், மதுரை.

★ வி. சேகரின் திரைப்பட விமர்சனம் மிகவும் சரியாக விமரிசிக்கப்பட்டிருக்கிறது. அவரது திரைப்பட சமரசம் போலி கம்யூனிஸ்ட்டுகளின், இன்னும் ஆளும் வர்க்க சீர்திருத்தவாத, பிற்போக்கு நிலப்பிரப்புத்துவ கருத்துக்களின் தொகுதிகளாகவே இருக்கின்றது. சமூக மாற்றம் பற்றிய அவருடைய கருத்து எதுவாக இருப்பினும், தொழில் வேறு, அது வேறு என்றிருப்பதை ஏற்க இயலாது என்பதை பலருக்கும் அறிவிப்பதாக விமர்சனம் அமைந்துள்ளது.

'சிதறு தேங்காய்' சிறுகதையின் விவரணைகள் மிகவும் நுணுக்கமாக இருந்தது. நகர்புறத்து உழைப்பாளி மக்களின் வாழ்க்கையின் சிறு சிறு கணங்களை எடுத்துக்காட்டி, அந்த வர்க்கத்தின் பொருளியல் வாழ்க்கை நிலைமைகள் முழுவதும் இல்லாமையின் துன்பம்தான் என்பதைச் சொல்வதுடன் கூடவே அந்நிலைமையிலும் தன் சக மனிதர்களுடனான உறவுகளில் அவர்கள் இன்புறுகிறார்கள் என்பதையும் நன்றாக சொல்லியிருக்கிறார். கதையில் வாசகனின் கவனத்தை பூசாரி அய்யரின் மீது திருப்பியதற்குப் பதில், கண்ணனின் அம்மா வேலை செய்யும் பணக்கார பார்ப்பனக் குடும்பத்தின் ஊதாரித்தனத்திலும், ஆச்சாரம் பேசும் சாதித் திமிரிலும் கொண்டு போய் நிறுத்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

'ஆறடி நிலம் கூட' சிறுகதையும் சிறப்பாக அமைந்திருக்கிறது. காலனி மக்களின் தலைவராக பக்கிரிசாமி பேசுகிறார். எப்போதும் தோளிலிருக்கும் சிவப்புத் துண்டு இப்போது இடுப்பில் இருந்தது என்று சொல்கிற போது போலிக் கம்யூனிஸ்டாக இருக்கும் அவரை கடிய நமக்கு மனம் வரவில்லை. அந்த அரசியல் தலைமை எப்படி சிவப்புத் துண்டை தோளுக்கும் இடுப்புக்குமாக மாற்றிக் கொள்ள அவரை பழக்கி நியாயப்படுத்தி வைத்திருக்கிறது என்கிற உணர்வுதான் வருகிறது.

அமெரிக்க மோகம் கட்டுரை கணினி அறிவியலைக் கற்றுக் கொண்டு அமெரிக்காவுக்கு சென்று விடும் கனவிலுள்ளவர்களைப் பற்றியதாக அமையும் என்று தான் கருதியிருந்தேன். ஆனால் பில்கேட்ஸ் பணக்காரனானதில் தொடங்கி மூலதனத்தைக் கொண்டுதான் மூலதனம் பெருக்க முடியும் என்கிற பொதுக் கண்ணோட்டத்தை மாற்றி அறிவைக் கொண்டே அனைத்தையும் செய்யலாம், இது அறிவாளிகளின் (கணினி அறிவு மட்டும்தான்) யுகமாக மாறி வருகிறது என்று சுஜாதா போன்றவர்கள் உருவாக்கி வரும் கருத்துக்களைத் தகர்த்திருக்கிறது கட்டுரை.

அறிவைத் தனிவுடைமையாக்கும் முயற்சிதான் எல்லாம் என்று அறிகிற போது கற்போர், விற்போர் உள்ளிட்ட கணினி உலகம் ஏன் விபச்சார சமூக விரோத உலகம் போல இரகசியங்கள் நிறைந்ததாக இருக்கிறது என்பது விளங்கியது. இந்த மாதிரி நடையுடனும், விபரங்கள், உதாரணங்களுடனும் தந்தால் எதையும் தெரிந்து கொண்டு விட முடியுமோ என்கிற நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

– சிங்காரம், திருச்சி.

★ உருது முசுலீம்களின் மொழியா என்ற கட்டுரையின் விளக்கம் சிறப்பு. உருது ஒரு செழுமையான மொழி. உருதை பாகிஸ்தான் அரசு தேசிய மொழியாகக் கொண்டுள்ள காரணத்தினால், அது முசுலீம்களின் மொழி என்ற இந்து மதவெறியர்களின் கூச்சலைத் தோலுரித்திருக்கிறீர்கள். உருது அனைத்து மக்களுக்கான மொழி என்பதைப் புரிந்து கொள்ள தங்கள் தொடர் கட்டுரை பயனுள்ளது.

– செம்மலர் மா. நடராசன்,
அறந்தாங்கி.

## அடைப்புகள்

*வந்துவிட்டது*
*மழைச்சனியன்*

*பாதாள சாக்கடைக்குள்*
*பதுக்கிவிட்டது*
*எங்கள் எதிரிகளை.*

*கார்ப்பரேசனில்*
*சோப்புக்கூட*
*கொடுத்தார்கள்.*

*எத்தனை முறை தேய்த்தாலும்*
*கழுவ முடியவில்லையே*
*நினைவுகளின் அழுக்கை!*

*அடைப்பை நீக்கி வந்து*
*அன்னத்தில் கை வைத்தால்*
*தினம்*
*அடைத்துக் கொள்கிறது*
*தொண்டைக் குழி*

— நிதி. கோமேதகம்


படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நீரோக்கள்

அவர்களும் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள். பூவுலகின் மனப்பெருவெளியில் மிதந்தவண்ணம் தங்களின் உள்ளொளியைக் காப்பாற்றப் போராடுகிறார்கள் அந்த வீரர்கள். 'இதோ இலக்கியம் செய்வதற்கு இங்கொருவன் இருக்கிறேன்' என்பதாக சிலிர்த்துக் கொண்டெழும் அந்த வலிய அவலக் குரலே அவர்களின் வாழ்க்கைப் பணியாகி விடுகிறது. எனில் அது அவர்களின் தொழிலல்ல. தொழிலின்மையை நோக்கிய, யாம் இன்னார் என்று காட்ட வேண்டிய கடுமையான ஒரு இலக்கியப் பயணம். கடுமை என்பது பழைய மொந்தை போக்கி புதிய மொந்தை புனைவதையும் பட்டியலில் இடம் பெறும் வாழ்வா - சாவா போரினையும், பொதுவில் இலக்கியச் சந்தையின் போட்டியையும் சுட்டும்.

''ஐயா, எழுதப்படும் எமது வார்த்தைகளில் யாம் உயிர் வாழ்கிறோம் என்று சொல்ல விரும்புகிறோம்'' என்ற ஒரே சங்கதிக்காக ஒரு இலக்கிய ஜாதியார் இங்கே வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள். நேற்றின் மணிக்கொடி தொட்டு இன்றின் காலச்சுவடு வரை கர்கித வழி வரலாற்றில் கற்றை கற்றையாகப் பதிப்பிக்கப்படும் விசயமும் அதுதான். அப்பேர்ப்பட்ட பதிலொன்றின் பதிவிது.




சுதர்சன் ஜவுளி நிறுவனம்; காலச்சுவடு இலக்கிய நிறுவனம் (பி.லிட்) நாகர் கோவில்; ஆர்.எம். கே.வி பட்டு நிறுவனம், திருநெல்வேலி; சரிநிகர் பத்திரிகை - மொர்ஜ் தன்னார்வ நிறுவனம் - கொழும்பு; ஸ்ரீராம் சிட் ஃபைனான்ஸ் - சென்னை; சென்னை ஆன் லைன் - ஆறாம் திணை இணைய நிறுவனம் சென்னை — ஆகிய ஜவுளி இலக்கிய பைனான்ஸ் இன்டர்நெட் தன்னார்வக் கம்பெனிகள் பண வலிமையுடனும் இலக்கியப் பெருமையுடனும் கலந்தளித்த அந்தக் கருத்தரங்கம் — தமிழ் இனி - 2000.

பாரதியின் வத்தற்குழம்புச் சுவையும், சுஜாதாவின் உருளை சிப்ஸ் ருசியும் கருத்தரங்கத் தலைப்பிலிருக்கிறது என்றால் நடைபெற்ற இடத்திலோ அமெரிக்காவே இருக்கிறது. சென்ற ஒலிம்பிக் போட்டி நடந்தது அமெரிக்காவின் அட்லாண்டா நகரத்தில். தமிழ் இனி பேசப்பட்டதோ அட்லான்டிக் ஓட்டலில். நட்சத்திர விடுதிகள், விமானக் கம்பெனி அலுவலகங்கள், கன்னிமாரா நூலகம், கட்டப்படும் மேம்பாலம், பிஸ்ஸா கார்னர்கள், பெட்டிக் கடை ஓவன் சாண்ட்விச்சுக்கள், யூஸ் அண்டு த்ரோ குவளைகள், அவ்வப்போது வந்து போகும் 40 லட்ச பென்ஸ் கார்கள், கோட் சூட் நிர்வாகிகள், குட்டைப் பாவாடை அழகிகள் என ஏறக்குறைய அமெரிக்கச் சூழ்நிலைதான். பேர் அண்ட் லவ்லி பூசப்பட்ட இடமென்றால் பெருங்காய டப்பா மணம் வீசாமலில்லை.

சொல்பொருள் நிகழ்வுகளைக் கேட்க வந்த பருப்பொருள் பார்வையாளர்கள் ஈழ, இந்திய இன்னபிற தமிழ் மனிதர்களைப் பார்க்கும் போது, இலக்கியம் செழுமையாக இருப்பது புரிந்தது. வேளைக்கொரு உடை, பட்டு, பொன், பொட்டு, விலை உயர் கேமராக்கள், மினரல் வாட்டர் கேன்கள், கசக்கப்படும் பிளாஸ்டிக் குவளைகள், மொத்தத்தில் தோல்களில் சராசரி நிறம் வெள்ளைதான், கருப்போ, மாநிறமோ அல்ல. பாரதி, புதுமைப்பித்தனை விட இன்றைய இலக்கிய வாழ்க்கை பல மடங்கு கலர் ஃபுல்லாக, ரிச்சாகத்தான் இருக்கிறது. கூட்டினால் வரும் 400 தலைகளுக்கான இந்நிகழ்ச்சியின் பட்ஜெட் 40 லட்சத்தைத் தாண்டும் என்கிறார்கள். சரியான கணக்கு வேண்டுவோர் அவர்களின் இணையத் தளத்தைப் பார்க்கலாம். கருத்தரங்கங்களின் பளபளப்பைப் பணக்காரக் கட்சியான காங்கிரசின் கூட்டத்தில் கூடப் பார்க்க முடியாது.

எழுதி வைத்த கருத்தாடல்களைச் சொல்லாடல்களாக மாற்றும் சொல்வித்தகர்கள் வந்தார்கள்; வகைக்கொன்றாய் வென்றார்களா என்ற கேள்வி ஈண்டு பொருத்தமன்று. ஈழத்துப் பிரபலத்துக்காக சேரன், சிவத்தம்பி, நுஃமான்; இந்தியப் பிரபலத்துக்காக அடூர் கோபாலகிருஷ்ணன், மாலன், சுஜாதா, சிவசங்கரி; மார்க்சியப் புலம்பலுக்காக எஸ்.வி. இராஜதுரை, இராசேந்திர சோழன், செயப்பிரகாசம், த.மு.எ.ச. கதிரேசன்; இலக்கியப் பிரபலத்துக்காக சுந்தர ராமசாமி, பிரபஞ்சன், அசோக மித்திரன்; தலித் கவரேஜுக்காக ராஜ் கௌதமன், உஞ்சை ராசன், பாமா; பெண்ணிய கணக்குக் காட்ட அம்பை, மங்கை, வ.கீதா, ஔவை; நவீனத்துவ - பின் நவீனத்துவ மிரட்டலுக்காக, பூரணச் சந்திரன், ஜீ.எஸ்.ஆர். கிருஷ்ணன், பிரேம், தருமராஜ் போன்றோரும், இன்னும் சிறு பத்திரிகை குழாமைச் சேர்ந்த பல்வேறு பிரம்மாக்கள் நாடகம், கவிதை, விமர்சனம், சிறுகதை, நாவல் என ஒன்றுவிடாமல் பரிபூர்ண இலக்கியக் கச்சேரியை வாசித்துத் தள்ளினர். மொத்தத்தில் கச்சேரி அபஸ்வரமாகக் கேட்டாலும் இலக்கிய நியாயப்படி அது ஒரு குற்றமல்ல.

'இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்த தமிழ்க் கூட்டுக் குடும்ப மனிதர்கள் தம் வாழ்நாளில் 100 வார்த்தைகளைத் தாண்டிப் பேசியதில்லை' என தனது கட்டுரையில் பிரபஞ்சன் சொன்னதைப் போல - இங்கேயும் ஏற்கனவே சொல்லப்பட்ட, எழுதப்பட்ட, விமரிசிக்கப்பட்ட ஒரு 100 வார்த்தைகள் பல்வேறு ராகங்களில் உரு, இடம், வெளி மாறி சற்றே அலுப்புடன் ஓதப்பட்டன.

சூழல், அழகியல், நெருக்கடி, மயக்கம், படைப்பாளி சுதந்திரம், இலக்கியக்களம், இலக்கிய சாதனை, அரசியல், உரைநடை, செய்யுள் நயம், அறிவுலகத் தரம், பண்டித நடை, அங்கதம், மீறல், பதட்டம், குதூகலம், பரீட்சார்த்தப் பார்வை, பார்க்கத் தவறிய தருணங்கள், வாழ்க்கை, தத்துவம், பாலியல், ஆச்சாரம், சீர்திருத்தம், கருவி, அக்கறை, பிரபலம், தரம், ஆழம், சிகரம், புனைகதை, வருமானம், வணிக எழுத்து, உழைப்பு, ரசனை, முனைவு, வடிவம், உள்ளடக்கம், அடையாளம், பீடம், அறிவொளி மரபு, ஆரோக்கிய விவாதம், வரையறுப்பு, மார்க்சியம், சோசலிச எதார்த்தவாதம், நவீனத்துவம், பின் நவீனத்துவம், அமைப்பியல், பின் அமைப்பியல், யதார்த்தம், யதார்த்தவியல், புனைவு, பிரதி, பனுவல், ஆசிரியன் இறந்து விட்டான், குறியீடு, மொழியாக்கம், படிமம், உத்தி, தலித் இலக்கியம், தலித் உணர்வு, பெண்ணியம், தலித் பெண்ணியம் என்பதான வார்த்தைகள் குடுவையில் குலுக்கப்பட்டு வெவ்வேறு கண சேர்க்கைகளுடன் கோர்க்கப்பட்டு ரசாயன மாற்றம் பெற்று இலக்கியச் சங்கதி என்ற தத்துவ முத்துக்களாகக் கொட்டப்பட்டன. எடுக்கவா, கோர்க்கவா என்ற மகாபாரத மயக்கம் நமக்கும்.

கருத்தரங்கில் கலந்து கொள்ளாதது ஏன் என்ற வரலாற்று விளக்கத்தைச் சிறு பிரசுரமொன்றில் வெளியிட்டு எதிர்ப்பைப் பதிவு செய்தார்கள், நிறப்பிரிகை கோஷ்டியார். கும்பமேளாவின் முதல் மரியாதையில் எங்களுக்குப் பங்கில்லையா என்ற ஆதங்கமே எதிர்ப்பின் செய்தி. தமிழின் சிறுபத்திரிகை பீடத்தின் தாதா யார்



படிப்பகம்

www.padippakam.com

என்ற பந்தயத்தில் நிறப்பிரிகை தோற்று காலச்சுவடு வெற்றி பெற்று வருவது செய்தியின் பின்னணிச் செய்தி. மற்றபடி இரு வரும் புரவலர்களினால் இயக்கப்பட்டும், கருத்தளவில் ஏகாதிபத் தியத் தொண்டூழியமும் செய்து வருபவர்கள்தான். ஒன்றுபட்ட கருத்துடையவர்கள் நாற்காலிக்காகச் சண்டை போடுவது இலக்கிய அழகல்ல; தர்மமும் அல்ல. வேண்டுமானால் பா.ம.க. ராமதாஸின் யோசனைப்படி 6 மாதத்துக்கொரு தடவை சுழல் முறையில் பீடம் ஏற்கலாம்.

முதல் கூட்டத்தில் 400 பேர்களாக இருந்த தலைகள் பின்னர் 100, 50 ஆகச் சிறுத்துப் போனது. மேடையில் 'விட்டு விடுதலை யாகி நிற்பாய்' என்ற பாரதியின் வரிகள் வெளியேறிய தலைக ளுக்குப் பொருத்தமாய்ப் பளீரென மின்னியது. உள்ளே இருந்த வர்களும் மேடைப் பேச்சிலிருந்து விட்டு விடுதலையாகி தங்க ளுக்குள்ளேயே கதைத்துக் கொண்டார்கள். கணிசமான காசு ஈழத் தமிழர்களிடமிருந்து வந்திருந்தபடியால் இலக்கியத்தை ஈழம், தமி ழகம் என இரண்டாகப் பிளந்து இரு அரங்குகளில் நடத்தினார்கள். பொதுவில் ஈழத்து இலக்கியத்தை தமிழக இலக்கியம் அங்கீகரிப் பதில்லை என்று பேசியவர்களின் குற்றச்சாட்டு இங்கேயும் மெய்ப்பிக்கப்பட்டது. பேசியவர்களும் புலம் பெயர் இலக்கியம் உருவாக்கப்பட்ட அவஸ்தைகளைப் பேசினார்களே ஒழிய புலம் பெயர வழியேதுமில்லாதவர்களைப் பற்றி மறந்தும் கதைக்கவில்லை. தீவிரமான நாட்டுப் போராட்டத்திற்கும், தீவிரமான இலக்கியத்திற்கும் ஒட்டுறவு வேண்டிய தில்லை போலும்.

> 'என் காரக்டரைப் புரிஞ் சுக்கவே மாட்டீங்களா' என்ற அந்த புகழ் பெற்ற ஒற்றை வாக்கியமே ஒரு எழுபதாண்டு காலம் தமிழ்நாட்டுச் சிறுபத்திரி கைகளில் வெளிப்படும் திமிரான அற்பமான வாழ்க்கைத் தேடலாகும்.

குமுதமும் ரஜினியும் இலங்கையில் இறக்குமதியாவது ஒரு பிரச்சினையல்ல. மட்டக்களப்பிலும் திரிகோண மலையிலும் காலச்சுவடு வாசகர்வட்டமும் பாரிஸில் நிறப்பிரிகை வாசகர் வட்டமும் நடப்பது குறித்த செய்திகளே கவலைப்படத்தக் கவை. ஈழப் போராட்டத்தை உறவாடிக் கெடுத்தது இந்திய அரசு; ஈழத்து இலக்கிய வாதிகளைக் கருத்தாடிக் கெடுத்துவிட்டன தமிழ்ச் சிறுபத்திரிகை கோஷ்டிகள். ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டம், அதன் இலக்கியத் தரத்தை வைத்து முன்னேறுவதில்லை என்ற வகையில் ஈழத்து மக்கள் ஆறுதலடையலாம்.

நிகழ்ச்சியின் கவர்ச்சிப் பிரபலமாய் மூன்று நாட்களும் தம்பதி சகிதமாய் வந்து போன கலைஞர் மகள் கனிமொழியையும் இங்கே பதிவு செய்ய வேண்டியிருக்கிறது. பந்தா ஏதுமின்றி சாதரணராய் வந்தமர்ந்த அம்மையாரின் அருகில் அமரவும், அறிமுகம் பெறவும், படைப்புகளைக் கொடுக்கவும், கையெழுத்து வாங்கவும் ஒரு கூட்டம் சப்தமின்றி அலைந்து கொண்டிருந்தது. அடேய் உடன்பிறப்பே, கழக மாநாட்டிற்கு 10 ரூபாய் நுழைவுக் கட்டணம் கொடுத்து, பல பத்தடி தூரத்தில் நின்று தலைவரின் குடும்பத்தி னரைப் பார்த்து அதோ அவங்கதான் கனிமொழியம்மா என்று பூரிப்பாயே, அந்த அம்மா இங்கே இலக்கியக் கூட்டத்தினரோடு பாச நேசத்தோடு பழகியதைப் பார்த்திருக்க வேண்டும் — இது தாண்டா வர்க்க பாசம்!

கருத்தரங்கிற்காகத் தயாரிக்கப்பட்ட கட்டுரைகளை இணை யத்தில் படித்ததாகவும், எதுவும் ஆழமாக இல்லாமல் மேலோட்ட மாக இருந்தது எனவும், இதற்கு இவ்வளவு செலவு செய்ய வேண்டுமா என்றும் கேள்வி எழுப்பிய பத்திரிகையாளர் ஞாநி, இருப்பினும் இலக்கிய நண்பர்கள் அனைவரையும் இத்திருவி ழாவில் சந்திக்கவாவது முடியுமே என நண்பர்கள் கூறியதைய டுத்துச் சமாதானமடைந்தாராம். ஆயினும் 'க்ஷேமமாய் இருக் கேளா' என்று நலமறியும் வைபவத்திற்கு 40 லட்சம் செல வென்றால், வளர்ப்பு மகனுக்குத் திருமணம் நடத்திய போயஸ் ராணிகள் இவர்களிடம் பிச்சை எடுக்க வேண்டும்.

உலகமயமாக்கத்தின் யுகத்தில் இலக்கியமும் இங்கே வணிக நேர்த்தியுடன் விற்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு முந்தைய நாளில் காலச் சுவடு நிறுவனம் தனது 8 நூல்களை அறிமுகப்படுத்தி, தள்ளுபடி போக 800 ரூபாய்க்கு விற்றது. அன்று ஒரு லட்சமும், பின்பு ஓரிரு லட்சமும் விற்றிருக்கக் கூடும். இனி வரும் நாட்களில் கருத்தரங்கக் கட்டுரைகளைப் பல பத்து நூல்களாக விற்பார்கள். சிறு பத்திரிகைக் கும்பலின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் காலச்சுவடு, தனது இலக்கியச் சரக்கிற்கு ஒரு உலகத் தமிழ்ச் சந்தையை ஏற்படுத்திக் கொண்டது இந்நிகழ்ச்சியின் முக்கியப் பொருளாதார ஆதாயமாகும்.

ஒலிம்பிக்கில் வெல்வது முக்கியமல்ல, கலந்து கொள்வதே பெருமையாகும் என்பதற்கேற்ப, நிகழ்ச்சிக் கட்டுரையாளர்கள் பெருமிதத்தோடு உலவினார்கள். பல பக்கக் கட்டுரைகளை 15 நிமி டத்தில் தரவேண்டிய அவஸ்தை இருந்தாலும், அவர்கள் சொல்ல வந்த கட்டுரைச் செய்திக்கு இந்நேரம் அதிகமே. கல்யாண விருந்தின் வெற்றிலை அரட்டைகள் ஆக்கிரமித்திருந்த அரங் கத்தில் கட்டுரை தொடர்பான கவனமோ, விவாதமோ துளியு மில்லை. சிறு பத்திரிகைகளின் எழுத்தில் உக்கிரப்படும் வீறாப்புக் குழாயடிச் சண்டைகளின் அறிகுறியைக் கூட இங்கே காணமுடியவில்லை. வீட்டில் புலியும், வெளியில் எலியுமாக இருப்பார்கள் போலும்.

'என் காரக்டரைப் புரிஞ்சுக்கவே மாட்டீங்களா' என்ற அந்த புகழ் பெற்ற ஒற்றை வாக்கியமே ஒரு எழுபதாண்டு காலம் தமிழ்நாட்டுச் சிறுபத்திரிகைகளில் வெளிப்படும் திமிரான அற்பமான வாழ்க்கைத் தேடலாகும். ஈழத்துடன் முற்றிலும், விருப்பத்துடனும் துண்டித்துக் கொண்டு ஐரோப்பாவிற்குப் புலம் பெயர்ந்த ஈழ இலக்கியவாதிகளும், தமிழ் வாழ்க்கையிலிருந்து சிந்தனை ரீதியாகத் துண்டித்துக் கொண்டு அற்பவாத மனவெளிக்குப் புலம் பெயர்ந்த தமிழ்நாட்டுச் சிறுபத்திரிக்கைக்காரர்களும், எதன் பொருட்டு இலக் கியத்தினால் உயிர் வாழ்கிறார்கள்?

எங்கேயும் புலம் பெயர முடியாத ஒரு சராசரித் தமிழனின் வாழ்க்கையும் இருப்பும், மாற்றமும், போராட்டமும் இவை ஒன்றோடொன்று சேர்ந்தும் பிரிந்தும் வளர்ந்தும் வருகின்ற அந்தச் சமூகப் பெருவெளியைக் கடுகளவு கூட அறியாத, அறிய முடியாத இந்த ஒட்டுண்ணிக் கும்பலிடமிருந்து பிறப்பதெல்லாம் இலக் கியம் என்ற பெயரில் உரிக்கப்படும் வெங்காயங்களே.

வங்கிப் பணியோ, ஆசிரிய உத்தியோகமா, ஃபோர்டு பவுண் டேசனின் பிச்சை ஆய்வோ, வியாபாரமோ எதுவாக இருந்தாலும் நிறைவாகச் செய்து கொண்டு, தன்னிடமும், தனது குடும்ப வாழ்க்கையிலும், தனது சூழ்நிலையிலும் ஆயிரம் பிற்போக்குத் தனங்களையும் இயல்பாகவே வைத்திருக்கும் இந்தச் சமூக விரோதக் கூட்டம், வாழ்க்கை குறித்துத் தேடுகிறேன் என்று பன்றியைப் போல சிலிர்த்துக் கொண்டு உறுமுவது - ஆபாசத்தின் உச்சம். சென்னைக் கடற்கரையில் அண்ணாதுரை நடத்திய உலகத் தமிழ் மாநாட்டில் 4 கக்கூஸ்களாவது கிடைத்தது என்றான் ஒரு கவிஞன். சிறுபத்திரிகைக் கும்பல்கள் நடத்திய இந்தக் கூட்டத்தில் வீசப்பட்ட சில ஆயிரம் பிளாஸ்டிக் குவளைகளால் சுற்றுப்புறச் சூழல் கெட்டுப் போனதுதான் மிச்சம்.

— சாத்தன்

www.padippakam.com



சிறுகதை: ● சிவசுப்ரமணிய ஜெயசேகர்

# வரிசை

''தம்பி! தம்பி!''

அது அரசு மருத்துவமனையின் வேலைப்பளு மிகுந்த காலை நேரம். எனவே முதுகிற்குப் பின் இருந்து வந்த அந்தக் குரல் எனக்கு சற்று எரிச்சலை ஏற்ப டுத்தியது. நான் அந்தக் குரலுக்குச் செவி சாய்க்காததால் மீண்டும் மீண்டும் அழைப் பது கேட்டது.

''ஏன் ஐயா பின்னாடி போய் நின்னு கிட்டு கூப்பிடுறீங்க அங்க போய் வரிசயில நில்லுங்க'' என்று பணியாளர் அதட்டியது கேட்டது.

''இல்லம்மா தம்பியப் பார்க்கணும்.''

''என்ன தம்பி தம்பிங்கிறீங்க, அவரு என்ன உங்களுக்கு தம்பியா? சார்ன்னு சொல்லுங்க இல்லன்னா ஐயான்னு சொல்லுங்க'' பணியாளரின் எரிச்சல் என்னுடைய எரிச்சலைக் குறைத்தது. எனக்கு இப்போது எரிச்சல் குறைந்தது. நாற்காலியை விட்டு எழுந்து திரும் பினேன். என்னை நேருக்கு நேர் பார்த்ததும் கலங்கிய கண்களுடன் தாவுத் சுல்தான் தாத்தா இருகைகளையும் கூப்பினார்.

''என்ன தாத்தா! என்ன விஷயம்?'' என்றவாறு அவர் கைகளைப் பிரித்து கீழி றக்கினேன். பார்க்கின்சன் நோயினால் ஆடிக் கொண்டிருந்த அவரது கைகள் என் கைகளை இறுக்கப் பற்றிக் கொண்டன.

''தம்பி நேத்து ராத்திரியிலேயிருந்து பாட்டிக்கு ரொம்ப முடியலப்பா. ஒரு கையும் காலும் இழுத்துக்கிட்ட மாதிரி இருக்கு. நான் என்ன செய்யப்போறேன்னு தெரியல. எப்படியாவது ஆஸ்பத்திரி முடிஞ்சதும் கொஞ்சம் வீட்டுக்கு வந்துட்டுப் போப்பா. பாட்டியை நீதான் பாத்துக்கணும். எங்களுக்கு உங்கள விட்டா வேற யாரு இருக்கா!''

அவர் பேசிக் கொண்டே போனார். அவர் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. நான் என் கைகளை விடுவித்துக் கொண்டதும் நடுங்கும் கரங்களால் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டார். பாட்டியின் நிலையைக் கேள்விப்பட் டாலும் ஒருவித சிரிப்புடன் அங்கிருந்து நகர்ந்தார் மருத்துவப் பணியாளர்.

ஒவ்வொரு தடவையும் மருத்துவ மனைக்கு வரும்போதும் பாட்டிக்கும் அவ ருக்கும் தகராறுதான், ''நான் என் பேராண் டியப் பார்க்கணும்'' என வரிசையை உடைப்பார் அவர். ''பேரனாம்ல, பேரன்! அவரும் இவங்கள மாதிரி துப்பட்டி போட்டுகிட்டு மூடிக்கிட்டா இருக்காரு'' என்று தனது எரிச்சலை அடக்கிக் கொண்டு கூறினார் இவர். எனக்கு தாவுத் சுல்தான் தாத்தாவைப் பார்க்கும் போது பரிதாபமாக இருந்தது.

தாத்தாவிற்கும் பாட்டிக்கும் அறுபது வயதிற்கு மேல் இருக்கும். இருவரும் குழந்தைப் பேறற்ற அன்னியோன்ய தம்ப திகள். அவர் இசுலாமிய மதத்தைச் சார்ந்த வராக இருந்தாலும் எனது மனைவியின் தாத்தாவுடன் கூட்டாளியாக இருந்தவராம். கல்யாணமான புதிதில் எனக்கு தஞ்சையின் இசுலாமியப் பண்பாட்டுக் கதைகளைக் கூறியவர்கள் இவர்கள்தான்.

எங்கள் ஏனங்குடி காவேரியின் கழி முகப் பகுதியில் வளமுற்றிருந்தாலும், ஏரா ளமாகக் குளங்களும், குட்டைகளும் உடை


படிப்பகம்

www.padippakam.com

யது. ஆற்றுப் பாசனப் பகுதியில் இவ்வளவு குளங்கள் நிரம்பியிருப்பது எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. ஒரு வேளை அந்தக் காலத்து குடிநீர்த் தேவைக்காக அந்தக் குளங்கள் அமைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இன்று பெரும்பாலான குளங்கள் பராமரிப்பின்றி குட்டைகளாக மேடிட்டிருந்தன. குட்டைகள் மூடப்பட்டு வசிப்பிடங்களாகியிருந்தது. வசிப்பிட நிலத்தேவையும் வெளிநாட்டுப் பணமும் குளங்களின் ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தின.

அந்தக் காலத்தில் அக்கிராம மக்களின் மீன் உணவுத் தேவைக்கு இக்குளங்கள்தான் 'மீன்களை' அள்ளிக் கொடுத்திருக்க வேண்டும். தாவுத் தாத்தா பெரும்பாலான குளங்களை குத்தகைக்கு எடுத்து மீன் பிடித்து விற்பனை செய்யும் தொழில் செய்து வந்தவராம். நாடும் நகரமும் வளர வளர நல்ல நிலைமையில் இருந்து வந்த தொழில் மெல்ல மெல்ல மந்தமடைந்தது. பல்வேறு சமூக பொருளாதாரக் காரணங்கள் இந்தக் கிராமத்து மீன்பிடித் தொழில் வீழ்ச்சிக்குக் காரணமாயின. தாவுத் சுல்தான் தாத்தாவின் வலையும் வேலையின்றி வெறும் ஞாபகார்த்தச் சின்னமாக அவரது வீட்டில் தொங்க ஆரம்பித்தது.

கைக்காசு கரைய, முதுமை வளர, நோயும் மெல்ல அவரைப் பிடித்துக் கொண்டது. பார்க்கின்சன் நோயால் அவதிப்பட்ட அவருக்கு கைகளில் நிரந்தர நடுக்கம் குடி கொண்டது. துரதிருஷ்டவசமாக அந்தத் தம்பதியினருக்கு குழந்தைகளும் இல்லை. ஒண்டிக் கொள்ள ஒரு குடிசை மட்டுமே இருந்தது. வறுமை மட்டுமே அந்தக் குடிசையில் வசதியாக வாழக் கற்றுக் கொண்டது. அவ்வப்போது தேவைகளுக்குப் பழகின நண்பர்களிடமும், உறவினர்களிடமும் உதவி பெற்று வாழ்க்கைச் சக்கரம் ஓடிக் கொண்டிருந்தது.

இடையில் ஏற்பட்ட எனது தொடர்பு, மெல்ல அவர்களுக்கு ஒரு பிடிப்பான உறவாக மாறியிருந்தது. வயதான அவர்களுக்கு உடல்நிலை அடிக்கடி சீர்கெட்டுப் போகும் போதெல்லாம் பதறிக் கொண்டு என்னை நாடுவர். நானும் என்னால் இயன்ற மருத்துவ உதவியைச் செய்வதுண்டு. அந்த உதவி தான் இன்று அவரை என்முன் கை கூப்பி நிற்க வைத்துள்ளது.

"பாட்டிக்கு என்ன தாத்தா? நல்லாத்தானே இருந்தாங்க?"

"நல்லாத்தான் இருந்துச்சு தம்பி! ரெண்டு நா சும்மா லேசா காய்ச்சல் மாதிரி இருந்துச்சு, முடங்கியே கெடந்தா, நாந்தான் அவளுக்கு கஞ்சி வைச்சுக் குடுத்தேன்; இன்னிக்கு காலைலிருந்துதான் கை, கால் இழுத்துகிச்சு. நினைவும் தப்பி, தப்பிப் போயிருது" அதற்குமேல் அவரால் பேச இயலவில்லை.

"சரி தாத்தா நீங்க வீட்டுக்குப் போங்க, பாட்டி அங்க தனியா கிடக்கும். நா ஆஸ்பத்திரி வேலைய முடிச்சிட்டு உடனேயே வர்றேன்; நீங்க போங்க" என்றேன். மீண்டும் மீண்டும் கை கூப்பிய வாறு திரும்பிதிரும்பிப் பார்த்தவாறு மருத்துவமனை வாயிலைக் கடந்தார் அவர்.

ஊர் எல்லையில் மூங்கில் புதர்கள் நிறைந்த ஆற்றங்கரையில் இருந்தது அந்தக் குடிசை. வாசலில் ஆள் அரவம் கேட்டதும் என்னை வரவேற்க எழுந்தார் தாத்தா.

"தம்பி மொள்ள மொள்ள நல்லா குனிஞ்சு வாங்க!" உள்ளே பகல் வேளையிலும் நல்ல இருளின் ஆட்சி. கசங்கிய குப்பை போல கிழிந்த பாயில் கிடந்தாள் பாட்டி.

> "நீங்க போங்க சார், அவங்களுக்கெல்லாம் போய் இரக்கப்பட்டுகிட்டு. கணேசன் மருந்துக்கெல்லாம் பணம் போட்டுக் குடுத்ததும் வாங்கிப் பாத்தாரு. ஓ! இவ்வளவு வருதா, இத வச்சிகிட்டு பத்து நாளைக்கு அரிசி, உப்பு, புளி, மொளகா வாங்கிரலாம்னு கணக்குப் போட்டிருப்பாரு.

"சபிதா! சபிதா!! இங்க யார் வந்துருக்காங்கன்னு பாரு உன் பேரன் உன் பேராண்டி; இனிமே உனக்கு ஒண்ணும் ஆகாது. நல்லாயிடும்" என்றவாறு அரை குறை நினைவுடன் இருந்த பாட்டியின் கன்னத்தில் தட்டி எழுப்பினார் தாத்தா. பாட்டி அரையும் குறையுமாக கண்ணைத் திறந்தார். உடன் தாத்தாவின் முகத்தில் சிரிப்பு மலர்ந்தது.

"பாத்தியா பாத்தியா" என்றவாறு மண்ணெண்ணெய் விளக்கை என் முகத்தருகே கொண்டு வந்தார். பாட்டிக்கும் ஏதோ புரிந்திருக்க வேண்டும். நான் கைகளைத் தொட்டதும் என் கைகளை இறுகப் பற்றிக் கொண்டார். அறைக்குள் லேசான புழுங்கல் வாடையும், துடைத்துச் சுத்தம் செய்யப்படாத சிறுநீர் வாடையும் அடித்தது. டார்ச் விளக்கின் உதவியுடன் மெல்ல பரிசோதனைகளை முடித்தேன். பிறகு அறையைவிட்டு வெளியே வந்தேன்.

மனது மிகவும் பாரமாக இருந்தது. மூங்கில் மரங்கள் காற்றில் ஒன்றுடன் ஒன்று உரசி சப்தம் எழுப்பிக் கொண்டிருந்தன. எனக்குப் பின்னாலேயே வந்த தாத்தா "என்ன செய்யலாம் தம்பி" என்றார். எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. "பேசாம காரைக்கால்லயாவது, நாகப்பட்டினம், திருவாரூர்லயாவது பெரிய ஆஸ்பத்திரியில பாட்டிய சேர்த்திடலாம் தாத்தா, நா ஒரு லெட்டர் எழுதித் தர்றேன்" என்றேன்.

"தம்பி எனக்குன்னு யாரு இருக்கா துணைக்கு, யோசிச்சுப் பாருங்க; ஒண்டியா நா எங்க கொண்டுகிட்டு போய் அலைவேன்; அங்கேயும் பொம்பளைங்க வார்டுல என்ன இருக்க வுடுவாங்களா? தொடச்சி, பெருக்க எடுக்க யார் வருவாங்க, இதயல்லாம் மீறி கை துட்டு வேண்டாங்களா?"

அவருடைய கேள்விகளின் யதார்த்தமும், உண்மையும் மனதைக் குடைந்தன. "இங்கவைத்தியம்னாலும் கொஞ்சம் செலவாகுமே தாத்தா" 'நீங்க எதுக்கும் கொஞ்சம் நேரம் கழிச்சு வாங்க, நான் மருந்தெல்லாம் எழுதி தர்றேன்; போட்டுப் பார்க்கலாம்."

ஏதோ காரணங்களால் தாத்தா மாலை வரை யோசித்திருக்க வேண்டும். யாரிடமாவது செலவிற்குப் பணம் கேட்டுப் பாத்திருக்க வேண்டும். கிடைத்ததை எடுத்துக் கொண்டு மாலையில் தயங்கித் தயங்கி எனது மருத்துவ ஆலோசனை அறை முன்பு காத்திருக்க வேண்டும்.

"சார் ஒரு தாத்தா வந்து உங்கள பார்க்கணும்னு தொந்தரவு பண்றார் சார்" வாசலில் நின்றிருக்கும் கலைச் செல்வி என்னிடம் குறைபட்டுக் கொண்டு போனாள்.

நான் அதற்குள் தாத்தாவை மறந்திருந்தேன். அருகிலிருந்த எனது உதவியாளர் ராஜசேகரிடம் "யார் ராஜசேகர் அது!" என்றேன். "தெரியாதா சார் அந்த மீன்காரத் தாத்தா தாவுத் சுலைமான் சார். அவ்ரெல்லாம் உங்ககிட்ட ரொம்ப அட்வாண்டேஜ் எடுத்துக்கிறாங்க; நீங்க இவங்களையெல்லாம் 'கட்' பண்ணிடனும்."

வறுமைச் சூழலில் படித்து முன்னேறிய ஒருவரின் பேச்சில் காணப்பட்ட வர்க்கச் சார்பினை நினைக்க எனக்கு வருத்தமாக இருந்தது. அதற்குள் கதவைத் திறந்து கொண்டு தாத்தா உள்ளே நுழைந்தார். அவரைப் பார்த்ததும் "நா மருந்துக்


படிப்பகம்

www.padippakam.com

கடைக்குப் போறேன் சார்'' என்றவாறு நகர்ந்தார் ராஜசேகர்.

"என்ன தாத்தா ஏன் இவ்வளோ நேரம்"?

"இல்ல தம்பி கொஞ்சம் பணம் பொரட்டிகிட்டு வரலாம்னு...'' தடுமாறினார் தாத்தா.

"பாட்டிக்கு மூளைல ரத்தக் குழாய்ல அடைப்போ, கசிவோ இருக்கு. எதுன்னு தெரிஞ்சு வைத்தியம் பண்ணணும்னா தலைக்கு ஸ்கேன் எடுத்து பார்க்கணும். அது இங்க முடியாது. ஏதோ நம்மால முடிஞ்சத பண்ணனும்னாலும் மருந்து நிறைய வாங்கணும். எழுதித் தர்றேன் போய் வாங்கிட்டு வாங்க."

"வாங்கிட்டு வாறேன் தம்பி. நம்ப கடக்கார ராவுத்தர் கிட்ட கேட்டு ஒரு நூறு ருபா வாங்கிட்டு வந்திருக்கேன் தம்பி'' என்றார் தன்னம்பிக்கையுடன்.

"நூறு ருபாயா என்ன தாத்தா இது. ஒரு மாண்டால் ஊசி மட்டுமே இருநூறு ருபா இருக்குமே இப்ப என்ன பண்றது?"

"இந்தக் கிழத்த நம்பி வேற யார் தம்பி பணம் கொடுப்பாங்க. கை, கால் கெதியா இருந்திச்சுன்னா அங்க இங்க ஓடி கடன வாங்கி பின்னால் ஏதாச்சும் செஞ்சு கடன அடிச்சிடலாம்'' அதற்குள் கலை கதவை திறந்து தலையை நீட்டி "சார் நிறைய பேஷன்ட்ஸ் இருக்காங்க. எல்லாம் ரொம்ப நேரமாகுதுன்னு முணுமுணுக்கிறாங்க சார்."

"சரி! எதுக்கும் நான் எழுதிக் கொடுக்குறேன். இதயெல்லாம் வாங்கிட்டு நீங்க எங்கிட்ட சொல்லிவிட்டு வீட்டுக்குப் போங்க தாத்தா. நா ராத்திரி எத்தனை மணியானாலும் வீட்டுக்கு வந்துட்டுப் போறேன்.

தாத்தா நான் எழுதிக் கொடுத்த சீட்டை வாங்கிக் கொண்டு வெளியேறினார். மீண்டும் என் வேலைப்பளு என்னை ஆக்கிரமித்துக் கொண்டது. இரவு பத்தரை மணிக்கு மேல் என் ஆலோசனை அறையை மூடிவிட்டு வெளியே வந்த பிறகு தான் தாத்தாவின் ஞாபகம் வந்தது.

சரவணா மருந்துக் கடையை நோக்கி நடந்தேன். கடையிலிருந்து ராஜசேகரும், கணேசனும் என்னைப் பார்த்ததும் எழுந்து நின்றார்கள். "என்ன சார் வீட்டுக்குப் போலாமா?'' என்றார் ராஜசேகர்.

"இல்லை ராஜசேகர் மீன்கார்த் தாத்தா வந்தாருல்ல அவர்கிட்ட மருந்தெல்லாம் வாங்கிட்டு எங்கிட்ட சொல்லிவிட்டுப் போகச் சொன்னேன்; சொல்லாம போய்விட்டார் போல இருக்கு; மருந்தெல்லாம் வாங்கிட்டுப் போனாருல்ல'' என்றேன்.

"இதோ பாருங்க நீங்க எழுதிக் கொடுத்த சீட்டு''; இது கொண்டாந்து கொடுத்து எவ்வளவு ஆகும்னு கேட்டார்? எவ்வளவு ஆகும்னு கணக்குப் போட்டு 400 ரூபாய் ஆகும்னு சொன்னேன் வாங்கமபோய்ட்டார்'' என்றவாறு சீட்டை என் கையில் கொடுத்தார் கணேசன்.

"ஏன் வாங்காம போய்ட்டார்?"

"அவர் கைல நூறு ருபாதான் சார் இருந்துச்சு. அதனால அப்புறமா பணம் கொணாந்து வாங்கிட்டுப் போறன்னு சொன்னார் சார்'' என்றார் கணேசன்.

"இல்ல கணேசன். குடுத்து அனுப்பியிருக்கலாம்ல; அப்புறமா கூட வந்து பணம் கொடுத்துடுவார்; தாத்தா நமக்கு ரொம்ப தெரிஞ்சவர்தான்'' என்றேன் வருத்தத்துடன்.

> "நல்ல காலம் சார். ரெண்டு பேரும் ஒண்ணா போய்ட்டாங்க. ரெண்டு பேருக்கும் யாரும் கிடையாது. அனாதயா கிடக்குறதுக்கு இது தேவலாம் சார்'' யாரோ இடைமறித்தார்.

என்னுடைய வருத்தம் ராஜசேகருக்கு கோபத்தை மூட்டியிருக்க வேண்டும். "நீங்க போங்க சார், அவங்களுக்கெல்லாம் போய் இரக்கப்பட்டுகிட்டு. கணேசன் மருந்துக்கெல்லாம் பணம் போட்டுக் குடுத்ததும் வாங்கிப் பாத்தாரு. ஓ இவ்வளவு வருதா, இத வச்சிகிட்டு பத்து நாளைக்கு அரிசி, உப்பு, புளி, மொளகா வாங்கிரலாம்னு கணக்குப் போட்டிருப்பாரு. லிஸ்டை கணேசன் கைல குடுத்துட்டு அந்தா அந்த மளிகை கடையில போய் ஏதோ சாமான்லாம் வாங்கிட்டுப் போய்ட்டாரு. பொண்டாட்டியவிட அவருக்கு அதான் முக்கியம். நீங்க போய் கவலப்படுறீங்க. வீட்டுக்குப் போங்க சார்."

ஒருவேளை ராஜசேகர் சொல்வதும் சரியோ? தாத்தா அப்படியும் கணக்குப் போட்டிருக்கக் கூடுமோ? தாத்தா அப்படி கணக்குப் போட்டிருந்தாலும் அதில் தவறு இல்லையோ? அவர் நிலையில் இருந்தால் நானும் அப்படித்தான் செய்திருப்பேனோ? சில விஷயங்களை மறப்பதற்குக் கூட சில சமாதானங்கள் நமக்குத் தேவைப்படுகின்றன.

மறுநாள் காலை வழக்கம்போல் மருத்துவமனைப் பணியில் ஈடுபட்டிருக்கும் போது வழக்கத்துக்கு மாறாக நேரத்தில் பள்ளிவாசல் ஒலிபெருக்கியின் அழைப்பு கேட்டது. ஏதாவது தெரிந்த நபர்களின் மரண அறிவிப்பாக இருக்கலாம் என்பதால் விசாரிக்கச் சொன்னேன்.

"சார் அந்த மீன்காரத் தாத்தாவும் அவுங்க பொண்டாட்டியும் செத்துப் போய்ட்டாங்களாம்.'' எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. "அந்த தாத்தாவோட பொண்டாட்டி மட்டுந்தான்...'' என்றேன் கலவரத்துடன்.

"இல்ல சார் நான் நல்லா கேட்டேன் புருஷன் பொண்டாட்டி ரெண்டு பேரும் செத்துட்டாங்களாம்."

"நல்ல காலம் சார். ரெண்டு பேரும் ஒண்ணா போய்ட்டாங்க. ரெண்டு பேருக்கும் யாரும் கிடையாது. அனாதயா கிடக்குறதுக்கு இது தேவலாம் சார்'' யாரோ இடைமறித்தார்.

இது எப்படிச் சாத்தியம்? மண்டைக்குள் யாரோ ஆணி அடிப்பது மாதிரி வலி ஏற்பட்டது. அலுவலகப் பணி முடிந்து திரும்பும் வழியில் அந்த மளிகைக் கடையைப் பார்த்ததும் வண்டியை நிறுத்தினேன்; கடைக்காரர் நான் வருவதைப் பார்த்ததும் கல்லாவை விட்டு எழுந்து வந்தார்.

"ஒன்னுமில்ல. நேத்து ராத்திரி மீன்காரத் தாத்தா தாவுத் சுல்தான் இல்ல, அவரு உங்க கடைக்கு வந்து என்ன வாங்கிட்டுப் போனாரு?"

"என்ன சார் என்ன ஆச்சு?'' என்றார். இந்த ஊர் பள்ளி வாசலுக்கு இன்னமும் செய்தி வரவில்லை போலும். தாவுத் சுல்தாவின் மரணச் செய்தியை அவர் அறிந்திருக்கவில்லை, "ஒன்னுமில்ல சும்மாதான் கேக்குறேன்'' என்றேன்.

"தம்பி. ஐயா கேக்குறாங்கல்ல நேத்து ராத்திரி நீதான கடையில இருந்த. அந்த மீன்கார தாத்தா என்னடா வாங்கிகிட்டுப் போனாரு?"

"ஓ சுல்தான் தாத்தாவா? வீட்ல ஒரே மூட்டைப் பூச்சி தொந்தரவுன்னு சொல்லிவிட்டு மூட்டைப் பூச்சி மருந்துதான் சார் வாங்கிட்டுப் போனார்."

நான் தளர்ந்து திரும்பினேன்.

●



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

நினைத்தால் அதற்கு அவள் தர வேண்டிய விலை விபரீதமானது.

முதல் வருடம் ஒரு குழந்தையும் அடுத்த ஆண்டு இன்னொரு குழந்தையும் பெற்றுக் கொள்ளும் பெண்கள் எத்தனை பேர்? ஒரு வேளை லேபராஸ்கோபி செய்யாவிட்டால் இது தொடர் கதையும் ஆகலாம்.

''உம் புருசனுக்கு ஒன்னுமில்லம்மா. அவம்பாட்டுக்குப் போயிடுவான். நீதான் கஷ்டப்பட வேண்டும்''—ஒவ்வொரு பிரசவத்திற்குப் பின்பும் அறுவை சிகிச்சைக்கு முன்பும் மருத்துவமனைகளில் பெண்ணுக்குக் கூறப்படும் அறிவுரை இது.

மாத்திரை, காப்பர்-டி, அபார்ஷன் அல்லது லேபராஸ்கோபி — பெண்ணுக்கு, பெரும்பாலான பெண்களுக்கு வேறு வழிகளும் இல்லைதான்.

வருடம் ஒரு குழந்தை பெற்றுக் கொள்ளும் அப்பாவி மனைவிகளின் கணவர்களாகிய மூர்க்கர்களுக்கு இதைப்பற்றி புரிதல் ஏற்படுத்தி ஏதாவது முயற்சி செய்யப்படுகிறதா என்றால் இல்லை.

பற்பசை விளம்பரங்கள் கூட இல்லாமலிருக்கலாம். ஆனால் ஆண்மைக் கோளாறுகளுக்குத் தீர்வு கூறும் விளம்பரங்கள் இல்லாத பத்திரிக்கைகள் கிடையாது. ஆனால் ஒவ்வொரு வயது வந்த ஆணுக்கும் ஆணுறையைப் பற்றிக் கட்டாயம் தெரிந்திருக்கும். ஆனால் அவனுக்கு அது குறித்துச் சொல்லிக் கொடுக்கப்படுவது ''ஆணுறை அணிந்தால் பால்வினை நோய்களில் இருந்து தப்பலாம்'' என்பதுதான்.

ஆணுறை, ஆண் உறவு கொண்டுவிட்டு நோயில்லாமல் தப்பிவர உதவும் ஒரு சாதனம். கர்ப்பத்தைக் குறித்து கவலைப்பட வேண்டியது ஆண் அல்ல, கர்ப்பமுறும் வாய்ப்புள்ள பெண்கள்தான்.

பெண்கள் மட்டுமே வீட்டுக்குப் பொறுப்பு என்றுள்ள இன்றைய நிலையில் குழந்தைகள் அதிகம் பெறுவது அவள் உடல் நலனுக்குக் கேடு மட்டுமல்ல; வெளியுலகோடு தொடர்பற்று குழந்தை வளர்ப்பு என்று அவளை வீட்டோடு கட்டிப் போட்டுவிடுகிறது.

இதில் சோகம் என்னவென்றால் இது தியாகம் என்று கூட ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்பதுதான். குளித்து உடைமாற்றிக் கொள்வது போல கருத்தடை செய்து கொள்வதும் பெண்ணுக்கு இயல்பான ஒன்று என்று அவள் நெற்றியில் எழுதி ஒட்டியாகிவிட்டது.

தன் மேல் பூட்டப்பட்டுள்ள விலங்குகளை அறிந்து கொள்ளும் பெண்கள் அவற்றை எப்படி உடைத்தெறிவது என்பதையும் தெரிந்து கொள்வார்கள். அப்போதுதான் மனைவியாக மட்டுமல்லாமல் உற்ற தோழியாகவும் இருக்கும் வாழ்க்கைத் துணையின் அண்மை தரும் இனிமையை தன்னம்பிக்கையை ஆண் முழுமையாக உணர்ந்து கொள்ள முடியும்.

● **வேள்மதி, கோவை**

## தண்ணீரை விஞ்சும் கனவான்கள்

நகர் நல்வாழ்வுச் சங்கத் தலைவர் கோபத்தின் உச்சியில் இருந்தார்.

''விடியட்டும் மெட்ரோ வாட்டர் டைரக்டருக்கு ஃபாக்ஸ் கொடுக்குறேன் பாரு!''

''இல்லீங்க நேரா நம்ப துணை மேயருக்கு ஒரு டெலக்ஸ் தந்தா, கூப்புட்டு விளாசுனாதான் சரியா வரும்.''

''இப்ப பேசி என்ன பண்றது. போறச்சயே தடுத்திருக்கணும்.''

''வழக்கமா வர்ற டிரைவருக்கு தெரியாதா சார் நிறுத்தணும்னு. கூட இந்த தாதாங்குப்பம் ஆளு வேற இருந்தான்.''

''யாரு?''

''தாதாங்குப்பம் கென்னடி.''

''இருக்கட்டுமே, ரவுடின்னா அதெல்லாம் அவா ஏரியாவுல; நமக்கு வர்ற லாரியை அவன் எப்படி அழைச்சிண்டு போகலாம்? பொறுக்கிப் பயலுக்கு நம்ப வேலையக் காட்ட வேண்டியதுதான். அவன் 'காய்ச்சுற' விசயத்த கமிஷனர் வரைக்கும் ஸ்ட்ராங்கா போட்டு இழுத்து வுட்டாதான் அடங்குவான். சாராயம் விக்கிற பொறுக்கிக்கே இவ்ளோ தந்திரம்னா நமக்கிருக்காதா? நம்ப எல்லோரும் இன்னிக்கு ரோட்லயே நிப்போம். லாரி திரும்பி வர்றப்ப மறிச்சு டிரைவரை ஒரு புடி புடிச்சாதான் புத்தி வரும்.''

தலைவரின் விளக்கத்திற்குச் சிறிது நேரம் கட்டுப்பட்டு இருந்த பெண்கள் கூட்டம் டி.வி.யின் 'சித்தி' அழைக்க கலைய ஆரம்பித்தனர். பின்னாலேயே குடும்பத் தலைவர்களும் மவுன ஊர்வலம் நடத்த ஆரம்பித்தனர்.

எரிச்சலாய் இருந்த தலைவரை இயல்பு நிலைக்குத் திருப்ப, கூட இருந்தவர்களில் ஒருவர் பேச்சு கொடுக்க ஆரம்பித்தார்.

''வெறும் தண்ணின்னு பேசறோம் அது இல்லேன்னா என்னா பாடு பாத்தீங்களா?''

''தண்ணிக்கு இன்னொரு ஸ்பெஷாலிட்டி பார்த்தேளா, டம்ளர்ல ஊத்தினா ரவுண்டா ஆயிடும், அதையே சதுரமான துல ஊத்திப்பாருப்பா சதுரமா தெரியும். வேறு எதுக்கும் இவ்ளோ சடுதியா மாறாது.''

பெரியதொரு தத்துவத்தை உதிர்த்தார் கூட இருந்தவர்.

தலைவரின் பார்வை வேறு பக்கத்திலிருந்தது. ''அதோ வர்றது தாதாங்குப்பம் கென்னடி மாதிரி இல்ல, ஒரு வேளை அவன பத்தி பேசிண்டு இருந்ததை, இங்கிருந்த எவனாவது போய் போட்டு குடுத்துட்டானோ! அவன் வர்ற வேகத்தைப் பாத்தா சாதாரணமா படல.''

''ஆமா சார். வர்றான்... வர்றான்...'' ஒரு பக்கம் அடிக் குரலில் சொன்னபடியே ஒரு ரெடிமேட் புன்னகையை வரவழைத்துக் கொண்டார்.

கென்னடியின் ஹீரோ ஹோண்டா பக்கத்தில் வந்து சரட்டென்று நிற்க ''ஆங்! வாங்க வாங்க நல்லா இருக்கேளா! தலைவரின் நா குழறியது.

எதையும் காதுல வாங்கிக் கொள்ளாத கென்னடி ''சார்! நம்ப ஏரியாவுல ரெண்டு நாளா தண்ணி இல்ல, அதான் இன்னைக்கு மொதல் லாரியை அழைச்சிட்டுப் போயிருட்டேன். உடனே உங்களுக்குக் கொண்டுவரச் சொன்னேன் அந்தப் பயவரலியா?''

''பரவாயில்ல லோகத்துக்கே தண்ணி பிரச்சனைதான'' தலைவர் வழி மறித்தார்.

''தோ வர்றேன்'' என்று ஹீரோ ஹோண்டாவை அலட்சியமாக உதைத்த கென்னடி அரைமணி நேரத்துக்கெல்லாம் தண்ணி லாரியின் முன் வெற்றி வீரனைப் போல வந்தான்.

''நான் சொல்லலை. மாக்கான் போல அவன் சரியான ஆளுய்யா ஒரு நொடியுல காரியத்த முடிச்சிட்டு ராஜா தேசிங்கு மாதிரி வர்றான் பாரு!''

தலைவரின் பேச்சைக் கேட்ட கூட இருந்தவருக்கு ஏதோ ஒரு பெரிய தத்துவத்துக்கு அர்த்தம் விளங்கியது போல ஏதும் பேசாமல் ''ஓ'' என வியந்து நின்றார்.

● **சுடர்விழி**

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42647/87
Reg. No. TN/Chief PMG-303 / 2000
www.padippakam.com

பசுவைப் பாதுகாக்க சங்கரமடத்து நரி
சென்னையில் நடத்திய ஊர்வலம்



# பசுத்தோல் போர்த்திய கேள்விகள்

என்னையும் எப்படி
இந்துவாக்கினர்?

யாரெல்லாம்
இசுலாமியர் இல்லையோ
யாரெல்லாம்
கிறித்தவர் இல்லையோ
என்பதில் தொடங்கி
யாரெல்லாம்
மனிதர்கள் இல்லையோ
என்ற பரிணாமத்தில்
மாட்டிக் கொண்டேனோ நானும்?

எப்படி நானும் இந்துவாய்....

'சூத்திரன்' - என்ற சங்கரமடத்தின்
கழிப்பறை வாக்கியத்தை
பெரும் 'பாக்கியம்' என்று
சுமந்து திரியும் தாமரைக்கனியின்
தோலைப் போல
எனக்குத் தோல் தடிப்பில்லையே!

தமிழ் 'நீச பாஷை' என்று
முகம் சுளிக்கும் சங்கராச்சாரிக்கு
அன்றாடம்
"அம்மா" என்று அழைக்கும்
என்மேல் கரிசனம் வந்ததெப்படி?

நான் சாணிபோடும் ஓசை
சமஸ்கிருதமோ?

எங்கள் குடும்பக் காளைகளை
கசாப்புக்கு அனுப்புவதைக்
கண்டு கொள்ளாமல்
எம் மேல் மட்டும்
பாசம் வந்ததென்ன?

பெண்டாளும் தந்திரம்
மாடுகள் வரையிலுமா!

வேள்விகளில்
உயிரோடு எரிக்கப்பட்ட
எம் மூதாதையர்களின்
வாரிசுகள் நாங்கள்
வழக்காடுகிறோம்...

இந்துவாக இருந்ததில்லை நாங்கள்

வைக்கோல் பொம்மைகளைக்
காட்டும் போதும்
வாஞ்சையுடன் சுரக்கும்
எம் பால்மடி.

வழியும் கண்ணீரையும்
நடுங்கும்
முகங்களையும் கூட விடாது
பசியாறும் இந்து மதவெறி

எப்படி நாங்கள் இந்துவாக முடியும்?

எம் சந்ததிப் பகையே சங்கர மடமே
வேண்டாம் விலகு.
உழைக்காத வகையினம் என்று
என்மேல் உள்ள குற்றச்சாட்டை
உறுதி செய்வதாய் இருக்கிறது
உனது ஒட்டுறவு

எப்படிப் பொருந்தும்?

சுரப்பதே என் பாடு
கறப்பதே உன் பண்பாடு.

பனிக்குடம் உடையும் முன்பே
சீம்பாலுக்குச் செம்பு தேடும்
உன் வக்கிரங்களுக்கு மத்தியில்
வாழ்வதைவிட

கன்றின் கறியைக் காமுற்ற
யாக்ஞவல்கியனின் சந்ததியிடம்
உயிர்ப்பிச்சை பெறுவதைவிட

செத்த பின்பும்
சினை பார்த்து அறுக்கும்
எம் மக்களுக்கு உணவாகவே
எனக்குச் சம்மதம்.

இந்துவாக வாழ்வதைவிட
விலங்காகச் சாவதே
எனக்குச் சம்மதம்.

— துரை. சண்முகம்

அட்டை ஓவியம்: கரோ

படிப்பகம்